
புஸ்தகம் 1.] சௌம்ய ௵ கார்த்திகை ௴ [சஞ்சிகை 3.

# வித்யாவிஹாரிணி








பத்திராதிபர்:

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் எம். ஏ., எல். டி.

## பொருளடக்கம்

1. பிரபஞ்சவர்த்தமானம் ... ... ... ... 81

2. காவியகாண்டம்:—
   1. யூனிவர்ஸிட்டியும் தேசியபாஷைகளும்.—ஏ. ஆர். ராஜராஜவர்மா அவர்கள், எம். ஏ. 88
   2. அருணகிரி சுவாமிகளின் சரித்திர ஆராய்ச்சி.—செல்வராய பிள்ளை அவர்கள், எம். ஏ. 91

3. சாரித்திரகாண்டம்:—
   1. மகாராஜச் சக்ரவர்த்தியவர்களுடைய 1908-ம் ௵த்திய மஹா சாஸனம் 97
   2. விசுவாமித்திர மகாரிஷி ... ... ... ... ... ... 102

4. கலைவகைக்காண்டம்:—
   1. தென்னிந்தியப் பிராணி வர்க்கம்.—பூச்சிப்புலவர் ... ... ... 106
   2. தேசிய ஔஷதங்கள் (தொடர்ச்சி)—எட்டிக்கொட்டை ... ... 111
   3. பரோபகாரம்—புருஷர்களுக்கு ஓர் கடமை.—ஸ்ரீமதி-சிவகாமியம்மாள் ... 113

5. விநோதகாண்டம்:—
   1. மதுரம்.—(நாவல்) எம். ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் ... ... ... 115
   2. வாமதேவன்.—(நாவல்) வீ. ஏ. கோபாலகிருஷ்ணய்யர் ... ... ... 118

6. புஸ்தக விமர்சனம்.— 119

7. சமாசாரக்குறிப்புகள். 120

கணேஷ் கம்பெனி சென்னை

# As Others See Us

## VIDYA VIHARINI

**An illustrated Tamil Monthly edited by C. N. Krishnaswamy Aiyar M.A., L.T.**

**SELECT OPINIONS.**

*The Indian Patriot*.—The Vidya Viharini is sure to become a gord medium for the Education of the tamil public especially of women and Children. We hope the New Monthly will meet with the encouragement which it so richly deserves.

*The Madras Mail*:—Judging from the Standard which the publishers have set before themselves, the Vidya Viharini is likely to prove a good medium for the Education of the Tamil public.

*The Hindu*:—This is a very useful and neatly got up illustrated Tamil Monthly. The Vidya Viharini, we are sure, will become popular.

*The Madras Standard*:—An illustrated journal of this kind with half-tone illustrations is a desideratum and his calculated to promote the best interests of the tamil land.

*The United India*:—The Magazine supplies a real want among the Tamil—speaking people. The articles are written in a vigorous style and there is a freshness and up-to-dateness about them. Even those English knowing Tamilians who look down upon Tamil Journals and books as beneath "dignity" may profitably peruse the new monthly.

*The West Coast Spectator*.—The October number of the *Vidya Viharini*, the high class Tamil monthly, published by Messrs. Ganesh & Co., the enterprising publishers of Madras, is as bright and breezy as ever, and serves as a class of intellectual food rarely served by vernacular magazines. It may not be out of place to note here that among the vernacular magazines we have come across the *Viharini* is the only high class illustrated Tamil monthly.

*Pandit J. S. Masillamony, Madura*:—It is just the kind of magazine that is needed to improve our now neglected language. I was specially attracted to the illustrations and varied nature of the subjects treated therein.

☞ Annual subscription inland Rs 5-0 0: Foreign 6-8-0.

**Ganesh & Co., Publishers, Madras.**

## வித்யா விஹாரிணி

சித்திர சகிதமாய் நடைபெறும் ஓர் மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை

பத்திராதிபர். ஸி. என். கிருஷ்ணசாமி அய்யர் எம். ஏ. எல். டி.

சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்

இந்துசாதனம்.—

வித்யா விஹாரிணி.—இது கோயம்புத்தூர் ஸ்ரீமத்-கிருஷ்ணசாமி ஐயரவர்களால் சென்னையில் பிரசுரிக்கப்படும் ஓர் சிறந்தமாதாந்தப்பத்திரிகை. இதன் முதலாம் இரண்டாம் சஞ்சிகைகள் உயர்ந்த காகிதத்தில் சித்திரவிளக்கங்களோடு அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சஞ்சிகையும் 40-பக்கங்கள் கொண்டன. இதில் சொற்சுவை பொருட்சுவை பொருந்திய அநேக விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

சுதேசமித்திரன்.—

தமிழ்ப் பாஷை விருத்திபடைவதற்கும், தமிழ் மக்கள் நலம் பெறுவதற்கும் இப்பத்திரிகை ஓர்சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ்வொருவர் கையிலும் இந்தப் பத்திரிகை இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்.

லோகோபகாரி.—

இது ஒரு சிறந்த தமிழ்ப்பத்திரிகையென்பதில்லையமில்லை. நம்மவர் ஒவ்வொருவரும் பார்க்கத் தகுந்ததே.

லோகானுகூலன்.—

இதில், அநேகவிஷயங்கள் அடங்கியுள்ளன. விஷயங்களும் மிக்க அரியபெரிய விஷயங்களாகவே யிருக்கின்றன. இம்மாதிரி திருவுருவப் படங்களுடன் தமிழ்ப்பத்திரிகை இக்காலத்திற்றான் நடந்து வருகின்றதெனச் சொல்லலாம்.


நாகைநிலலோசனி.—

"விளையும் பயிர முளையிலே தெரியும்" என்றபடி யிதன் முதற்சஞ்சிகையாலேயே உலகத்துக்குப் பெரும்பயன் விளைக்கும் என்பது நன்கு தெரிகிறது.

திராவிடாபிமானி.—

இதில் பலவரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. அநேக கல்விமான்களால் எழுதப்பட்டுள்ள அரிய வியாஸங்கள் காணப்படுகின்றன. தமிழ் பாஷை விருத்தியடைவதற்கு இப்பத்திரிகை ஓர் சிறந்த சாதனமாகும்.

கணேஷ் கம்பெனி, சென்னை.



லார்ட் மார்லி
இந்தியாவின் காரியதரிசியவர்கள்



லார்ட் மிண்டோ
இந்தியாவின் ராஜப் பிரதிநிதியவர்கள்

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள், முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

| புஸ்தகம் I. Vol I. | சௌம்ய௵ கார்த்திகைமாதம் November 1909 | சஞ்சிகை 3 No. 3 |
| --- | --- | --- |

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்,
வழுவல, கால வகையினானே."

மஹாசாஸனத்திரயம்

இந்த நெம்பரில் காணும் (சென்ற நவம்பர் ஸ்ரீ'த்திய) மஹாசாஸனத்துடன், நாம் மொழிபெயர்க்க உத்தேசித்த மஹாசாஸனங்கள் மூன்றும் முற்றுப்பெறுகின்றன. இவைகளை யிச்சஞ்சிகையாரம்பத்திலேயே எடுத்து, விடாமல் மூன்று நெம்பர்களிலும் பிரசுரித்து வந்ததற்குக் காரணம் முதல் நெம்பர் வர்த்தமானத்திலேயே சொன்னோமாதலால், மறுபடி விஸ்தரிப்பது அனாவசியம்.

ஏதேனும் ஒரு லோஹத்துண்டு நம்மிடம் கிடைத்து, இது தங்கமா, பித்தளையாவென்று சந்தேகமுண்டானால், பொற்கொல்லரிடஞ் சென்று உரைகல்லில் தேய்த்துப் பார்க்கிறோம். உடனே யது தவலை மாற்றென்றும், அல்லது அதிகமென்றும் தெரிந்துவிடுகிறது. அது போலவே வேறு விஷயங்களிலும், ராஜநீதி வழுவாமல் நடக்கவேண்டுமானால் அதற்கும் உரைகல்லொன்று வேண்டும். அதன் மூலமாய்ச் சர்க்காராவது, பிரஜைகளாவது செய்யுங் காரியங்களுடைய நியாயாந்நியாயங்கள் வெளிப்படும். பழைய காலத்தில், இக்ஷ்வாகு வம்சத்தரசர்களைப் பற்றிப் பேசுங்கால் மகாகவி காளிதாஸ சுவாமி, "அவர்கள் மனுவினால் கிழித்த கோடைவிட்டு எள்ளளவும் விலகவேயில்லை," யென்று வருணித்தார். அதாவது தாங்கள் செய்துவந்த காரியங்களில் சந்தேகமுற்ற போதெல்லாம், அவர்கள் மானவ தரும சாஸ்திரத்தை உரைகல்லாக வைத்து, மாற்று, உரை, கண்டு வந்தார்களென்க.

ஆனால் மனுமுதலிய ஸ்மிருதிகள் காலவகையினால் போதாமற்போகவே, 1858-ம் ௵த்தில் பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவிலேற்படுகையில், அதற்கு ஸ்மிருதி யொன்று புதிதாகச் சேர்க்க வேண்டிவந்தது. அதை யனுசரித்துப் பிறகு வேறிரண்டு சாஸனங்கள் பிறந்தன. இம்மூன்றுஞ்சேர்ந்து தற்காலம் துரைத்தனவிஷயத்தில் நமக்கு வேண்டிய

தோர் பெரிய உரைகல்லாயிருப்பது கொண்டு தான் இவைகளை நாம் முதன்முதல் இவ்வாறு பிரபலப்படுத்தினோம்.

‘இம்மஹா சாஸனத்திரயத்தில்,’ முதலாவது 1858-ம் வருஷத்தியது. அதில் நமக்கு வேண்டிய ராஜதருமங்களெல்லாம் கிட்டியிருக்கின்றன. இரண்டாவது நமது மகாராஜச் சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக சந்தாப்பத்தில் கிடைத்தது. அதன் மூலமாய்ச் சக்கரவர்த்தியவர்கள், முந்தி 1858-ம் ௵த்திலேற்பட்ட தருமங்களைத் தனக்கும் உரைகல்லாக்கிக் கொள்ளுவதாகவும், அவற்றைவிட்டு எள்ளளவாகிலும் விலகுவதில்லையென்றும், சுவாமிசாக்ஷியாக உறுதிமொழி கூறியிருக்கிறார்கள். இப்படிச்சொல்லியபிறகும், சமீபகாலத்தில இச்சாஸனங்கள் விஷயத்தில் ஏதோ பூசிமெழுகிப்பேச்சுவந்ததால், சென்ற நவம்பர் மீ" த்தில் சக்கரவர்த்தியவர்கள் முற்கூறியதை மறுபடி வற்புறுத்தியது தவிர, இந்த உரைகல்லைத் தாமட்டுமேயன்று, தமது பிரஜைகளாகிய ஐக்கிய ராஜ்ஜியத்தவர் அனைவரும் ஒப்பியிருப்பதாகவும், அதையனுசரித்துத் தற்காலம் இந்தியர்களுக்கு யோக்கியதையிருக்குமளவிற்குத் துரைதனத்தில் நிர்வாகபாத்தியதையை உண்டு செய்வதாகவும், வாக்களித்திருக்கிறார்கள்.

ஆதலால் இம்மஹாசாஸனங்களைத் துரைத்தனத்தார் எவ்வளவிற்குக் கௌரவப் படுத்தி வருகிறார்களோ, அவ்வளவிற்குப் பிரஜைகளாகிய நம்மிலும் எல்லோரும் இவற்றைச் செம்மையாயறிந்து கௌரவப் படுத்துவது இருதிறத்தாருக்கும் க்ஷேமகரமாகும். ‘சந்திரனைத் தா;’ என்பது சிறுபிள்ளைத்தனம், அல்லது கேட்கவேண்டுவ தின்னதென்றும், நமக்கிருக்கும் துக்கங்களை நன்கு விசாரியாமலும், பசுக்களைப்போல ஒரே குரலாக முறையிடுவது அதிலும் மோசம். ஆதலாலிவ்விரண்டு குறைவையும் நீக்கித் துரைதனத்தாருக்கும நமக்கும் சுகதுக்கங்களொன்றேயெனத்தெளிந்து, நமது குறைகளை விவேகபூர்வகமாய்த் தெரிவித்துப பரிகாரந் தேடிச்சுகமடைய இவ்வுரைகல் நன்குபயோகப்படுமென்றும், இவ்வுத்தேசம் சீக்கிரத்தில் பலனுக்கு வருவதற்கு, இவற்றைக் கொஞ்சம் விசேஷவுரையுடன், நமது பாடசாலைகளில் விடாமல் கற்பித்து வருதல் பலவினும் தகுமென்றும், நம்பி யிதற்காக முயன்றோமென்பதைச் சிஷ்டர் யாவருமறிதல வேண்டும்.

மதிராசு இந்திய வர்த்தக மகாசங்கம்.

இப்பொருள் கொள்ளும் ‘மதிராசு இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ்’ என்னும மகாசங்கத்தைச் சென்றமாதத்தில் மதிராசு வர்த்தக மகாஜனங்களும், மற்றுள்ளவர்களுஞ் சேர்ந்துண்டாக்கியதற்காக வெகு சந்தோஷப்படுகிறோம். இதனால் என்ன பிரயோஜனமென்று அனேகர் கேட்கலாகும். இப்படியொருசாதன மில்லாதது கொண்டுதான் நமது நாட்டு வர்த்தகம் அன்னியர் கையிலைக்கியமாகி, நமக்குத் துபாசி வேலையை விட உயர்ந்த பதவிக்கிடமில்லாமல் திண்டாடுவது. அரிசி, பருப்பு, முதலியவற்றைக் கொண்டு பலப்படும சில்லரைக் கடையையும், பலசரக்கு மளிகையையும, கிடங்குகளையும் தவிர்த்துப் பெரிய வர்த்தக சாதனங்களொன்றும் நாளதுவரை நம்மிலேற்படவில்லை. நமது நாட்டுச்சரக்குகள் வெளியே போவதில் நமக்குக் கிடைக்கவேண்டிய லாபம் சரியாய்க்கிடைக்கிறதா? அயல் நாட்டார் நமக்குவேண்டியவைகளை யெப்படி யறிந்து அப்போதப்போது நமக்கனுப்பும் சரக்குகளைத் திருத்தியோ, மாற்றியோ செய்து வருகிறார்கள்? ‘பாங்கு’ என்னும் லேவாதேவி விஷயத்தில், நாட்டுக்கோட்டையாருடைய தந்திரங்களைத் தவிர்த்து வேறு பெருஞ் சாதனங்களுண்டா, இல்லையா? நமது நாட்டில் செல்லாகிவரும் நாணயங்கள் விஷயத்தில அப்போதப்போது சில்லரை மாறுதலாகி வருகிறதே, அதன் ரகசியமென்ன? ஒரு

அணு நாணயமும், தங்கப் பவுனும், சமீப காலத்தில் வந்தனவே, அதனால் யாருக்கு லாபம், அல்லது நஷ்டம்? என்பது போன்ற கணக்கற்ற விஷயங்களில் நமக்கும், சர்க்காருக்கும், வேண்டியபடி யுக்தி சொல்லுவதற்குத் தக்க சாதனங்கள நம்மில் இல்லவேயில்லை யென்னல் தகுமன்றோ. அதனால இதுவரை பல சந்தர்ப்பங்களில் நமக்கு வேண்டாத காரியங்களாகியிருப்பதுடன், இனியுமிப்படியே யிருந்தால் வரக்கூடிய அனர்த்தங்கள் பலவாகும். ஆதலால் தொழிலிலும, வியாபாரத்திலும் தேர்ந்து கைவலுத்திருக்கும ஸ்ரீமான்-தியாகராஜ செட்டியார் போன்ற புத்திமான்கள இவ்வாறு தங்களுக்கும், மகாஜனங்களுக்கும் பெரிய உபகாரஞ் செய்யக்கூடிய சங்கமொன்றை யேறபடுத்தியது வெகுதூரஞ் சிலாகிக்கத் தக்கதேயாம்.

கலெக்டர் தர்பார்கள்.

சென்றமாதத்திய வர்த்தமானத்தில் பிராசீன பாஷைகளையும், அவற்றைப்பேசும ஜனங்களுடைய நடை, உடை, பாவனைகளையும், இந்தியாவிற்கு உத்தியோக விஷயமாய் வரும் ஐரோப்பியர்களுக்குக் கற்பிக்கவேண்டி, லந்தனில ஒரு பெரிய பிரயத்தனம நடந்துவருவதாகச் சொன்னோம். அதனநோக்க மின்னதென்றும் சொன்னோமல்லவா? அதாவது, பழையகாலத்திலிருந்த துரைகளைப்போலவே யினியும் வருபவர்கள், தேசியபாஷைகளை நன்குகற்றுத் துபாசியின் சகாயம் வேண்டாது, ஜனங்களுடைய முறைகளைக்கேட்டு நியாயஞ் செய்யவேண்டுவதாம். இதறகு லந்தனில பிரயத்தனப்படுவதில பிரயோஜனம் அதிகமாயுண்டென்று நமககுக் காணவில்லை. அக்கறையுள்ளவர்கள் இந்தியாவில உத்தியோகத்திற்குவந்து மூன்றுமுதல் ஐந்து வருஷத்திற்குள வேண்டியமட்டில் கற்றுக்கொள்ளலாம. கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற அக்கறைமட்டும லேசமிருந்தால்போதும். அதொன்றுதான் தற்காலம் குறைந்திருப்பது. அதற்கு இருவகைக் காரணங்கூறுவதுண்டு. முதலாவது இப்போது வரும உத்தியோகஸ்தருக்கு வேண்டிய உதவி செய்வதற்கு, இங்கிலீஷ் தேறக்கற்ற நம்மவர்கள் தயாராயிருக்கிறார்கள். அதனாலிவர்களுக்கு அது வீண்பிரயாசமாகக் காணுகிறது. இரண்டாவது ரயில் முதலிய சௌகரியங்களாலும், வேறு காரணங்களாலும், முன்மாதிரி ஜனங்களுக்குள்ளாகவேயிருந்து பொழுதுபோக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஐரோப்பிய உத்தியோகஸ்தருக்கில்லவேயில்லை.

காரணமெதுவாயிருந்தாலும் தோஷம் வலுத்துவந்து, அதனால் சர்க்காருடைய நல்லெண்ணங்களெல்லாம் வியர்த்தமாவது பிரத்தியக்ஷம். ஆதலால எதாகிலும் பரிகாரந்தேடவேண்டுவது வெகு துரிதமாக முடியவேண்டிய விஷயம. ஆகவே, இதை நாடிப் பம்பாய் கவர்ன்மெண்டார், சமீபகாலத்தில் "கலெக்டர் தர்பார்," என்று புதிய ஏற்பாடு ஒன்று செய்திருப்பதாகத் தெரிகிறது. கலெக்டர்கள் சர்க்கியூட் போய்க்கொண்டே யிருப்பதால், அதை யனுசரித்துக் குடிகளை யொருங்கு சேர்த்து, அங்கங்கே தாமதித்தத தகரார்களைப் பைசல் செய்துவரவேண்டுமென்பது சர்க்கார் எண்ணமென்று தோன்றுகிறது. இந்த எண்ணம் முற்றுபபெற வேணடுமானால், அதற்குச் சில லக்ஷணங்கள் இன்றியமையாதவை. (1) கலெக்டர்களுக்குத தேசிய பாஷைகளில் பரிசயம் வேண்டியமட்டி லிருக்கவேண்டும். (2) கலெக்டர்களை மனதுவந்தபடியும், மாதத்திற்கொரு முறையும் மாற்றிவருவது கூடாது. (3) கலெக்டர்கள் தர்பாரை ஒருமணி, அரைமணி யென்று கடிகார நிபந்தனை வைத்தும், குடிகள் சொல்வதை, நன்றாய்த்தேர்ந்த வக்கீல்கள் சொல்லுவதுபோல ஜோடித்துச் சொல்லவேண்டிப் பயமுறுத்தியும் வருவதுகூடாது. பழையநாளில மன்றோ துரை சேலத்தில செட்டில்மெண்டு வேலையிலிருக்கையில், ஒரு மகமதிய

க்குடியானவன் அவ்விஷயமாய்ப் பேசவந்து, அதைவிட்டு மற்றைய விஷயங்களை வேண்டிய மட்டில் பேசி வந்ததாகவும், சுகதுக்கங்களை யெல்லாம் வருணித்துத் தன் மனைவி தனக்கு எருதுபோலுழைத்து வந்து இறந்துபோனதும, தனக்குக் குஞ்சு குழந்தைகளைப் பார்த்து வர ஆளில்லாத உபத்திரவமும், இது போன்றவைகளை யெல்லாம் அவன் சவிஸ்தாரமாய்ச்சொல்லக் கேட்டு வந்ததாகவும், அப்படிக் கேளாமல் போகும் விஷயத்தில் செட்டில்மெண்டு சுலபமாய் முடிவதில்லை யென்றும், ஒரு கடிதத்தில் எழுதியிருக்கிறார். இந்த ரகசியத்தையும் இதுபோன்ற மற்றைய சங்கதிகளையும் கவனிக்கவேண்டும். ஏனெனில் குடிகள அனேகமாய்ப் பழையபடியே தானிருக்கிறார்கள். உத்தியோகஸ்தரோ, "சுகதுக்கஞ் சுங்கக்காரருடன் சொலலுவதில் பயனென்ன ?" என்பதற்கேற்க நடந்து வருகிறார்கள். அதுதான் பெருத்த தோஷம. அதைததான் மாக்ஷிமை தங்கிய பிரின்ஸ் ஆப் வேல்ஸ⁻ும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதைத்தான் சீக்கிரம் பரிகரிக்க வேண்டும். " கலெக்டர் தர்பாரகள் " இதற்குக கொஞ்சமாகிலும் சாதனமாகும் பக்ஷத்தில் அவைகளை யேற்படுத்தியவருக்கு எல்லாச் சுகிர்தமுமுண்டு.

பரலோகப்ரா
ராய்பகதூர் ராம
சந்திரராவ் சா
ப்தி அவர்கள்.

சென்றமாதம்,மதிராசில் வெகு பெரியவராகி வக்கீல்களில் வெகு காலமாக முக்கியஸ்தராயிருந்த இவர் காலஞ்சென்றார். நல்ல ஜாகிர்வம்சத்தில் பிறந்து, புத்திவிசேஷத்தினாலும், நற்குணத்தினாலும், சிறந்து நின்ற இவருக்கு, நமக்குத் தெரிந்தவரை எக்காலத்திலும ஒரே மரியாதை யிருந்து வந்திருக்கிறது. ஆகவே சர்க்காரும்,நம்மவரும்,ஒருமனப்பட்டுச்சம்மானித்து வந்த 'அபூர்வ வஸ்துக்களில்' இவர் ஒருவர். சட்டப்படிப்பு விஷயத்தில் வெகு காலம இவர் பண்டிதராயிருந்து நடத்திவந்ததில், வித்தியார்த்திகளுக்கெப்போதும், தயை, தாக்ஷிண்ணியம முதலிய சுபலக்ஷணங்களுடன் நடந்துவந்ததை யாவரும் புகழ்ந்து சொல்லுவார்கள். ராஜபக்தியில் வெகுவாய்ச் சிறந்து, சில்லரைச் சங்கதிகளிற் பிரவேசிக்காமலே கௌரவமாயிருந்ததுகொண்டு, மூன்று வருஷங்களுக்கு முன், பங்காளத்தில் நடந்த ஒரு பெருத்த அநியாயத்தைக் குறித்துப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு முறையிடுவதற்கென்று மதிராசில் கூடிய மகாஜன மண்டலத்திற்கு இவரை அக்கிராசனாதிபதியாக்கியதில், அதே அந்தப் பெருஞ்சபைக்கு ஒரு பூஷணமாகிச் சபையாருடைய நோக்கம் பரிபூரணமாயிற்று. அனேக விஷயங்களில் இனி வருங்காலத்தில் இம்மாதிரிக்குணங்களிற் சிறந்தோர் வேண்டியிருப்பதால், தற்காலமுள்ள குமாரர்களும், இனிவருபவரும், இதைக் கவனித்து, இம்மகான் நமது மத்தியில் நெடுநாள் ஜீவித்து, உழைத்து வந்தது வியர்த்தமாகாமலிருகக முயல்வாராக.

பாஸ்டூர் மண்டபங்கள்.

'மசை நாய்' என்னும் பைத்தியங்கொண்ட நாய்கள் கடித்துக் குழந்தைகளும், பெரியோரும் விஷவேகத்தினால் சுரங்கண்டு, நாய்போல் குலைத்துப் பிராணனை விடுவதும், அதற்கு நம்மவர்களுடைய ஔஷதம ஒன்றும் பலியாமலிருப்பதும், அனேகமாய் எல்லோருக்குந் தெரிந்திருக்கலாம். இதற்குப் பரிகாரம் கொஞ்ச காலத்திற்குமுன் பிரான்சு தேசத்திலொரு புத்திமான் கண்டுபிடித்ததில, அவருக்குள்ள பெயர் அந்த வைத்தியசாலைக்குமாகியேற்பட்டது. பிறகு இது பிரிட்டிஷ் சீமையிலேற்பட்டது. ஆனல் இது அவ்விடத்திலிருக்கும் வரை, இந்தியாவிலுள்ள ஐரோப்பியப் பட்டாளவீரர்களும், வேறு உத்தியோகஸ்தரும், இவ்வாறு கடியுண்டால், சர்க்கார்செலவில் சீமைக்குப்போய் வைத்தியம் செய்துகொண்டு வரவேண்டியதாயிற்று. அப்படியேற்பட்டுக் கொஞ்சகாலமானதும், ஏதோகாரணத்தினால் நமது தேச

த்தில் நாய்களுக்கு 'மசை' எங்கும் அதிகமாகி, இந்தக்கடி வியாதியும் அதிகபலப்பட்டு, வியாதியஸ்தருடைய சங்கையையும் பயங்கரமாகி யதிகரித்து வந்தது! இவர்களையனுப்புவது சாதகியமில்லாமற்போகவே, சர்க்கார் இந்தியாவிலேயே வைத்தியசாலைவேண்டி, ஹிமாசலப்பிரதேசத்தில் 'கசௌளி' யென்னுமிடத்தில் ஒன்றேற்படுத்தினார்கள். அதுசிலவருஷகாலம் நடந்து வந்ததில் திருப்திகரமாகக் கண்டதால், நமது ராஜதானிக்கும ஒன்றுகுன்னூரில் (நீலகிரியில்) ஏற்பட்டது. சென்றவருஷத்திய ரிபோர்ட்டு இது வெகு உபகாரமாக இருந்ததாகத்தான் காட்டுகிறது. மேலும் மேலும் உபகாரமாகுமென்பதில் சர்க்காருக்குச் சந்தேகமேயில்லை.

இந்தியாவில் இந்த வைத்தியமுறைக்கு ஆக்ஷேபம ஒன்றேதான். அதாவது இது நடப்பதற்கு ஜீவஹிம்ஸை வேண்டியிருப்பதேயாம். ஆடு, நாய், முதலிய பிராணிகளைப் பரீக்ஷைக்காக எடுப்பது சாதாரணம். பாமபின் விஷத்திற்குப் பரிகாரந்தேடுபவர், இவைகளிலொன்றையோ, அதிகமாகவோ பிடித்துக்கடியுணபித்துப் பிறகு தங்களுடைய பரிகாரமுறையைச் செய்துபார்ப்பது சகஜம். ஆனால இம்மாதிரிப் பரீக்ஷைக்கும், இந்த வைத்தியத்திற்கும் வித்தியாசமாவது 'சித்திரவதை' யேயாம். பிராணிகளையுயிருடன் சிலிர்க்கச்சிலிர்க்கச் சிறிதுசிறிதாக அறுத்துப்பரீக்ஷித்துவருவதில் ஹிம்சைவாயாற் சொல்லக்கூடாத விதமாயிருப்பதால், இந்தியாவில் மட்டுமேயன்றி உலகத்திலெங்கும் விவேகிகள் இதற்குச் சம்மதப்படுவதில்லை. ஆனால் வைத்தியர் சொல்லுவது, இது—தாரதம்மியம் பார்க்கையில் மனிதருயிரை யபேக்ஷித்து மற்றைய பிராணிகள் தாழ்ந்திருப்பதனாலும், இக்காலத்தில் திராவக மகிமையினால, ஒரு ஜீவனுக்கு உபத்திரவங் காணாமல் தேகத்தில எந்தப்பாகத்தை வேண்டுமானாலும் சேதிக்கலாமாதலாலும், இது ஒரு பெரிய ஆக்ஷேபமாகமாட்டாதென்பதே.

**பிராசீனங்கல் வியபிவிருத்தி.**

கனம் ஜட்ஜி வி. கிருஷ்ணசுவாமி அய்யாவர்களுடைய விடாமுயற்சியால், சென்ற நாலு வருஷ காலமாக யோசித்துக் கடைசியாகச் சென்ற மாசத்தில் நமது யூனிவர்ஸிட்டியார் அவருடைய இஷ்டத்தை யொருவாறு பூர்த்தி செய்தார்கள். பஞ்சாபில நடப்பதைப்பார்த்து வந்தது முதல் மேற்படி அய்யாவர்களுக்கு இவ்விஷயத்தில் ஆக்கிரகம் அதிகம. தன்னாலியன்றமட்டில் முயன்று மைலாப்பூரில் சமஸ்கிருதப் பாடசாலை யொன்றேற்படுத்தினார். அதில் வித்தியாப்பியாசம் ஒருவாறு நடந்து வருகிறது. ஆனால் தேசிய பாஷைகளை யூனிவர்ஸிட்டியார் கைவிட்டு விடுமளவும் அவைகளுக்கு மகிமை குன்றிப் பேவார்சுகளாகிப் போவது நிச்சயமாதலால், ஐயாவர்கள் வெகு தூரம் உழைத்துக் கடைசியாக அவைகளுக்குப் பதவி யொன்றேற்படுத்தி யிருப்பதற்காக அவருக்கு நாம் வந்தனஞ் செய்கிறோம.

நமது பண்டிதர்களுக்கு இங்கிலீஷ் தெரியாத தோஷத்தினால், 'பொன்மலருக்கு நாற்றமட்டும்' குன்றியிருப்பது வெகு நாளைய அனுபவம். ஆதலால் இனி வருபவர்களுக்கு மெட்ரிகுலேஷன் தரபுவரை இங்கிலீஷ்படிப்பு நிச்சயமென்றேற்பட்டதில், அந்தத் தோஷம் ஒருவாறு பரிகாரமாகு மெனபதில் ஐயம சிறிதுமில்லை ஆனால் இவ்வளவு தூரமுழைத்து யூனிவர்ஸிட்டி ஸமமானம் பெறும பண்டிதர்களுக்குப் பிழைப்புமட்டும் விசேஷித்துக் காணாததொன்றாதான இதில நிவகாரமனுள்ள முக்கியக் குறைவென்று நமக்குக் காணுகிறது.

**சோதனையுபகாரச்சம்பளம்.**

பரீக்ஷைகளில் முதல் வகுப்பில் தேர்ந்து சம்மானம பெறும புத்திசாலிகளான வித்தியார்த்திகளுக்கு அந்தத்தசையொழிந்தபிறகு, ஜீவதசையிலேனாகிலும் தாங்கள் சிறப்பாகப் படித்ததை யுபயோகித்து நற்காரியஞ்செய்து தங்களுக்கும், உலகத்திற்கும், நன்மை பயக்குமாறு நடக்க இஷ்டபபட்டாலும், இதுவரைய


தற்கு யூனிவர்ஸிட்டியாருடைய சகாயம் ஒன்றுமில்லை. ஆதலால் இந்தக் குறைவை நீக்கியினியவ்வாறு முன்னுக்குவர யத்தனிப்பவருக்கு உபகாரமாக யூனிவர்ஸிட்டியார், தற்காலம் எட்டு பெயருக்கு மாதம ரூ 75 வீதம் உபகாரச் சம்பளம இரண்டுவருஷத்திற்கு ஏற்படுத்தியிருப்பதாகக் கேட்டு வெகுவாய்ச் சந்தோஷிக்கிறோம். இந்த தேசசரித்திரமென்பது நமக்கு அபிமதமாதலால் அதறகும் வழிபிறந்திருக்குமென்று நமபுகிறோம். நமது நாட்டில விவேகிகளான சிறுவாகளுக்கு அவ்விஷயத்திலுழைத்துக் கீர்த்தி சம்பாதிப்பதைவிட வேறு உபயோககரமான காரியம் நமக்குக் காணவில்லை. இம்மாதிரியுபகாரம இனி மேலுமேலும் நடந்து வருவதற்கு யூனிவர்ஸிட்டியார் பிரயத்தனப்படு வார்களென்றும, அதற்கு வேண்டிய ஆலியயவர்களுக்குக் கிட்டுமென்றும் நிச்சயமாய் நம்புகிறோம்.

தீண்டாதவருக்கு நம்பிக்கை.

இப்பூவுலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும், 'உயர்ந்தவர்', 'தாழ்ந்தவர்,' என்கிறபேதமும், 'தனிகர்,' 'ஏழைகள்,' என்கிற பேதமும், ஏதோ பலவாறு இருந்துதானிருக்கின்றன. என்றாலும், ஏதாகிலுமோர் வருக்கத்தில் ஒருவன் பிறந்தால, அப்பிறப்பினால் அவனுக்குண்டான தோஷத்திற்கு ஜீவதசையில் பரிகாரமேயில்லை யென்கிற விசித்திரம் இந்தியாவிற்கு மட்டுஞ் சிறந்ததாம். 'மாமூல்' என்பது நமது நாட்டில் நினைபளவுங் கோணுமலிருப்பதுபற்றி யிதுவரை நம்மில இங்கிலீஷ் படித்தவரிலும் அனேகர் இந்த அனியாயத்திற்கு நியாயங் கண்டுபிடித்து வாதாடிவந்தார்கள். என்றாலும் கிறிஸ்தவர்களும, மகம்மதியர்களும், இப்படி நாம் ஒதுக்கியவர்களைச் சேர்த்துக் கல்விபயிற்றிவந்ததால், சுதேச கிறிஸ்தவவருக்கம் பிரதிதினமும் பலத்து, அவர்களுக்குள் ஆணும்,பெண்ணும, படித்துப் புத்திசாலிகளாய் நாகரீக முதிர்ந்து வருகிறது பிரத்தியக்ஷம். மகம்மதியர்களில், இப்படி முன்னுக்கு வரச் சௌகரியப்படாவிட்டாலும்,பதவியுயர்ந்து,"தீண்டாத" வருக்கத்தாருக்குரிய துக்கங்களில் அனேகம் பரிகாரமாகி வருவதும் பிரத்தியக்ஷமாம்.

இப்படி நடந்துவருவதில் நம்மவர்களே நமக்கு விரோதிகளாவது கொண்டு, அது நம்மில் படித்தவரனேகருக்குச் சமமதமில்லாமல்,அவர்கள் சுமார் முப்பது வருஷங்களாகத் தேசிய ஆசாரங்கள், என்றால், துராசாரங்களைத் திருத்துவதற்குச் சிறிது சிறிதாகப் பிரயத்தனம் செய்து, அவை யேதோ நமக்கு நல்லதசையிருப்பதுபற்றிச் சமீபகாலத்தில் பலத்த பிரயத்தனங்களாகி யுருப்பட்டு வந்திருக்கின்றன. நமது நாட்டில் பிறந்து நமது நாட்டிலேயே யிறக்கும ஜனங்களில், சுமார் ஐந்தரைக் கோடி பெயருக்கு, அன்ன வஸ்திரங்கள் அரை வயிறைக்கூடக் காணுமலிருப்பது அனியாயமே.என்றாலும், அது எத்தேசத்திலுமுள்ள லக்ஷணமாதலால் அதை யெடுத்திவ்விடத்தில் விஸ்தரிக்க வேண்டியதில்லை. ஆனாலிவர்களிலனேகர்,ராஜபாட்டையில்போவதுகூடாதென்றும், கடைத்தெருவில போவதும், வியாபாரஞ்செய்வதுங் கூடாதென்றும், அனேகம் தொழில்களுக்கிவர்கள் யோக்கியர்களல்லரென்றுமிருப்பதை யோசிக்குமிடத்து, இவர்களை யிந்த ஸ்திதியில் நிறுத்தியிருக்கும் 'உயர் குலத்தவருக்கு' ஏதோ இரகசாரம் பலமாகப் பிடித்திருக்கிறதாகத் தாராளமாகச் சொல்லத்தான் வேண்டிவருகிறது.

ஆதலால் இந்தத் துக்கங்களை யேகதேசம் பரிகரிக்கவேண்டிப் பம்பாயில் பிரயத்தனம பலமாக நடந்துவருவது நமக்கு நல்ல காலமே. சென்ற மாதத்தில இவ்விஷயமாய்க் கூடிய பெருஞ்சபையில் மகாராஜா கைகோவார் அவர்கள் அக்கிராசனாதிபதியாகி, இவ்விஷயத்திலுள்ள வயிற்றெரிச்சல தீரப்பேசி, இதர ஜனங்களுக்கு உற்சாகமூட்டியதற்காக அவருக்கு நாம் மனப்பூர்வமாய் வந்தனம் தருகிறோம. இந்த ஐந்தரைக் கோடி ஜன



பரோடா மஹாராஜா கைகெூவார் அவர்கள், தினதயாளு.

ங்களுக்கு எப்போது இந்த விதமான கஷ்டங்கள் ஏகதேசம் விடியுமோ, அப்போது தான் இந்தத் தேசத்திற்கும் ஒரு பெரிய சீழ்வயிற்றுக்கழலை யுடைந்து உபத்திரவ நீங்கும். அதற்குமட்டும் சந்தேகமேயில்லை.

இப்போது நமக்குச் சாமான்னியமாயுத் தேசத்திலிருப்பது, 'இத்திண்டா வருக்கத்தவருக்கு' லௌகிகக் கல்வியும், ஜீவனோபாயமும். இவ்விரண்டும் முதசிலாக வேண்டியவையென்பதற் கையமில்லை. ஆனால் இவற்றுடன், தெய்வ விஷயமாயும் சிறிது பயிற்சியேற்படுமாகில், சரீர சுத்தியுடன், மனதுஞ் சுத்தி யடைந்து அனேக சுகிர்தங்களுண்டாகும்.

ஏனெனில் ஆதிமுதல் இந்தியாவில் ஜனங்களுக்குள் ஒற்றுமை தெய்வவிஷயமாகவேதான் ஏற்பட்டு வந்திருக்கிறது. ஆகையால் இது சனாதனதருமங்களில் வெகு முக்கியமானது. புதிதுமல்ல. இந்த ரகசியத்தை நன்கு விளக்க வேண்டி, இப்பாரதவருஷத்தில், ஆரியமகாரிஷிகளுக்குள், இவ்விஷயத்தில் சிரேஷ்டரும், முதல்வருமான விசுவாமித்திர மகாரிஷியைக் குறித்து, அவருக்கு வாஸ்தவத்திலுள்ள மகிமையைச் சிறிது விளக்கியிருக்கிறோம்.

இனிவரும் நம்பர்களில் ஏழைச்சனங்களை யுத்தாரஞ்செய்த பாகவதர்களுக்குள் வெகு சிரேஷ்டரான இரண்டொரு பெயர்களையும் அவர் மகிமையையும் விளக்கி விடுவதாயுத்தேசம்.

பம்பாயில் பல விடங்களில் இதற்கென்று சபைகள் கூடிப் பிரசங்க நடந்து வருவதில், நமக்கென்னவென்றே நம்மில் (தமிழ்நாட்டில்) பெரும்பாலார் கையைய மடக்கிக்கொண்டிருக்கிறோம். ஆதலால் சேலத்தில் இதற்காக டாக்டர் ஸ்ரீமான்-ராமாராயரவர்களுடைய ஊக்கத்தை முன்னிட்டுச் சென்ற மாசம் சித்திரவிசித்திரங்களுடன் ஒரு பெரிய சபை கூடியதைக்கேட்டு விசேஷித்து ஆனந்திக்கிறோம். கோவில் விஷயத்திலும் வேறு அனேக விஷயங்களிலும் இக்காரணங்கொண்டு நடக்கும் அனியாயங்களையும், மகம்மதியனாகவாவது, கிறிஸ்தவனாகவாவது, ஒரு 'தீண்டாதவன்' ஆகிவிடும் பக்ஷத்தில், உடனே யவனுக்குக் கிடைக்கும் பதவியையும, சித்திரத்தில் விளக்கிக்குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தில்லாமலிருக்கும்படி அச்சபையில் காட்டியது வெகுதிறம். அப்படியே தென்னிந்தியாவெங்கும் ஜனங்களுக்குள் உணர்வுண்டாக்கிக் காரிய மாரம்பிக்கும் விஷயத்தில் காலக்கிரமத்தில் அனுகூல முண்டாதலால் ஆங்காங்குள்ள புத்திமான்கள் ஏதாகிலும் தங்களாலியன்றதைச் செய்வாரென்றும், அதனாலிம்மை மறுமை யிரண்டிலும் பயனடைவாரென்றும நம்புகிறோம்.

---

## சாந்தமாய் வாதித்தல்

நாம் முற்றிலும் சரியாய் வாதிப்பதாக நமக்கு நம்பிக்கை இருப்பினும் படபடப்பாகவும் அகங்காரத்துடனும் பேசலே கூடாது. நமது அபிப்பிராயங்களை நிதானமாயும் சாந்தமாயும் வெளியிடவேண்டும். அப்படி வெளியிட்டும் ஜனங்களின் மனதில் ஏறுவிடில் "இன்றையதினம் இவ்வளவு போதும்; இன்னொருதடவை பார்த்துக் கொள்வோம்" என்றும் இந்தச சங்கதி அவ்வளவு ஆவசியகமன்று வேறு விஷயம் வாதிப்போம் என்றும தொட்ட சம்பாஷணையைத் தந்திரமாய முடிக்கவேண்டும். சங்கத்தில் வித்தியாசமான ஆசாரங்கள் இருக்கலாம். ஒரு சங்கத்திற்கு ஏற்றவைகள் மற்றொரு சங்கத்துக்கு ஏறாமலே இருக்கும்.

## காவிய காண்டம்

### 1. யூனிவர்ஸிட்டியும், தேசிய பாஷைகளும்

ஸ்ரீமான்-ஏ. ஆர். ராஜராஜவர்மா அவர்கள், எம். ஏ., மகாராஜா காலேஜ், அனந்த சயனம்.

[முதல் நெம்பர் வான்முறையில், நாம் ஹங்கேரிப்பண்டிதர் எழுதிய கடிதத்திலிருந்து மொழி பெயர்த்திருப்பதில், தமிழ்ப் பாஷை விஷயமாயும், அதில் வசன நடை விஷயமாயும் மேற்குறித்த பண்டிதர் எழுதியிருப்பதை விசேஷவுரையில்லாமல் பிரசுரித்ததினிமித்தம், அதை நாமும ஒப்புக்கொண்டிருப்பதாகச் சில அபிமானிகள் நினைத்துக்கொண்டு, 'வித்யா விஹாரிணி' என்னும் பெயர் விஷயத்திலும், வடமொழி முதலிய மொழிகளிலிருந்து சமயோசிதமாய் நாம் உபயோகிக்கும் பதங்கள் முதலியவற்றின் விஷயத்திலும், வெகுவாய் ஆக்ஷேபித்து எழுதுகிறார்கள். அவற்றிற்குச் சாங்கமாகவும், சவிஸ்தாரமாகவும் பதிலெழுதுவதற்குக் கொஞ்சம் சாவதானித்தாக வேண்டியிருப்பதால், தற்காலம், மகாராஜா காலேஜ் சமஸ்கிருதப் பண்டிதரும், மலையாளத்தில் வித்துவானுமாகிய, மேற்குறித்த ஸ்ரீமான்-ராஜராஜவர்மா அவர்கள், நமதபிப்பிராயத்தை யொட்டிப் பேசியதோர் உபந்நியாசத்திலிருந்து வேண்டியமட்டில் இங்கு மொழி பெயர்த்தெழுதுகிறோம். மேற்படியார் தமிழ் விஷயமாய் எழுதியதைச் சுத்தத் தமிழாகிய அன்பர் கவனித்தல் வேண்டும். ஹங்கேரி வித்துவானைப்போலவே இவரும் நலத்தை யெண்ணியே பேசியிருப்பது பிரத்தியக்ஷமென்று நம்புகிறோம. ஏடி].

தற்காலக் கல்வி முறையில் தேசிய பாஷைகளுக்குரிய உரிமைகள் யாவையென விசாரிக்க புகுந்து, அது சம்பந்தமாய் ஸ்ரீமான்-வர்மா அவர்கள் சொல்லியது.

மேனாட்டுக் கல்வி யித்தேசத்திற்கு வந்ததினால், தேசிய பாஷைகளுக்கு லாபமேதவிர நஷ்டமில்லை. இப்படித் தங்களை நாடிவந்த சௌகரியத்தை, அத்தேசிய பாஷைகளும் சிரத்தையுடன் உபசரித்தது நற்பய னடைந்திருக்கின்றனவென்றே நாம் சொல்லலாம். அவ்வளவிற்கு நாம் இப்பாஷைகள் விஷயத்தில் பெருமைப்படுதலும் தகும். மொத்தத்தில் பேசுமிடத்து வாஸ்தவமிப்படி யிருந்தபோதிலும், இப்பாஷைகளில் பரஸ்பர தாரதம்மியம் வெகுவாயிருப்பது பிரத்தியக்ஷம். மாராட்டியும்,பங்காளியும், மற்றவைகளைவிட வெகு அதிகமாய்ப் பலனடைந்திருக்கின்றன. ஆதலால் அவ்விரண்டு பாஷைகளிலும் தற்கால முதவக்கூடிய கலைவர்க்கங்களில் வியாப்தியதிகம். அவற்றையனுசரித்த கிரந்தங்களு மநேகம். ஆகவே யவைகள் இவ்விஷயத்தில் விசேஷித்துப் பெருமைப்படத்தக்க நியாயமிருக்கிறது.

தென்னிந்தியாவிலோ,தேசியபாஷைகள் இவ்வாறு மேனாட்டுக் கல்விரசத்தைத் தாராளமாயுறிஞ்சித் தமக்கும் புஷ்டியைத் தேடிக்கொள்ள இவ்வளவிற்கு ஆக்கிரகப்படவில்லை. இந்துஸ்தானத்திய பாஷைகளை யபேக்ஷித்து இவைகளுடைய கதி வெகுமந்தமென்றே சொல்லவேண்டும். இப்படி வித்தியாசம் காணுவதற்கும், அதனாலிவைகளுக்கு மகிமை குன்றியிருப்பதற்கும் காரணங்கள் என் சிற்றறிவிற்கெட்டிய மட்டில் இவையெனக் காணுகின்றது. இந்துஸ்தானத்திய பாஷைகளெல்லாம் சம்ஸ்கிருத மாதாவின் பெண்களாம். தமிழ்முதலிய நான்குமோ, திராவிடமாதருஸ்தானத்திலிருந்து பிறந்தவைகள். இந்திய மகாமண்டலத் தேசிய பாஷைகளி லொவ்வொன்றும் காலக்கிரமத்தில் சம்ஸ்கிருதத்திற்குடன்பட்டுப் புதிதாகக் கருத்துகள் அமைய வேண்டியவிடத்தெல்லாம், அப்பாஷையில் அக்ஷயமாயுள்ள பகுதி,விகுதி முதலியவற்றினுதவியால் பதங்களைக்கூட்டி முன்னுக்கு வந்திருக்கின்றன.

இவ்விதிக்கு விலக்கேயில்லை. ஆனால் இவற்றுள் தமிழொன்றுமட்டும், சம்ஸ்கிருத பதங்களை யுள்ளபடி யெடுக்கப்பிரியப்படாமலும், தனதுரிமைப் பதங்களைச் சாதிகுணம் கெடாமலிருக்கவும் பிரயத்தனப்பட்டு வந்திருக்கிறது. திராவிட நாட்டிலுள்ள மற்றைய மூன்றுமோ இவ்விஷயத்தில் போட்டிபோட்டுக்கொண்டு சம்ஸ்கிருத பதங்களையும், வழக்கையும் தாராளமாகப் பெற்றுவந்ததில், அவைகளுக்குச் சிறந்துள்ள லக்ஷணங்கள் இப்போதே வெகுவாய் மழுங்கிப் போயின. என்றாலுமிவைகளுக்கு முன்னுக்கு வருவதற்கு வேண்டிய சௌகரியம் இம்மூலமாய் ஏற்பட்டுவிட்டதாலினி பொருகுறைவுமில்லை. தமிழ்மட்டும் முரட்டுத்தனமாய்ச் சமஸ்கிருதத்தினுத ? இவ்வளவு சுலபத்தில் கிடைப்பதாயிருந்தும் வேண்டாமல், எதிர் நீச்சமிட்டுப் பின்றங்கி வந்திருக்கிறது.

மேனாட்டுக் கல்வியினுதவியால் தேசிய பாஷைகள் பிரபலப்படுவதற்குப் பம்பாய், பங்காளம் முதலிய தூரதேசங்கள் போகவேண்டுவதில்லை. நமது மத்தியில் செழிக்கும் மலையாளத்தைக் கவனித்தால் வெளியாகும். இருபத்தைந்து வருஷத்திற்குமுன் யூனிவர்ஸிட்டியார் இதற்கு ஒரு புதிய பதவியுண்டாக்கிய காலத்தில், இதற்கு முறைவாய்ந்த இலக்கணமுமில்லை, இலக்கியமுமில்லை. இப்பொழுதோ காவியமட்டுமே யன்றித் தத்துவவர்க்கங்களிலும் முதல்தரமான பத்தியக்கிரந்தங்க ளிருக்கின்றன. வசன நடையும் வெகு பிரபலமாகி வருகிறது. புஸ்தகங்கள் எவ்வளவு வேகமாய்ப் புறப்படுகின்றன வென்பதெனக்குத் தெரியும். ஆனால் இப்படி வெளியாவதெல்லாம் குணங்கூடிச் சிறந்துள்ளன வென்பதற்கில்லை. ஆயினும் வருங்காலத்திய நற்பயனை யிவைகள் குறிப்பிடுவனவாம். காலக்கிரமத்தில் தக்க யோக்கியதையுள்ளோர் காரியத்தை மேற்கொண்டு, சக்கையைப் பரிகரித்துச் சாரத்தைமட்டும் கிரகித்துப் பாஷைக்கு யோக்கியதை யுண்டாக்குவார்களென்பதிற் தடையில்லை. தற்காலம் புஸ்தக கர்த்தர்களுக்கு நான் சொல்லத் துணிந்தது இது. காவியரூபமாக இனிக் கிரந்தங்கள் எழுதுவது வீண். நமக்காக வேண்டியதெல்லாம் இக்காலத்தில் வயிற்று வளர்ப்பதைப் பற்றியாதலால், இனியெல்லோரும் ருசியுடன் படித்து எளிதில் சங்கதியறியக்கூடிய வசனநடையைப் பிரபலப்படுத்துவதே நமது முக்கிய கடனாகும். அதுதான் நமக்கு இப்போது கைகூடியாகவேண்டியகாரியம். அதன் மூலமாய்க் கல்விபரவிப் பின்னிட்டு ஜனங்களுக்கும் வயிற்றுப்பாடு இவ்வளவு பெரிதாகாமல், கொஞ்சம் ஒழிவுகிடைக்கும்போது, குதூகலமுள்ளவர் காவிய விஷயமாய் உழைத்துப் பெருமையடையட்டும். அதுவரை நாம் வசனநடையைப் பிரபலப்படுத்த முயல்வோமாக.

பி. ஏ. முதலிய உத்தம பரீக்ஷைக்குப் போகும் வித்தியார்த்திகள் இங்கிலீஷ் காவியாதிகளுடன், தேசிய காவியங்களையும், சம்ஸ்கிருதக் காவியங்களையும் பயின்று நற்பயனடைவதற்கு யூனிவர்ஸிட்டியார் செய்திருக்கும் சௌகரியங்களை முற்றிலு முபயோகிக்காமலே வந்திருக்கிறார்கள். இம்மாதிரி அவலக்ஷணங்கள் அதிகரிப்பதற்குப் பண்டிதர்களும் தம்மாலியன்ற வுபகாரஞ் செய்து வருகிறார்கள். பொன்பொலியுங் காலேஜுகள் இரண்டொன்று தவிர, மற்றைய சாமான்னியக் காலேஜுக்களில், பண்டிதர்களின்னும் பழைய முறையை யனுசரித்தே பாடஞ் சொல்லி வருகிறார்கள். அம்முறைக்கேற்ற பதிவை விட்டு எள்ளளவாகிலும் இப்படியப்படித் திரும்புவதும், விலகுவதும் மகா பாபமென்று இவர்களுக்குச் சித்தாந்தம். காலேஜுகளில் தேசிய பாஷைகளுக்கு மகிமை குன்றி, வித்தியார்த்திகள் அவைகளைத் திரஸ்கரித்து வருவதற்கு, இவைதாம் முக்கிய காரணங்களெனக் காணுகிறது.

பழைய ஏற்பாட்டில் தோஷங்கள் வனுத்

திருந்ததை யாரு மொப்புக்கொண்டபோதிலும், அவற்றைப் பரிகரிக்கவேண்டிச் சமீபகாலத்தில் ஸெனட்டாரும் சர்க்காருமாகச் சேர்ந்து செய்திருப்பதை விசாரிக்குமிடத்துப் பெருமாளென்ற பெயரை மாற்றப்போய் பெரிய பெருமாளான கதைபோலிருக்கிறது!

இந்த அனர்த்தத்திற்கு மூலகாரணம விசாரிக்கையில், அது தேசீயபாஷைக் கபிமானிகளாகிய நல்லோர்களுக்குள் ஏதோ கக்ஷி யேற்பட்டதினிமித்தமேயென நமக்குக் காணுகிறது. மேலே நாம் கூறியபடி இதரதேசீயபாஷைகளில் தமிழ் மட்டும் தனித்ததோர் போக்கையனுசரித்து, விசித்திரமானதோர் பதவியையடைந்திருக்கிறது. நமது நாட்டு மகாஜனங்கள் தமிழைச் சாமான்னியமாய்த் தென்னிந்தியதேசிய பாஷைகளிலொன்றென்றோ, அல்லது அவற்றுள் முக்கியமானதென்றோ எண்ணிவருகிறார்கள். அதற்கு வார்சுதாராகிய தமிழரோ, அதை வெகு தூர முயர்த்திப்பேசிவருகிறார்கள். அவருககுத் தமிழ் திராவிட பாஷைகளுக்கெல்லாம் திலகமென்பது முதற்பிரமாணம். இதற்கு நியாயமில்லையென்று நாம சொல்ல வரவில்லை. ஆனாலிதனால் தற்காலத்திலுண்டாகிய பலன் மட்டும் விபரீதகரமாகி யிருக்கிறது. ஏனெனில் சமீபத்தில் யூனிவர்ஸிட்டிப் பரீக்ஷைகள் விமர்சனமாகி வந்ததில், இவ்விருக்கக்ஷியாரும அபிப்பிராய பேதப்பட்டு வாதாடினார்கள். தமிழ்க்கக்ஷியார் பதிவுபோலச் சம்ஸ்கிருத விஷயமாக ஸெனட்டார் செய்திருந்த ஏற்பாடுகளை யாக்ஷேபித்துச் "செல்லாப்பாஷைகளை யுயிர்ப்பிக்கப் பிரயத்தனப்படுவதைவிடச் செல்லும் பாஷைகளைப் புஷ்டிகரிக்க முயலவது நலம்," என்றார்கள். ஸெனட்டார் இதை யொப்பாமற் போகவே யிவர்கள் கவர்ன்மெண்டாருக்கு மனுசெய்து முறையிட, அவர்களும் இவர் முறையைச் சரியென அங்கீகரித்து, இவருக்கு வயிற்றெரிச்சல்தீரப் பரிகாரஞ்செய்துவிட்டார்கள, அதாவது, வசன நடையைப் பொருத்த ஏற்பாடாம். இவ்வாறாக ஆட்டுக்கடாச் சண்டையில் நரிசெத்த கதை மறுபடியுண்டாகித் தேசிய பாஷைகளின் பிழைப்பு அமபலமாகிவிட்டது.

ஆனால் ஸெனட்டார் செய்திருப்பது முழுமோசமாக நமக்குக் காணவில்லை. புதிய ஏற்பாட்டில் தேசீய பாஷைகளுக்குப் பதவி யுயரவேண்டியது தான் சகஜம, ஏனெனில் இவைகளுக்கிதுவரை யிருந்தபடி "ஒத்துப்பாடும்" தசையொழிந்து, "சுவயம்வரக்கலைகளில்" ஒன்றாகி, மேம்பட்ட தசை வந்திருப்பதால், இனி மாணாக்கருக் கிஷ்டமிருந்தால், இவைவேண்டிய மட்டில் பரிமளிக்கலாம். ஆனால் அந்தப் பலன் கிட்டுவதற்கு ஓரேயோரிடறு கட்டையிருக்கிறது. புதுச் சம்பிரதாயத்தில், தமிழரை வெருட்டி யோட்டுவதற்குத் தொன்றுதொட்டேற்பட்ட பூச்சாண்டியொன்று பிரபலித்துக் காணுகிறது—அதாவது, சம்ஸ்கிருதமும், அத்துடன் சேர்ந்த விரண்டொரு பாஷைகளுமாம். இவற்றில் ஏதேனுமொன்றை யெடுத்தே தீரவேண்டி யிருப்பதில் தமிழ் வித்தியார்த்திகள் நடுங்குகிறார்கள். ஆனால் தெலுங்கு முதலிய மற்றைய பாஷைகளுக்குரியோர் இதனாலுபத்திரவப்படவேண்டியதில்லை. மெட்ரிகுலேஷனுக்குச் சம்ஸ்கிருதத்தை யிரண்டாவதாக வெடுத்த யாரும், மேற்பரீக்ஷைகளுக்குத் தேசிய பாஷைகளைத் தாராளமாயெடுக்கலாம். அதனால் வித்தியார்த்தியின் சுவ பாஷைகளுக்கு வெகு அனுகூலம். வசன நடையும் ராஜாங்கமாக நடக்கலாம்.

ஆனால் தற்காலம மெட்ரிகுலேஷன் வித்தியார்த்திகளுடைய நடவடிக்கையைப் பார்க்குமிடத்து நாம் வீண் மனோராஜ்யம் செய்வதாகக் காணுவதால், ஸெனட்டாரும், மற்றுள்ள அபிமானிகளும, தேசிய பாஷைகளுக்கு லோபம் வாராமலிருப்பதற்கு வேண்டிய ஜாக்கிரதை செய்து சமயோசிதமாய் நடத்துவாராக.

(நமது வேண்டுகோளின்படி யனுப்பியதோர் பிரதியிலிருந்து.)

## 2. ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திர ஆராய்ச்சி

ஸ்ரீமான்- வி. எஸ். செங்கல்வராயபிள்ளை எம். ஏ.

கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தையரு ளைநாடி யிருக்குநா ளெந்நாளோ ?

தாயுமானவர்.

ஸ்வாமிகளின் பிறப் பிடமும், காலமும்.

செந்தமிழ்ப் பரமாசிரியராகிய ஆறுமுகக் கடவுளே பரம்பொருளெனக் கருதி அவரை அன்பொடு வழிபட்டு, சந்தப பாக்கள் எண்ணில பாடி, அழியா இன்பம் பெற்ற மஹாநுபாவராகிய ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள நினைக்க முத்தியளிக்குந் திவ்ய க்ஷேத்திரமாகிய திருவண்ணாமலையில் திருவவதாரஞ் செய்தருளினார். இவர் *பிரபுட தேவராஜன் காலத்திருந்தவர். அவ்வரசன் இங்கிலீஷ் வருஷம் 1450-ல் ஆண்டதாகச் சிலா சாசனங்களால் ஏற்படுவதால் இவர் சற்றேறக் குறைய 460-வருஷங்களுக்கு முன் இருந்திருத்தல் வேண்டும்.

ஆறுமுகக் கடவுள் இவரை ஆட் கொண்டு திருப்புகழ் பாடும்படி அநுக்கிரகித்தது.

இளமைப் பருவத்திற் சிற்றின்பத்தில் உழன்று, அதனால் வறுமை, பிணி முதலிய அடைந்து மிகத் துன்புறும்போது, முற்பிறப்பிற் செய்த தபோபலத்தால் ஷண்முகக் கடவுள் இவர் மாட்டுத் தண்ணருள் சுரந்து குருவடிவமாய் எதிர் தோன்றித் தமது அருமைத்திருக் கரத்தால் திருநீறிட்டு, இளநகையோடும் குளிர்ந்த அருட் கண்ணால் நோக்கித், தாமரை யன்ன திருவடிகளை அவர் தம் சிரசின்மேற் சூட்டி, ஜெபமாலை ஒன்றுந் தந்து, பிரபஞ்ச விஷயங்களாற் சஞ்சல முறுவண்ணம் மனம், வாக்கு இவைகளுக்கு எட்டாததாய், மெய்ஞ்ஞானியர்களாலும் உணர்தற்கரிதான 'சும்மா இரு ; சொல்லற' என்னும் மௌனோபதேசத்தையும் போதித்தருளித், திருப்புகழ் எனப்பெயரிய சந்தப் பாவைப் பாடுந் திறத்தையும் தந்தருளினார். மேற்கூறப்பட்டன எல்லாம் அவர் தம் திருப்புகழ்ப் பாடல்களினின்றே உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாய்த் தெரிகின்றன.

'வறுமை யாகிய தீயின்மேர் கிடந்து
நெளியு நீள்புழு வாயினேற் கிரங்கி யருள்வாயே.

[வறுமை எனப்பட்ட நெருப்பில் விழுந்து தத்தளிக்கும் புழுவாகிய என்மீது இரங்கி அருள்புரிய வேண்டும்.]

'இரங்கு கலியனை பரிவுற சடலனை
சவுந்த ரிகமுக சரவண பதமொடு மயிலேறித்-
தழைந்த சிவசுடர் தனையென மனதினி
லழுந்த உரைசெய வருமுக னகையொளி
தழைந்த நயனமு மிருமலர் சரணமு மறவேனே'*

[அசேதனனாகிய என்மீது அருளும் அன்பும் வைத்து, காணும்போதே சிவஞானத்தைத் தரவல்ல திருவருட் பிரபாவத்தோடும் மயில்மீது வந்து கருணைபுரிந்த இறைவனே! உனது திருமுக விலாசத்தையும் திருவடித் தாமரையையும் யான் மறவேன்.]

'இபமுகவ னுக்குகந்த இளையவ மருக்க டம்ப
எனதுதலை யிற்ப தங்கள் அருள்வோனே.' (106)

[யானை முகத்தை உடைய கணேசருக்குப் பின் உதித்த கந்தசுவாமியே! வாசனை வீசுங் கடப்ப மாலையை அணிந்தவனே! எனது தலையில் திருவடித் தாமரையைச் சூட்டி யருள் புரிந்தவனே!]

'ஜெபமாலை தந்தசற் குருநாதா-
திருவாவினன்குடிப் பெருமாளே.' (99)

[ஜெபமாலையைக் கொடுத்த குருநாதமூர்த்தியே! திருவாவினன்குடியில் வீற்றிருக்கும் பெருமானே!]

'படியி லிகினு மமளியில் அவர்தரு மதுராக-,
பரவை படியினும் வசமழி யினுமுத
லருணை நகர்மிசை கருணையொ டருளிய
பரம ஒருவச னமுமிரு சரணமு மறவேனே.' ()

* இப்பிரபுட தேவராஜன் கி. பி. 1456ஆ முதல் 1477ஆ வரையில் ஆண்டதாக டாக்டர் பர்'நல், சூயல் முதலிய ஆங்கில வித்துவான்கள் எழுதிய நூல்களினின்று ஏற்படுகின்றது. இவன் விஜயநகர் ரத்ந ராஜ வம்சத்தைச் சார்ந்தவன்.

* திருப்புகழ் முதற்பாகம் இரண்டாம் பதிப்பின்படி இலக்கங் குறிப்பிக்கப்பட்டன.

'அருணை நகர்மிசை கருணையொ டருளிய
மவுன வசனமு மிருபெரு சரணமு மறவேனே.'
'அருணையிற்சித் தித்தெ னக்குத் தெளிவருள்
பெருமாளே.' ()

[யான் பெண்களது கலவி யின்பத்தில் மதிமயங் கிக் கிடக்கும் போதும், நீ திருவண்ணாமலையில் என க்கு முதல் முதல் செய்த மௌனோபதேசத்தையும், உன் திருவடித் தாமரையையும் என்றும்மறவேன்.]

'சலச மேவிய பாதநி னைத்துமு
னருணை நாடதி லோதுதி ருப்புகழ
தனைய வோகையி லோத எனக்கருள் புரிவாயே.'

[உனது தாமரை போன்ற பாதங்களைத் துதித்து நான் முன் திருவண்ணாமலையில் ஓதின திருப் புகழை நித்தம் அன்புடன் ஓதுமாறு எனக்கு அருள் புரிதல் வேண்டும்.]

'ஆசா பயோதி யைக்க டக்க விட்டதும்
வாசா மகோச ரத்தி ருத்து வித்ததும்
ஆபா தனேன்மி கப்ர சித்தி பெற்றினி துலகேழும்

யானைக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற ஒதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும் இடாமழி-

லேறுத மாம லத்ர யக்கு ணத்ரய
நானு விகார புற்பு தப்பி றப்பற
வேதம மாயெ னக்க நுக்ர கித்தது மறவேனே.

[மூவாசை யெனப்பட்ட முந்நீரைக் (கடலை) கட க்க விட்டதும், பேரின்ப நிலையைக் காட்டுவித்ததும், அடியனாகிய யான் மிகப் பிரசித்தி பெற்று உல கெங்கும் அற்புதம என வியக்கத்தக்க தேன்போற் சுவைக்கும் திருப்புகழை ஓத ஓதுவித்ததும், மும்ம லத்தையும் முக்குணத்தையும், நிலையிலாப் பிறப்பை யும் நீக்குவித்தது மான உன் அநுக்கிரகததை யான் மறவேன்.]

'சரணக்கழல் காட்டியெ னாணவ
மலமறநிட வாட்டிய ஆறிரு
சயிலக்குல மீட்டிய தோளொடு முகமாறும்.—
* * * *
கதிபெற்றிட நோக்கிய பார்வையு மறவேனே. ()

[நின்பாத தாமரையைக் காட்டி எனது ஆணவத் தையும், குற்றத்தையும் வாட்டி ஓட்டின உனது பன் னிரு தடந்தோளையும், ஆறு திருமுகத்தையும், பெருங் கருணைத் திருக்கண்களையும் மறவேன்.]

'தலைநா ளிற்பத மேத்தி யன்புற
வுபதே சப்பொரு ளூட்டி மந்திர
தவஞா னக்கட லாட்டி யென்றனை *
* * * *
கதிர்தோகைப்பரி மேற்கொ ளுஞ்செயல்
மறவேனே.' (735)

[உனது திருவடியை என்தலைமீது அன்று சூட்டி, அன்போடும் தவஞானமாகிய கடலில் என்னை ஆட்டி, மயில்மீது தோன்றிய பெருஞ் செயலை மறவேன்.]

இவ்வாறு மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற அரு ணகிரி நாத ஸ்வாமிகள் பின்னர் திருவண்ணா மலையினின்று நீங்கித் தெற்கே உள்ள சிவஸ் தலங்கள் தோறும் குகவள்ளலாரது திருப்புக ழைப் பாடிக்கொண்டு போந்து திரிசிராப்

வயலூரில் அநுக்கிரகம் பெற்ற விஷயம்.

பள்ளிக்கடுத்த வயலூர் என் னும் க்ஷேத்திரத்தை அடைந் தனர். ஸ்ரீ மணிவாசகப் பெரு மானார்க்குக் குருமூர்த்தியா ய்த் திருப்பெருந்துறையில் தோன்றிய சிவ பெருமான் பின்னர்த் திருக்கழுக்குன்றத்தில் அவர்முன் எங்ஙனம் மறுமுறை தோன்றியரு ளினரோ, அங்ஙனமே திருவண்ணாமலையில் அருணகிரிநாத ஸ்வாமிகளுக்கு அநுக்கிரகித்த ஆறுமுககடவுள் பின்னர்த் திருவயலியிலும் அவரைத் தடுத்தாட் கொண்டு, தமது திரு வடியை மறுமுறைசூட்டி, 'அன்ப! நமது ஊர் தியாகிய மயிலையும், மாலையாகிய நீபத்தையும், படையாகிய வேலையும், கொடியாகிய கோழி யையும், பேரின்ப நிலையாகிய சிற்றடியையும், பன்னிரு தோளையும், * செய்ப்பதியையும் சிற ப்பித்து நீ நித்தம் திருப்புகழ் விருப்போடு உரைத்தி' எனக் கட்டளை யிட்டருளினர். இவ்விஷயங்களும் அவர் திருப்புகழைக் கொண்டே அறியப்படுவனவாம்:—

'இகழ்ப்படுசெய்ப் பதிக்குளெனைத
தடுத்தடிமைப் படுத்தஅருட்
டிருப்பழநிக கிரிக்குமரப் பெருமானே.' (124

[வயலூரில் என்னைத் தடுத்தாட்கொண்ட பழநிப் பெருமானே.]

* செப்பபதி=வயலூர். செவ்=வயல், பதி=ஊர்.

'வயலி நகரியி லருள்பெற மயில்மிசை
யுதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு
மறவேனே.' (850)

[வயலூரில் யான் அருள்பெறும் வண்ணம், மயில் மீதேறிவந்து உதவின உனது பாதாம்புயத்தை கனவிலும் மறவேன், நனவிலும் மறவேன்.]

'பாதபங்கய முற்றிட வுட்கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடுமன்பது செய்ப்பதி யிற்றந்
தவனீயே.' (611)

[உனது பாத தாமரையை மனதிற்பதித்து, யான் ஓதிவரும் திருப்புகழைத் தினந்தோறும் உன்மீது பாடும் அன்பை வயலூரில் அளித்த பெருமானும் நீயே.]

'பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்—
பக்குவமலர்த்தொடையும் அக்குவடுபட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்—
திக்கதுமதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றிய பனிருதோளும்—
செய்ப்பதியும் வைத்துயர்திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே.'
(விநாயகர் துதி-3)

[உனது மயில் வாகனத்தையும், கடப்ப மாலையையும், கிரௌஞ்ச கிரியைப் பிளந்தெறிந்த கூரிய வேலாயுதத்தையும், சேவலங்கொடியையும், காத்தளிக்கும் சிற்றடிகளையும், பன்னிரு தோளையும், வயலூரையும் சிறப்பித்து விருப்பொடு திருப்புகழை ஓதுமாறு எனக்கு அருள்புரிந்த நின்கருணையை மறவேன்.]

அருணகிரிநாத ஸ்வாமிகளுக்கு வயலூரின் மீதிருந்த காதலுக்கு அளவே கிடையாது. முருகக்கடவுளின் கட்டளைக் கிணங்க வேறு தலங்களின் திருப்புகழ்ப் பாடல்களிலும் 'வயலூரா' என மறவாது துதிப்பார். இத்தலம் திரிசிராப்பள்ளிக்குத் தென்மேற்கு 6-மைல் தூரத்திலிருக்கின்றது. காவிரிநதியின் நீர்வளஞ் செறிந்ததாய், சோலைகளாற் சூழப்பெற்றதாய், என்றுங் குளிர்ந்ததாய், அதிமோகரமாய் விளங்குவது இத்தலம் என்பது இன்றும் பிரத்தியக்ஷமாய்க் காணலாகும். 'மேலை வயலூர்' என இப்போது வழங்கும் பெயர் ஸ்வாமிகள் காலத்தும் வழங்கிவந்தது. அக்நீஸ்வரர் என்னுந் திருநாமத்தோடு சிவபெருமானும் இத்தலத்தில் வீற்றிருக்கின்றார். தமது திருப்புகழில் 'தரிசிர கிரியயல் வயலியி லினிதுறை பெருமாளே' என்றும், 'பொழில் செறி வயலூர்' என்றும், 'சோலைபுடை சுற்று வயலூர்' என்றும், 'தட்ப முளதட வயலூர' என்றும், 'காவிரி வண்டல் மேவும் அதிமோகர வயலூர்' என்றும், 'மேலைவயலை, மேலைவயலி' என்றும் 'மைக்காவில பரிமள நாவீசு வயலி யக்கீசர் குமர' என்றும் சிறப்பித்திருக்கின்றார்.

'விராலிமலைக்கு வா' எனப் பணித்தது.

திருமறைக்காட்டிற் றங்கியிருந்த திருநாவுக்கரசு சுவாமிகளைத் 'திருவாய்மூர் எம்மூர்; ஆண்டுவருதி' எனப் பணித்துச் சிவபெருமான் அவரை அழைத்துச் சென்றதுபோலக் கதிர்வேலண்ணலும் வயலூரிற் றங்கியிருந்த அருணகிரிநாத ஸ்வாமிகளுடைய முன்னர் ஓர் அற்புதகோலத்தோடு தோன்றி, 'நாம் உறைதரு பருப்பதம் திருவிராலிமலை, ஆண்டு வருதி' எனக்கட்டளையிட்டு மறைந்தருளினர். அறுமுகத் தேவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு *விராலிமலைக்குச் சென்று அவரைத் தரிசனஞ் செய்து, 'யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான், யாவர்க்குங் கீழாம் அடியேனை-யாவரும், பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான், மற்றறியேன் செய்யும் வகை' என வாதவூர்ப் பெருமான் கசிந்துருகித் துதித்தாற்போல, அருணகிரியாரும் "எஃகுடை அண்ணலே! செய்ப்பதித் தேவே! சண்முகத் தெந்தையே! திருவண்ணாமலையில் தடுத்தாட் கொண்டதுமன்றி வயலூரிலும

* இத்தலம் திரிசிராப்பள்ளிக்கடுத்த தென்குளத்தூர் ரெயில் ஸ்டேஷனுக்கு 7-மைல் தூரத்திலுள்ளது.

உமது அருமைத் திருமேனியைக் காட்டுவித்து விராலிமலைக் கழைத்தீர்! என்னே உமது பேரருட்பிரபாவம்!' எனக் கசிந்துருகித் துதித்து ஆண்டுச் சிலநாள வதிந்திருந்து, பின்னர்ப் பழநிமலைக்குச் சென்றனர். இதனைத்

'தாமரையின் மட்டு வாசமலரொத்த
தாளிணை நினைப்பி லடியேனைத்-
தாதவிழ் கடுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்திய 'விராலி
மாமலை யினிற்பம் நீகருதி யுற்று
வா' என அழைத்தென் மனதாசை-
மாசினைய றுத்து ஞானமு தளித்த
வார மினி மித்த மறவேனே

(வயலூர்த் திருப்புகழ்) (834)

[தாமரை மலர்போன்ற நினது திருவடிகளைச் சிறிதும் சிந்தனைசெய்யாத என்னையும் ஒரு பொருளாக மதித்து என் முன் தோன்றி, கொன்றை, நாகம், மகிழும் ஆதிய விருக்ஷங்கள் விளங்கும் விராலி மலையில் பாம் வீற்றிருக்கின்றோம்; அத்தலத்துக்கு நீ வா என்று என்னை அழைத்து, மூவாசையையும் அறுத்து ஞானமாகிய அமுதத்தை ஊட்டுவித்த அன்பை யான் என்றும் மறவேன.]

'சத்திவிடு கந்த! திரு
வயலியில் அடிமைய குடிமை யினவற
மயலொடு மலமற அரிய பெரியதி
ருப்புகழ்வி ளம்புவெனமு
னற்புதமெ மூர்த்தருள்கு கவிராலி-
மலையுறை குரவ! (319)

[வேலாயுதத்தை ஏந்திய கந்தசுவாமியே! வயலூரில் எளியனுடைய அடியனது துக்கமெல்லாம் நீங்கவும், மயக்கமும், மலமும் அறுபடவும், திருப்புகழ் பாடும் என்முன் அற்புத கோலத்தோடு தோன்றிய விராலிமலைப் பெருமானே!]

எனத் துதித்துள்ளமையா னறிக

பழநிக்குச் சென்றதும், கவிசைச் சேவகனோடு நட்புற்றதும்.

ஸ்வாமிகள் பழநிமலையிற் பன்னாள் வதிந்திருத்தல் வேண்டுமென்பது தற்காலம் திருப்புகழ்பெற்றுள்ள தலங்களுள் பழநித்தலமே பதிகத்தொகையில் முதலாதலாற் பெறப்படும். இந்நாள்போலவே அந்நாளிலும் பழநிமலைப் படிகளிலெல்லாம் குரங்குகள் குதித்து விளையாடின என்பது "பரிமளப் பாகலிற் கனிகளைப் பறிநற் படியினிட் டேகுரக் கினமாடும் பழநி" எனவரும் அவர் திருவாக்கால் அறியக்கிடக்கின்றது.

இத்தலத்தில் இருக்கும்போது ஸ்வாமிகளுக்கு ஓர் அரிய நண்பர் கிடைத்தனர். அவர் இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. அவர் ஊர் கவிசை. அவரைக் கவிசைச்சேவகனென்றும், காவேரி சேவகனென்றும நமது பாவலர் கூறுவர். இக் கவிசைச் சேவகனார் ஸ்வாமிகளாலேயே பாராட்டப் பட்டிருத்தலின் முருகக்கடவுளிடத்தில் இவருக்கிருந்த பத்தியை அளவிடல் அரிதரிது. செவ்வேளைப் பழநியிலிருந்த திருக்கோலத்தோடுந் தரிசிக்க வேண்டி, கவிசைச் சேவகனார் 'வீரை,' என்னுந் தலத்திற் கோயிலொன்று கட்டுவித்துப் பழநிநாதர் போற் றிருவுரு வொன்று அமைத்து அமமூர்த்தியை வழிபடுவாராயினர்.

சிறுத்தொண்ட நாயனார் பொருட்டுஅவர் பெயரையும் அவர் திருப்பணியையும்

'பொடி றுகருஞ் சிறுதொண்டர்க்
கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான
கணபதீச சாததானே.'

[சிறுத்தொண்ட நாயனார் பொருட்டுத் திருச்செங்காட்டன் குடி என்னுந் தலத்திற் குடி கொண்டமர்ந்த பெருமானார்.]

'செங்காட்டங் குடிமேய
சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி
விளையாடும் பெருமானே.'

[செங்காட்டங்குடி என்னுந் தலத்து வாசஞ்செய்யும் சிறுத்தொண்டரது திருப்பணியை விரும்பி, சுடுகாட்டின் அனலை ஏந்தி விளையாடா நிற்கும் எமது பெருமான்.]

என ஞானசமபந்த சுவாமிகள் நவின்றருளியவாறு நமது அருணகிரியாரும் அவ்வீரையில்

வீற்றிருக்கும் பழநிநாதரையும் கலிசைச் சேவகனரது அன்பையும்,

'வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு முதல்வ வயல் வாவி புடைமருவு
வீரை வருபழநி ஞான மலையில்வளர் பெருமாளே.

'வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு மொருபெருமை புடையோனே-
வீரை யுறைகுமர தீர தரபழநி
வேல இமையவர்கள் பெருமாளே'. (109)

'வேலைவிடுகந்த காவிரிவிளக்கு
கார்கலிசைவந்த சேவகன்வணங்க
வீரைநகர் வந்து வாழ்பழநி யண்டர் பெருமாளே.

'மேகநிக ரானகொடை மானுய காதிபதி
வாரிசலி மாருதக ரோபாரி மாமதன
வேள்கலிசை வாழவரு காவேரி சேவகன
துளமேவும்.—

வீர! அதி சூரர்கிளை வேர்மாள வேபொருத
தீர! குமர ராகுவளை சேரோடை சூழ்கழனி [னே.
வீரைநகர் வாழ்பழநி வேலாயு தாவமரர் பெருமா

'வீறு காவிரியுட் கொண்ட சேகர
ஞான சேவகனற் சிந்தை மேவிய
வீரைவாழ் பழநித் தங்கு வானவர் பெருமாளே.

'வீரா புரிவரு கோவே பழநியுள்
வேலா இமையவர் பெருமாளே. (113)

[மேகம் போன்ற கொடையையும், மதனவேள் போன்ற அழகையுங் கொண்டவனும், பல வளங்களும் பொருந்திய வீரை என்னும் ஸ்தலவாசியுமான கலிசைச் சேவகன்-காவேரி சேவகன் எனப்பட்ட மெய்யன்பனது சிந்தையில் வீற்றிருக்கும் பழநியப்பனே! தேவர் பெருமானே!]

என்னுந் துதிவகையான் மிகப் பாராட்டியுள்ளனர்.

'வெல்யானைக்!
காவேரி ராசன் கனகமணி மாளிகையின்
பாவே ரியல்பனைத்தும் பார்த்ததன்பின்-என வருந்

திருத்தணிகை யுலாக்கண்ணிகளிற் சொல்லப்பட்டவர் இந்தக் காவேரி சேவகனர் தாமோ என்னும் ஐயமும் நிகழ்கின்றது.

ஏனைய தலங்களைத் தரிசித்தது

அப்பால் நமதாசிரியர் பழநியினின்றும் புறப்பட்டுக் கீழ்த் திசையிலுள்ள கொடுங்குன்றம் முதலிய தலங்களையும், தென் திசையிலுள்ள திருச்செந்தூர் முதலிய தலங்களையும், ஈழநாட்டுத் தலங்களையுந் தரிசனஞ்செய்து துதித்து மறுபடியும் வடதிசை நோக்கித் திரும்பிப், பலதளிகளையும் பாடிப் பரவி வடக்கே காஞ்சிபுரம், திருத்தணிகை, வள்ளிமலை, காளத்தி, ஸ்ரீசைலம், காசி முதலிய தலங்களுக்குந் திருப்புகழ் பாடித் திருவண்ணமலைக்கு வந்து சேர்ந்தனர்.

முருகக் கடவுள் அருணகிரியார்க்குப் பற்பல அற்புத திருக்கோல தரிசனம் பற்பல தலங்களிற் காட்டியருளினர். வயலூரிற் ரூேன்றி விராலிமலைக்கு வா என அழைத்தவிஷயம் முன்னரே கூறினேம்.

விசேஷ தரிசனம் பெற்ற இடங்கள்.

சுந்தரமூர்த்தி நாயனருக்குத் திருப்பனையூரில் திருக்கூத்தோடு சிவபிரான் தரிசனந் தந்தவாறு, சிவகுமாரரும் அருணகிரி நாதருக்குக் கொடுங்குன்றம்.*திருத்தணிகை, திருச்செந்தூர் என்னும் ஸ்தலங்களில் தமது நிர்த்த தரிசனத்தையும், திரு ஏரகத்தில் தமது பாத தரிசனத்தையும் தந்தருளினர். மேற்கோள்:—

"மட்டற்ற இந்திரிய சட்டக் குரம்பையழி
பொழுதினிலும் அருள்முருக
சுத்தக் கொடுக்கிரியி லிர்ந்து நீ சரண்களைம
றந்திடேனே" (371)

[இக் காயமழியும் சமயத்தும் திருவருள் செய்யும் முருகனே! கொடுங்குன்றம் என்னுந் தலத்திற் காட்டிய உனது நடனஞ் செயயும் பாதங்களை மறவேன்.]

அமண ருடற்கெட வசியி லழுத்திவி
ணமரர் கொடுத்திடு மரிவை குறத்தியொ
டழகு திருத்தணி மலையில் நடித்தருள்
பெருமாளே. (261)

• [திருஞான சம்பந்தமூர்த்தி என்னுந் திருநாமத்தோடு தோன்றிச், சமணரைக் கழுவேற்றிய சாமியே! வள்ளி தெய்வயானையொடு திருத்தணிகை மலையில் நடித்தருளும் பெருமானே!]

---

* கொடுங்குன்றம் என்பது பிரான்மலை. மதுரை ஜில்லாவில் உள்ளது. தேவாரம் பெற்ற ஸ்தலம்.

" சதிமுழவு பலவுமிரு பக்கத் திசைப்பமுத
சமையபதி ரவியிதய முட்கிப் ப்ரமிக்கவுயர்
தணிகைமலை தனில்மயிலில் நிர்த்தந்தில் நிற்கவல
பெருமானே."(616)

[மேளதாளங்கள் இசைப்பு, பயிரவியும் உள்ளம் ப்ரமிக்க, தணிகைமலையில் மயில்மீது நிர்த்தம் செய்யும் நிமலனே !]

" செந்திலிலுமென்றன்முன் கொஞ்சிநட னங்கொ
ளுவ கந்தவேளே. (57)

[திருச்செந்தூரில் கொஞ்சிக்கொஞ்சி என்முன் நடனம்செய்த நாதனே !]

"தகையா தெனக்கு னடிகாண வைத்த
தனியேரகந்தில் முருகோனே? (183)

[திருவேரகமெனப்பட்ட சுவாமிமலையில் பாத தரிசனம் தந்த பரமனே !]

அதாஅன்றிச் சிவபெருமான் சிதம்பர க்ஷேத்திரத்தில் தமதன்பர்க்குத் திரு நடன தரிசனங் காட்டியவாறு, முருகபிரானும் வியாக்ரபாதர், பதஞ்சலி ஆகிய இவர்களும் பிரமிக்குமபடி காளி கூட்டம், அலகைகுழாம் முதலியவை தம்மைச்சூழ நிருத்த தரிசனம் காட்டியருளினர்.

" அகுகுகு குகுவென ஆளி வாய்ப்பல
அலகைக ளடைவுட னுடு மாட்டமும்
அரனவ னுடனெழு காளி கூட்டமு மகலாதே-
அரிதுயில் சயனவி யாள மூர்த்தனு
மணிதிகழ் மிகுபுலி யூர்வி யாக்ரனும்
அரிதென முறைமுறை ஆடல்காட்டிய
பெருமானே". (599)

[தக்தையாகிய நடராஜப் பெருமானைச் சூழ்ந்து நிற்கும் பேய்க்கூட்டமும், காளிகூட்டமும் தன்னையும் சூழ்ந்து நிற்கவும், பதஞ்சலி வியாக்ரபாதர் ஆகிய இருவரும் அரிது அரிது என்று கொண்டாடவும் ஆடல்காட்டிய ஆறுமுக வள்ளலே !]

ஷண்முகக் கடவுள் பேரருளோடும் தன்னைத் தடுத்தாட் கொண்டதை நினைத்தும், உயரிய சந்தப்பாக்களைப்பாடுந் திறத்தை உவந்தருளினதை நினைத்தும், அடங்காமகிழ்ச்சிகொண்டு, " சுருதித் தமிழ்க்கவிப் பெருமானே ! மடவார் பால் எனக்கிருந்த இச்சையை யகற்றி நாற்றிசையும் அற்புதம், அற்புதம் என வியக்கத்தக்க சந்தப் பாக்களை அடியேன் உம்மீது ஆசு கவியாகப் பாடுமாறும், அவைகளை எவரும் ஓதி மகிழுமாறும் நீர் பேரருள் புரிந்ததை யான் என்றும் மறவேன், மறவேன் எனக் குதூகலத்துடன் பாடி யாடி மகிழ்வார்.

குகப்பெருமா
னார் பேரருள்
புரிந்தமையை
எண்ணி
மகிழ்தல்

" மடவார்பால்
வகாப்பழி பூணு மருளற
நீதோற்றி முஞனு மடிமையை
யீடேற்றுத லானுன் வலிமையை மறவேனே."

[பெண்கள்மீது போகாப்பழி பூண்ட எனது மோகம் அறுபட்டழிய நீ எதிர்தோன்றி அடிமையைக் கரை ஏற்றின கருணையை மறவேன்.]

குக ! பூர்வ—
பச்சிம தக்ஷிண வுத்தர திக்குள
பத்தர்க ளற்புத மெனவோதும்-
சித்ரக விதநுவ சத்தமி குத்ததி
ருப்புக ழைசிறி தடியேனும் ;
செப்பென வைத்துல கிற்பர வச்செரி
சித்தவ நுக்ரக மறவேனே. (356)

[நான்கு திக்கினும் உள்ள பத்தர்கள் அற்புதம் அற்புதம் என்று வியக்கத்தக்க விசித்திர சந்தப் பாடல்களாகிய திருப்புகழைச் சிறிது அடியேனும் சொல்லும்படி வைத்து உலகில் பரவசசெய்த அநுக்கிரகத்தை மறவேன்.]

ஈராறு தோளு மாறு மாமுக
மோடாறு நீப வாச மாலையும்
வீறான தோகை நீல வாசியு மன்பினாலே-
ஏனோரு மோது மாறு நீதர
நாளுநு பாடி யாடி நாடொறும
ஈடேறு மாறு ஞான போதக
மன்புரிதோ. (1034)

[பன்னிரு தோளையும், ஆறுமுகத்தையும், கடப்ப மாலையையும், நீலநிற மயிலையும் யாவரும் அன்பினால் ஓதுமாறு நான் ஆசுகவியாகப் பாடியாடி உன் திருப்புகழையே நித்தம் பரவசசெய்யுமாறு எனக்கு ஞானத்தை ஊட்டுவிப்பாயாக.

'வேணவோர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
யாண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்திநீ கண்டுழி முகனமர்ந் தேத்தி,'—என

நக்கீரனார் உரைத்தாங்கு, யாண்டாண்டெல்லாம் முருகபெருமானார் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருந்தனரோ ஆண்டாண்டெல்லாம் அருணகிரியாரும் நாடினார், பாடினார்; கோயிலிலிருக்குங் குகனைப் பாடுவார்; கோபுரத்துள்ள குமரனைப் பாடுவார்; வீதியில் இருக்கும் வேலவனைப் பாடுவார்; மார்க்கத்தமர்ந்த மயிலவனைப் பாடுவார்; மடங்களில் இருக்கும் கடம்பனைப் பாடுவார்; இன்னணம் இவர்பாடாத முருகர் மூர்த்தமே இலவாயின. மேற்கோள்—

இவர் பாடாத முருகர்மூர்த்தமே இலவென்பது.

"அருணை யிறையவர் பெரியகோபுரத்தில் வடபாலமர்ந்த அறுமுகப் பெருமாளே." (497)

"புலியூர்பரமாயைய வடக்குக் கோபுர வாசலில் மேவிய தம்பிரானே. (568)

"புலியூரினில், மேலைக் கோபுரவாசலில் மேவிய பெருமாளே. (569)

"தெற்குக்கோபுர வாசலில் மேவிய „ (573)

"நாலுகோபுர வாசல்மேவிய பெருமாளே. (577)

"அருணபுரி வீதியி னிற்கும் பெருமாளே. (496)

"தசரூர் வடக்காகு மார்க்கந் தமர்ந்த „ (695)

"பல குன்றிலு மமர்ந்த பெருமாளே. (214)

"உலகெங்கு மேவிய தேவா லயந்தொறு பெருமாளே." [இனி அச்சிடப்படும் 3-ம் பாகம்.]

அமணர் குலத்தை அழித்தவனும், அருணாசலேசுரரைத் தவறாது பூசை செய்யும் அன்பனுமான சோமநாதன் என்னும் பக்தன் ஒரு திருமடங் கட்டுவித்து அதனில் முருகக் கடவுளின் திருவுருவம் ஸ்தாபித்து வழிபட்டு வந்தான். அம்மூர்த்தியையும் நமது பாவலர்பெருமான் பாடியுள்ளனர்:—

"அரிவையொரு பாகமான அருணகிரி நாதர் பூஜை
அடைவுதவ றாது பேணும் அறிவாளன்-
அமணர் குல காலனாகும் அரியதவ ராஜ ராஜன்
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும்-முருக (769)

[பார்வதீ பாகரான அருணாசலேஸ்வரரது பூஜையைத் தவறாது செய்யும் அறிவிற் சிறந்த பெரியவனும், அமணர் குலத்தை யழித்தவனும், தவராஜ ராஜனுமான சோமநாதன் என்பவனது மடத்தில் வீற்றிருக்கும் மயிலவனே!] (இன்னும் வரும்.)

# சாரித்திரகாண்டம்

## 1. மகாராஜச் சக்கரவர்த்தி யவர்களுடைய 1908-ம் வருஷத்திய மஹாசாஸனம்

இந்தியாவிலுள்ள மகுடவர்த்தனர்களையும், மகாஜனங்களையும் வாழ்த்தி கூறிப் பிரஸ்தாபஞ் செய்வது.

நமதருமை மாதாவும் இவ்விராச்சிய பாரத்தை எனக்குமுன் வகித்துவந்தவருமான மாக்ஷிமைதங்கிய மகாராணி விக்டோரியா சக்கரவர்த்தினியவர்கள், பலத்த காரணங்கள் பலவற்றை முன்னிட்டுப் பார்லிமெண்டாரின் ஐகமத்தியத்தையும், ஆமோதனத்தையும் அனுசரித்து, அதுவரை கனம் ஈஸ்டு இந்தியா கம்பெனியாரால் ஆளப்பெற்று வந்த இந்த ராச்சியபாரத்தைத் தாமே நேரிலே வகித்து இன்று ஐம்பது வருஷம் பூர்த்தியாகிறது. அக்காலத்தில் ஈசுவர சாக்ஷியாக எடுத்துக்கொண்ட இப்பெரும் பாரத்தை நாமும் அதேலக்ஷியத்துடன் தாங்கி நிர்வகித்து வருகிறோமானதுபற்றி, அதற்குச் சாக்ஷியமாக, (இப்பாரத வருஷத்திய) மகுடவர்த்தனருக்கும் மகாஜனங்களுக்கும் இன்று நாம் ஆசிகள் வழங்கி, யோகக்ஷேமவிசாரணை செய்வது நமக்குச் சந்தோஷமாக விருக்கிறது.

உங்களுடைய புராண பூமியின் சரிதம், பல்கோடி நூறாயிர வருஷக்கணக்காகி வந்திருப்பதில், ஐம்பது வருஷமென்று யாம் மேற்கூறியதைக் (வெறும் பொழுதுபோக்காகமட்டும் பேசுமிடத்து) கேவலம் ஒரு க்ஷணமென்னலாகும். ஆயினும் இன்று முற்றுப்பெறுகிற இவ்வரை நூற்றாண்டை (வேறு காரியங்களை யுத்தேசித்துப் பேசுமிடத்தோ,) உங்கள் தேசசரிதமென்னும் பல்லாண்டுகளுக்கும் பெருங்கடலின் மத்தியில் ஓங்கி வெகுதூரம் எடுப்பாகக் காணுவதோர் திடர் என்னலுந் தகும்.

ஆங்கிலேய ஐச்வர்யாச்சியத் துரைத்தனத்திற்கும், இந்தியா கவர்ன்மெண்டுக்கும் நேரிட்டு என்று முடிவிருந்ததாகச் சாஸனம் பிறந்ததோ, அன்றுமுதல் இந்தியா கவர்ன்மெண்டுக்கு விசேஷித்ததோர் ஒற்றுமையும், தருமமுமேற்பட்டுயர்ந்தது. இத்தருமத்தைக் கைப்பற்றிக் கோல் சிறிதுங்கோணாமல் ஆண்டுவருவது சுலபமன்று. ஆனதுகொண்டு சில சமயங்களில இம்மகா மண்டலத்தில் குடியுயர்வு தாமதப்பட்டு வந்திருப்பது சாத்தியமே. என்றாலும், பலவாகியும், பலவகைத்தாகி வெகு விசித்திரமா யமைக்கப்பெற்றுமுள்ள, இம்மகா மண்டலத்திய முப்பதுகோடி யளவுபெற்ற ஜன சமூகங்களுக்குள் ஒற்றுமை யுண்டாக்கி, எல்லோருமோரா வருக்கத்தவராகிப் பிரிட்டிஷ் துரைத்தனத்தை பொப்பி நல்வழியில நடக்கச் செய்யவேண்டுமென்று அன்று மேற்கொண்ட விரதம், நாளதுவரை கோணாமலும், இடையறாமலும் பூர்த்தியாகியே வந்திருக்கிறது. ஆதலால், சென்ற நூற்றாண்டில் நாம் செய்துவந்த காரியங்களையெல்லாம் மறுபடி யாராய்ந்து பார்க்கையில், (மொத்தத்தில்) அவையனைத்தும் நடக்கவேண்டிய கிரமப்படியே நடந்து வந்திருப்பதால், அது விஷயத்தில் நமக்கு மாலைக் கண்ணுமில்லை, குறு குறுத்த நெஞ்சமுமில்லை.

எக்காலத்தியவாகிலும், எவ்விடத்தியவாகிலும், மானுஷியமான துரைத்தனங்களை விசாரிக்குமிடத்துத் தோஷஞ் சிறிதுங் காணாதனவாக இருந்தவை இதுவரை யில்லையாதலால், இத்துரைத்தனத்திலுங் குறைவுகளிருந்துதான் வந்திருக்கின்றன. ஆனாலும் அவ்விஷயத்தில் நமது சமஸ்தான விதேயர்களான உத்தியோகஸ்தர், சிறிது மனந்தளராமல், வெகு தூரஞ் சிரமப்பட்டுத் தைரியத்துடனும், ஊக்கத்துடனும் அவைகளுடன் போராடி, (எக்காரியத்திலும்) தீர்க்காலோசனை செய்து, நியாயமான நிர்ணயங்களைக் கைப்பற்றியும், அப்படிக் கைப்பற்றிய முறைகளைச் சளையாமல் நிறைவேற்றியும் வந்திருக்கிறார்கள். ஆகவே, குற்றங்காணும் பொழுதெல்லாம், நமது உத்தியோகஸ்தர்கள் சிறிதும் பின்னிடையாமலும், தங்களுடைய கஷ்டநிஷ்டூரத்தைக் கவனியாமலும், உழைத்துப்பரிகாரந்தேடி வந்திருக்கிறார்கள், செங்கோல் கோணியதாக ருசுவாகிய போதெல்லாம், வெகு பெயர் சமர்த்தர்கள் பாடுபட்டுக் குணக்கெடுத்திருக்கிறார்கள்.

ராஜாங்கம் எவ்வளவு சீராய் நடந்துவந்த போதிலும், பஞ்சம், கொள்ளைநோய், போன்ற பெருங்கேடுகளைச் சுத்தமாக வரவொட்டாமல் தடுக்க யாராலுமாகாது. என்றாலும், நமது (இந்தியப்) பிரதிநிதிகளும், அவர்களுடைய விதேயர்களான இதர உத்தியோகஸ்தர்களும், துரைத்தனத் தொழிலில் பழகித் தேர்ந்தவரானதுகொண்டு, வெகு சாதுரியமாயும், பூரண ராஜபக்தியுடனும் உழைத்து வந்திருப்பதில், அவ்வளவிற்கு, இததியாதி உபத்திரவங்களால் உண்டாகும் துன்பங்கள் வலிகுறைந்து, ஜனங்களுக்கு க்ஷேமமே யதிகரித்திருக்கிறது. ஆதலால், ஈசுவர சங்கற்பத்தினால் வருவனவாகிய இப்பெருவாரிகள் (எப்போதும் வெகு உபத்திரவகாரிகள் தானென்றாலும்,) பழைய காலங்களில் இவ்வளவு நீடித்திருந்த சம்பவங்களை அபேக்ஷித்து, ஒருக்காலும் இவைகளாலுண்டாகும் சேதம் இவ்வளவு மிதமாயிருந்ததில்லை (என்பது நிச்சயம்). இதைமட்டும் நாம் வெகு தாராளமாய்ச் சொல்லலாம்.

தவிர, உங்களுடைய ராஷ்டிரங்களிலாவது அக்கம் பக்கங்களிலாவது, யுத்தங்கள், கலகங்கள் முதலியன உண்டாகவில்லையாதலால், அவைகளாலுண்டாகும் கோரங்களும், கஷ்டங்களும் உங்களை யுபத்திரவிக்கவில்லை, உள்நாட்டுக் குழப்பங்களும் கட்டோடேயில்லையாகவே, இவ்விஷயங்களிலெல்லாம நீங்கள் சுகிகளாகவே வாழ்ந்து வந்திருக்கிறீர்கள்.

1858-ம் ஹுத்திய மஹாசாஸனத்தில் விக்

டோரியா மகாராணியவர்கள் ஒருறுதிமொழி கொடுத்தருளினார்கள். அதாவது, இந்தியாவில் கலகமற்று, எல்லோரும் சன்மார்க்கத்தை யனுசரித்து உயரவேண்டுமென்றும், (அதற்கேற்க) மகாஜனங்களுக்கு உபகாரமாகச் சிற்பகாரியங்களைத் தொடங்கவேண்டுமென்றும, அம்மகா மண்டலத்திய சகல வருக்கத்தவருக்கும் க்ஷேமத்தைக் கோரிச் சமரசமாய்த் துரைத்தனத்தை நடத்திவர வேண்டுமென்றும், தமக்கு மனோரதம் பலத்திருந்ததாக உங்களுக்கு வெகு தயையுடன திருவாக்களித்ததாம். அப்படியே யதை யனுசரித்து, உங்களுடைய தேசத்திய (நிலவளமுதலிய) சகல செல்வமுந் தழைத்தோங்குமாறு நிர்மாணஞ் செய்திருக்கும் சிற்ப விந்தைகள், பரிமாணத்திலாவது, துணிகரத்திலாவது, அம்மாதிரி இதுவரை நடந்திருக்கும் காரியங்களுக்கு எள்ளளவேனுங் குறைந்தனவன்று. ஆகவே மேற்குறித்த மகா வாக்கியத்தைப் பரிபாலிக்க முயன்றதில் (மேற்படி மகாராணியவர்களுடைய விதேயர்கள்,) எவ்வளவு சிரத்தையுடனும், பக்தியுடனும் உழைத்து வந்திருக்கிறார்களென்பது இம்மூலமாய்ப் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடியதேயாம.

நமது சாமந்தர்களான மகுடவர்த்தனருடைய உரிமைகளும், மரியாதைகளும், கிரமப்படிப பாலிக்கப்பெற்றும், குணங்குன்றாமல் பதனப்பட்டும, சிறிதுஞ் சேதமடையாமலுமிருந்து வந்திருக்கின்றன. அவர்களுமப்படியே நமது சமஸ்தான க்ஷேமவிஷயத்தில் பக்தி சிறிதுங் குன்றாமலே நடந்து வந்திருக்கிறார்கள். மதக்கோட்பாடுகளைக் கொண்டாவது, மதாசாரங்களைக் கொண்டாவது, நமது பிரஜைகளில் யாரும் (பாரபக்ஷமென்னும் காரணத்தை முன்னிட்டுப) பெருமை யடைந்ததுமில்லை. பயமடைந்தது மில்லை. உபத்திரவ மடைந்தது மில்லை. நமது (தருமாதிகாரத்திலேற்பட்டு ஜாரிக்கு வந்திருக்கும்) சட்டங்கள் எல்லோருக்கும் ஒரேதராசாக விருந்து க்ஷேமந் தந்திருக்கின்றன. அச்சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்து நீதிசெலுத்தும் அதிகாரிகளும், உங்களுடைய (க்ஷேமத்தையே கோரி,) உங்களுக்குள் காணும் ஜாதி மதமு இவைகளுக்குரிய மரியாதையைக் குறைக்காமலும், வேறு தசைகளில் தொன்றுதொட்டு உங்களுக்குள் வேரூன்றி வந்திருக்கும் சிஷ்டாசாரங்கள, மனோதருமங்களிவைகளை அசட்டை செய்யாமலும, (ஜாக்கிரதையாய்) நடந்து வந்திருக்கிறார்கள். தவிர அவற்றுளெலலாம் சிக்கா யிருந்தவைகளைச் சிக்ககற்றி, ஒழுக்கங்கொடுத்துக் காலவகையினால் பழையனகழிந்து புதியன வேற்கும் உங்களுடைய நூதன உலக யாத்திரைக்கு இயையுமாறு அதிகார தோரணியையும் துரஸ்துசெய்து வைத்திருக்கிறோம்.

நாம் துரைத்தனமேற்றிருப்பதில், தற்காலத்திய மகா ஜனங்களுடைய க்ஷேமத்தை மட்டுமேயல்லாமல், இனி நெடுங்காலம் பரம்பரையாய் வரும் அவர்களின் சந்ததியாருடையவும் க்ஷேமத்தைக் கோரி, அதை நிலைநாட்டுவதையே முக்கிய விரதமாகக் கொண்டிருப்பதால், இந்தியாவில், காரணஞ் சிறிதுமின்றி, லக்ஷியமொன்றுங் காணாமல், (இப்போது கொஞ்ச காலமாகக்) கண்டு வரும் சதியோசனைகளையும், அவற்றாலுண்டாகும் தோஷங்களையும், தாக்ஷண்ணியஞ் சிறிதுமின்றி நிர்மூலமாக்கிப் பறக்கவடிப்பது நமக்கு முதற்கடமையாகிறது. நமது இந்தியப் பிரஜைகள் பெரும்பாலாரும், ராஜபக்தி, விசுவாச முதலிய பெருங்குணங்கள் நிறைந்துள்ளவராதலால், அவர் தன்மைக்கும், இச்சதிகாரருடைய தன்மைக்கும், வெகுதூரமென்பது நமக்குச் செம்மையாய்த்தெரியும். ஆதலால், இச்சில்லரை உபத்திரவங்களைப பொருட்டாக்கி, நாம் மேற்கொண்ட மகாவிரதத்தை யொதுக்கிவைப்பதாக உததேசஞ் சிறிதும் நமக்கில்லை. அம்மகாவிரதமோ, இந்தியாவில் கலக முதலிய பிணி

கலையடக்கி, மகாஜனங்கள் கிருகஸ்தமார்க்கமாய் ஜீவிக்க, அதனால் நாடு செழித்தோங்கும்படி த்துரைத்தனத்தையும் பரிஷ்காரப்படுத்தி வரவேண்டுவதாம்.

(ஆதலால் இவ்விரதத்திற்கேற்க) இவ்வைம்பதாம் ஆண்டு நிறைவென்னும் சுபமுகூர்த்தத்தில், (இந்தியப் பிரஜைகள் விஷயத்தில்) நமது பேரருள் கனிந்திருப்பதற்கு அறிகுறியாகவும், தீர்க்ககாலம் பயன்தருவதாகவும், எதாகிலும் பெருங்காரியமில்லாமற்போவது நமக்கிஷ்டமில்லை. ஆனதுபற்றி, 1903-ம் ஆண்டில் நமது மகுடாபிஷேக மகோற்சவத்தில் நடந்தபடி, இப்போதும் நமது கோர்ட்டார்களால் கடூர தண்டனை பெற்றுச்சிக்ஷை யநுபவித்து வருந்தும் பெருங்குற்றவாளிகளுக்குத் தண்டனைகளைப் பூராவாக மன்னித்தோ, அல்லது பலவாறாகக் குறைத்து விதித்தோ, தயை கூர்ந்து கற்பனையிட்டருளியிருக்கிறோம் இப்பேருபகாரத்தை யடைந்து (சந்தோஷிக்கும்) மேற்கூறிய தருமத்துரோகிகள், இதற்குரிய நன்றியைத் தக்கபடி மனதிற பதியக்கொண்டு, இனியப்படித் தரும விரோதஞ் செய்யாமல், கிருகஸ்தமார்க்கமாய்க் காலங்கழித்து வரவேண்டுமென்பது நமக்கு மனப்பூர்வமான கோரிக்கை.

(நமது) ராஜாங்கத்தில் பிரதான பதவிகளை வகிக்க அதிகாரதோரணியும், நிர்வாக சக்தியும் வேண்டியிருந்ததில், இதுவரை அவ்விஷயத்தில் இந்தியரென்றும், ஐரோப்பியரென்றும் ஏற்பட்ட ஜாதிபேதங்கள் காலக்கிரமத்தில் குறைந்துவரவேண்டிய பிரயத்தனங்கள் எப்பொழுதும் நடந்தேதான் வந்திருக்கின்றன. இனியும் இப்படியே நடத்தி வருவதில், இந்திய மகாஜனங்களுக்குள், புத்திமான்களும், காரியநிர்வாகசாலிகளும், வித்தியாப்பியாசத்தை யின்னும் பலமாகச்செய்து, அநுபவங்களை யின்னு முற்றவைத்துக்கொண்டு, பொறுப்பாக அலுவல்களை வகிக்கவேண்டிய (வேறு) யோக்கியதைகளையும தேடி யடைவார்கள். ஆகையால், அவ்வளவிற்கு நம்மனோரதம், இடையறாமலும், தத்தளியாமலும் நடந்தேறிவருமென்னும் நிஷ்கரிஷையும், வரவேண்டுமென்னும் ஆக்கிரமமும் நமக்கு மேலிட்டிருக்கிறது.

இததுரைத்தனம் ஆரம்பமாகியது முதல், (இந்திய) மகாஜனப் பிரதிநிதிகள மூலமாய் ராஜகாரியமாக வேண்டியவகைக்குச் சிறிது சிறிதாகப பிரயத்தனம நடந்துகொண்டேதான் வந்திருக்கிறது. இப்பொழுது அந்த முறையை அதிகரித்து வியாபிகதும்படி செய்யத் தருணம் வந்திருப்பதாயும், அதனால் ராஜாங்கத்திற்குக் குறைவு சிறிதுமில்லையென்றும், நமது பிரதிநிதியான கவர்னர் ஜெனரலவர்களும், நமது சமஸ்தானத்திய மற்றைய மந்திரிமார்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உங்களவர்களிலும் அனேக வருக்கத்தார், பிரிட்டிஷ் ராஜரீகத்தில் புஷ்டியடைந்து வந்திருக்கும் (அனேக) துரைத்தன முறைகளைப் பரிவுடன் சுவீகரித்து, அத்துரைத்தனத்திற்கு வழிபட்டிருக்கும் பிரஜைகள் அனைவரும் ஒரே தாத்தவொன்றும் (அவர்களிடையில தாரதம்மியமாவது, வேற்றுமையாவது காணக்கூடாதென்றும,) சொல்லிவருவதுடன், (இந்தியா துரைத்தனத்திய) சட்டநிரூபணத்திலும், சர்க்கார் அமுலிலும் தங்களுக்கின்னுமுயர்ந்த பதவிகள் வேண்டுமென்று மன்றாடுகிறார்கள். இப்படியிவர்கள் நாடிக்கேட்கும் உரிமைகளை ஏற்குமளவிற்கு இவர்களுககுக் கொடுத்துத் திருப்திபடுத்துவதினால், இப்போது (இந்தியாவில்) ஸ்தாபிதமாயிருக்கும்நமது அதிகாரத்திற்கும், பலத்திற்கும் யோக்கியதையுபருமேயொழியக் குறைவொன்றும் காணாது.

நமது துரைத்தனத்தினாலடையக்கூடியவான நஷ்டங்களையெல்லாம் அடைபவர் நமது குடிகளாகிய மகா ஜனங்களே. நமது துரைத்தனநீதியைக குடிகளாகிய மகா ஜனங்களுக்குத் தெரிவித்தும், அம்மகா ஜனங்களுக்குள்ள சுகதுக்கங்களைத துரைத்தனத்தாராகியு

நமது உத்தியோகஸ்தருக்குத் தெரிவித்தும் வருபவர் (மேனாட்டுக் கல்வியிற்றேறிய புத்திமான்களே.) ஆதலாலிவ்விருதிறத்தாருடனும், நமது உத்தியோகஸ்தர்கள் இதுவரை கூடிப் பழகிவந்ததைவிட இனி அதிகமாகப் பழகி, அடிக்கடியவருடன் கலந்து, ஆலோசித்தேயாகவேண்டிவருவதில், அவ்வளவிற்குத் துரைத்தனம் சோபிக்குமென்பதிற் சந்தேகம் நமக்குச் சிறிதுமில்லை, ஆனது கொண்டு இவவுத்தேசங்களை முன்னிட்டுத் தற்காலம் வெகு ஆக்கிரகத்துடன் நமது மந்திரிமார்கள் சில சட்டங்களை நிரூபித்து வருகிறார்கள். ஆனாலவைகளை விளக்க இது தருணமன்று. அவையெல்லாம் சீக்கிரத்தில் உங்களுக்கு வெளியாகும். ஆனபின் அது, நீங்கள் செய்துவரும உலக யாத்திரையில், உங்கள் காரியமெல்லாம் கைகூடி வெகு நன்மை பயப்பதோர் துறையில் உங்களைக் கொண்டு சேர்க்குமென்று நாம் மனப்பூர்வமாய் நம்பியிருக்கிறோம்.

நமது இந்தியப் பட்டாளங்களுடைய சௌரியமும், ராஜபக்தியும் நமக்கு வெகு நன்றாய்த் தெரியும். ஆதலால், புது வருஷமாரம்பமாகும்பொழுது, அத்தருணத்தில், அவர்களுக்கிருக்கும் தைரியம், விசேஷமான நாயகபக்தி, எந்த க்ஷணத்திலும் முழுமனத்தோடு யுத்தத்திற்குத் தயாராயிருத்தல், முதலிய உத்தம குணங்களை நாம் அறிந்திருப்பதை நமது பட்டாளத்தாருக்கும் உறைக்கும வண்ணம் சாக்ஷியப்படுத்திச் சம்மானிக்கும்படிக் கற்பனையிட்டருளியிருக்கிறோம்.

இந்திய (மகாமண்டலம) க்ஷேமமாயிருக்கவேண்டுமென்பது மகாராணி விக்டோரியா தேவியவர்களுக்கு நெஞ்சிற பதிந்த பிராணபதமாயிருந்த மனோரதங்களி லொன்றாம். 1875-ம் வருஷத்தில் அவ்விராச்சியமெங்கும் விஜயஞ் செய்து திரும்பியபின், நாமும், நாளது வரை அவ்விடத்திய யோகக்ஷேமத்தையும், அவ்விடத்தியவரான மகுடவர்த்தனர், மகாஜனங்கள், முதலியோருடைய மங்கள வாழ்வையும், வெகு அன்போடும், ஜாக்கிரதையுடனும், விசாரித்தே வந்திருக்கிறோம். அந்தப்பிரேமையெக்காலத்திலும் நமக்குக் குறையவே குறையாது. நமதருமைக் குமாராராகிய (மாக்ஷிமை தங்கிய) பிரின்ஸ் ஆப் வேல்ஸூம், அவர் மனைவியாகிய பெருமாட்டியும், கொஞ்சகாலம் உங்கள் மத்தியில் தாமதித்துத் திரும்பி வந்ததில், உங்கள் ஜனனபூமி விஷயத்தில் அவர்களுக்கும் பிரேமை விசேஷித்ததுண்டாகி, அவ்விடத்திய உத்தரோத்தர க்ஷேமலாபங்கள், பிரஜைகளாகிய உங்களுக்குண்டாகும் திருப்தி, ஆகிய இவ்விஷயங்களில், (இவை மேலுமேலும அதிகரிக்கவேண்டுமென்கிற) அக்கறை வாஸ்தவத்தில் மனப்பூர்வமாயிருக்கிறது.

இவ்வாறு ராஷ்டிரவாத்தனராகிய நமது குடும்பத்தவரும், வமிசத்தவரும், இந்தியா விஷயத்தில் மனப்பூரவமாய் இவ்வளவு பிரேமையுடனிருப்பதும், நலத்தைச் செய்யவேண்டுமென்றும், நலத்தையே கோரியும், இருப்பதும், அவரவா தங்களைப் பொறுத்தமட்டில் செய்துவரும காரியமாகமட்டும் பாவிக்கக்கூடாது. ஏனெனில, இவையெல்லாம் யூனைடெட்ராச்சியமாகிய, பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள நமது பிரஜைகள் அனைவர் மனதிலும் சாமான்னியமாய்ப் பதிந்துள்ளதோர் பேரெண்ணமென்றேசொல்லவேண்டும. அதற்குச் சந்தேகம் சிறிதுமில்லை. மேற்கூறிய நமது பிரஜைகள் சகலருக்கும் (இந்தியாவிஷயத்தில்) எண்ணம் அவ்வாறாகவேதானிருக்கிறது.

இந்தியா கவர்ன்மெண்டாருக்கும அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவரும பிரஜைகளுக்கும் ஏற்பட்டுள்ள உறவின் முறைபோல், முற்காலத்தில் அனேக சந்தர்ப்பங்களில், அனேக விடங்களிலிருந்ததாகத் தஸ்தாவேஜு மூலமாய்நமக்குச் செம்மையாய்த்தெரியும அத்தேசவர்த்தமானங்களை யெல்லாம் எவ்வளவு வேண்டுமானாலும் நாம பரீக்ஷித்துப் பார்க்கலாம். இந்த ராசசியபாரம் அவையொன்றிற்கும பருமனிலாவது, பெருமையிலாவது, சிறிதுங்குறைந்ததன்று. ஆகவே இப்பெருஞ் சுமையை நேராக வகித்து, உத்தேசத்தைப்பூர்த்தி செய்வதற்கு முக்கிய சாதனமாகிய விவேகத்தையும், பரஸ்பர மிருக்கவேண்டிய நல்லெண்ணத்தையும், சருவேசுவரன் இருதிறத்தாருக்கும் அளித்துப் பலமனுக்கிரகித்து ரக்ஷிப்பாராக.

## 2. விசுவாமித்திர மகாரிஷி

(65-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்றமாதத்திய சஞ்சிகையில், இம்மகாரிஷிக்கும், வசிஷ்டருக்கும் யாதுகாரணத்தினாலோ விரோதமுண்டாகியதென்று மட்டும் சொன்னோம். அதனால் ஆட்டுக்கடாச்சண்டையில் எரிசெத்த கதையாக 'அரிச்சந்திரன்' முதலியோர் வெகு உபத்திரவமடைந்ததாகவும் கதைகளைச் சுருக்கிச்சொன்னோம்.

ஆனால் படத்திற்காணும் விசுவாமித்திரருடைய கதையைச்சொல்லக் கூடவில்லை. ஆதலாலதையும் சுருக்கிச் சொல்லிவிட்டு, மகாரிஷிகளின் யோக்கியதையை நிதானிப்போம்.

தசரத மகாராஜாவுக்கு வெகுநாள் பிள்ளையில்லாமல் துக்கப்பட்டுக் கடைசியாக யாருடையவோ புண்ணியத்தினால் விருத்தாப்பிய தசையில நாலுமக்கள் பிறந்தார்கள். அவர்களில் ரகுகுலதிலகனான ஸ்ரீராமனும், அவருடைய பிரிய சகோதரனான லக்ஷ்மணனும், வில்வித்தை கற்றுப் பரீக்ஷைகளில் தேறிவருகையில், ஒருநாள சபையில் திடீரென்று விசுவாமித்திர மகாரிஷி வர, அவரை மகாராஜா உபசாரத்துடன் வரவழைத்து, வேண்டியதைக் கேட்டார். தான் செய்யப்போகிற யாகத்திற்கு இடையூறு வராமல் காப்பதற்கு இவ்விரண்டு குமாரர்களையும் அனுப்பும் படியாக மகாரிஷி கேட்கவே, மகாராஜா பிள்ளைகள் பேரிலிருந்த பிரேமையினால் க்ஷத்திரிய தருமத்தை மறந்து மாட்டேனென்றார். உடனே மகாரிஷி வெகு கோபத்துடன், "ஓ ராஜனே, உமது சந்தோஷ மிப்படியானால், இதோ வந்த வழி பார்த்துக்கொண்டு போகிறேன். சூரியவமிசத்திற் பிறந்து, சொன்ன வார்த்தையை மறந்த, நீர் பந்துவர்க்கங்களுடன் சௌக்கியமாயிரும்," என்று சொல்லித்திரும்பினார். உடனே வசிஷ்டர் முதலியோர் மத்தியஸ்தம் செய்து ராமலக்ஷ்மணர்களை யனுப்பியதாகவும், அதனால் தாடகைவதம் முதலிய சில்லரைக் காரியங்களும், கடைசியாகச் சீதையம்மாளை விவாகஞ் செய்துகொண்ட மகா காரியமும், ஆயினவென்று புராணகதை.

தசரதனுடைய சபையில் விசுவாமித்திரர் நின்று தனக்கு ராக்ஷசர்களா லுண்டாகும் உபத்திரவங்களை வர்ணிக்கும் பாவனையாகப் படம் அமைந்திருக்கிறது. பங்காள சீமை நடையுடையை யனுசரித்துச் சித்திரம் அமைந்திருப்பதால், அதை அன்பாறிக. அதனால் இனி நாம விவரிக்கும் பழைய காலத்திலும் மகாரிஷி யிவ்வாறு அங்கி முதலிய வேஷம் பூண்டிருந்தா ரென்று நிச்சயிக்கக்கூடாது. ருக்குவேத மந்திரங்களை வசிஷ்டர், விசுவாமித்திரர், முதலிய மகாரிஷிகளும், அவர் குடும்பத்தவர்களும், பெருக்கி வருகையில், அம்மகாரிஷிகள் எவ்விதமாக உடையுடுத்தார்களோ, ஆபரண மணிந்தார்களோ தெரியவே தெரியாது. தாடிமட்டு மிருந்ததாக ஐதீகமுண்டு.

இவ்வாறு ராமாயணத்தில் காணும் கதையை யொட்டி விசுவாமித்திர வமிசக்கதைகள் முந்திச்சொல்லியவை யெல்லாம் அனேகமாய் நமக்குத் தெரிகின்றன. அரிச்சந்திரன் கதை மட்டும அதற்கு முந்தியே 'பிராம்மணங்கள்' என்னும் வேத பாகங்களில் காணுகிறது.

கதைகளில் நமக்குக் காணுவதையெல்லாம் நிச்சயமென்று நம்பினால அது வசிஷ்டருக்கும் பெருமை விளைவிப்பதல்ல, விசுவாமித்திரருக்கும் விளைவிப்பதல்லவென்று சொன்னோம். அதற்கு ஆதாரமாக நவீனப் பண்டிதர்கள் சொல்லுவதை யிங்கு சுருக்கிச் சொல்லிவிடுகிறோம். நமக்கும் அதுதான் சரியாகக் காணுகிறதென்று சொல்லாமலே யேற்படும்.

ருக்குவேத மந்திரங்களை ஜாக்கிரதையாகப் படித்து அர்த்தத்தை விசாரிப்பதில், அந்த மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு, யாகாதிகளைச் செய்து பெருமைபெற்ற நமது பெரியோர் 'சப்

தஸிந்து' என்று அக்காலத்திலும், 'பஞ்சாப்' என்று இக்காலத்திலும்,வழங்கும்பிரதேசத்தில் வாழ்ந்து வந்தார்களென்பது நிஷ்கர்ஷிக்கப்படுகிறது. 'துலா புராணகதைச்' சிலாக்கியமாகக்கொள்வோர் காவேரி தீரவாசிகளென்று எப்படி நாம் ஊகிக்கலாமோ அதுபோலவென்றறிக.

இந்த 'சப்தஸிந்துப்' பிரதேசத்தில் ஆரியரிருந்தாலும், அவரைச்சுற்றிலும், ஆரியரல்லாத ஜனங்களும், அவர்களையாளும் அரசர்களும் வெகுபெயரிருந்தார்கள். அவர்களுடைய நடையுடையும், தேசலக்ஷணங்களும், தேவதைகளும், வேறாகவிருந்ததில், துவக்கத்தில், ஆரிய தேவதைகளான இந்திரன், அக்கினி, வருணன் முதலியோருக்கு இவர்களுடைய கர்வத்தைப் பங்கப்படுத்தி ஆரியருக்கு நன்மை பயக்கவேண்டியதே முக்கிய காரியமாயிற்று.

ஆதலால் மந்திரங்களில் அநேகம் இக்காரியங்களையே புகழ்ந்துவருகிறது. என்றாலும் வந்த ஆரியர்கள் இவ்விடத்தியவரை விட வெகுதூரம் சங்கியையில் குறைந்தவராதலால், கொஞ்சகாலம் போர்புரிந்து கழிந்தபின், சுற்றியிருப்பவருடன் ஏதோ வொருவிதமாகச் சிநேக பாந்தவ்வியங்கொண்டு காலங்கழிக்க வேண்டியதாயிற்று. ஆகவே ஆரியர்களுடைய தேவதைகளுக்கும், ஆரிய வித்துவான்களாகிய மகா ரிஷிகளுக்கும் புதிய உத்தியோக மொன்றேற்பட்டது. ஏனெனில், அநாரியர், என்றால், ஆரியரல்லாத மற்றைய ஜனங்களுள், சப்த சிந்துவைச் சுற்றிலும், கங்கை பாயும் வளநாட்டிலுமிருந்தவர்கள், கொஞ்சங் கொஞ்சமாக ஆரிய பக்தி யதிகரித்துத் தாங்களும் அந்தத் தேவதைகளை வழிபட்டு, ஆரியரைப் போல் தாங்களும் பெருமையடைய வேண்டுமென்று ஆக்கிரமுண்டாயிற்று.

ஆகவே அந்த ஜனங்களுடைய வேண்டுகோ ளின்படி வசிஷ்டவம்சத்தவருக்கும், விசுவாமித்திர வம்சத்தவருக்கும், மற்றுமுள்ள ரிஷிகளுக்கும், 'உள்ளூர்' மரியாதைகளுடன், வெளிநாட்டிலும் மரியாதை கிடைத்து வந்தன. இப்படி மரியாதை யடைவதற்கு, அவர்களுடைய மந்திரங்களும், தந்திரங்களுமே முக்கிய காரணம். நமது நாட்டில், நம்மிலனேகர் கண்காணச்சில கோயில்களில் நடந்திருக்கும் சீர்திருத்தங்கள் இந்த ரகசியத்தை நன்கு விளக்கும். ஓரிடத்தில் 'ரங்கநாதன்' சுவயம்புவாக உண்டாகிறார். யாருக்காகிலும் சுவப்னமுண்டாகிறது. அவர் மூலமாய் ஆலயமும், பூஜையும் ஏற்படுகிறது. சுற்றிலுமுள்ள ஜனங்கள் தங்கள் மனோ தருமத்திற்கு ஏற்றபடி அந்தக் கோவிலுக்குக் காணிக்கை கட்டுகிறார்கள். அல்லது பலிமுதலியன கொடுக்கிறார்கள். கடைசியாக ரதோற்சவம் வந்ததும் ஆயிரக்கணக்கான ஆடும், கோழியும் வதைபடுகின்றன. இதைப் பார்த்துச் சகிக்காதவரனேகர். அவர்களும் இந்தத் தெய்வத்தை நம்பியவராதலால், இந்தத் துராசாரத்தை யெப்படியாவது போக்கடிக்க வேண்டுமென்று பிரயத்தனப்படுகிறார்கள். உடனே யவர்களி லொருவருக்குச் சுவப்பனமாகிறது. அடுத்த ரதோற்சவத்தில யாராகிலும் பலிகொடுத்தால, அவர்களைப் பலிவாங்குவே னென்று பலருக்கு ஆவேச மூலியமாகச் சுவாமியும் சொல்லிவிடுகிறார். பிறகு நயபயமிரண்டுங் கூடியுபயோகித்துப் பலிநின்று விடுகிறது.

இப்படி நமது கண்ணெதிரில் நடக்குமாறு தான் முற்காலத்திலும் நடந்திருக்க வேண்டுமெனல்தகும். அநாரிய தேவதைகளை யுபாசித்து வருவதற்கேற்ற மந்திரதந்திரங்கள், ஆரியதேவதைகளுடைய உபாசனைக் கிரமங்களைவிடப் பலவிதத்திலும் மோசமாயிருந்தன. ஆதலால், தேசிய ராஜாக்கள் எவ்விடத்திலும் மகாரிஷிகளை ஆசார உபசாரங்களுடன் வரவு

ழைத்து, அவர்களிடத்தில் மந்திரோபதேசம் பெற்று, அம்மார்க்கத்தை யனுசரித்து வாழ வேண்டுமென்கிற ஆக்கிரகம் அனேரிய அரசர்களுக்குள் அதிகரிக்க, அவ்வளவிற்கு மகாரிஷிகளும பெருமையடைந்தார்கள். இவர்களில், வசிஷ்டவமிசத்தவரைச் சிலரும், விசுவாமித்திரர்களைச் சிலரும் புரோகிதர்களாகக் கொண்டதில், விசுவாமித்திரருடைய மந்திரமாகிய 'காயத்திரி,' யென்பது உபதேசத்திற்குமுக்கியயோக்கியமாயிற்று. தவிர யாகஞ்செய்யும்போது, உபயோகப்பட்டுவந்த 'யக்ஞசூத்திரம்' என்னும் பூணூலும் 'காயத்திரி' யென்னும் மந்திரத்துடன சேர்ந்து, இதர ஜனங்களுக்கு ஆரிய யோக்கியதை கொடுக்க ஏற்பட்ட முக்கிய சாதனங்களாகிவிட்டன. நாளதுவரை யவைகள் இந்தியாவெங்கும் பரவித் தாரதம்மிய ரீதியாகச்சிலருக்கு ஒரு பூணூலும்,சிலருக்கு இரண்டு அல்லது மூன்றும், சிலருக்குப் பத்து காயத்திரியும், வேறு சிலருக்கு முப்பத்திரண்டும், வேண்டுமானல் ஆயிரக்கணக்காகவும, ஏற்பட்டு வந்திருக்கிறது. இதைப பாத்தியஸதரென்று சொல்லிக்கொள்ளும் பிராம்மணரில் சிலர்தான் இகழ்ந்துவருகிறார்களல்லது, இதரர்கள் வெகு ஜாக்கிரதையாயப் பாவித்து வருகிறார்கள். யோகேந்திரநாத பட்டாசாரியரென்னும பங்காளப்பெரியவர், நமது நாட்டில் காணும்ஜாதியமங்களைப்பற்றி யெழுதிய புஸ்தகத்தில, ஆரியர் வருமுன் இந்தியாவில மத விஷயமாக ஐகமத்தியம இல்லவே யில்லையென்றும், பிராம்மண தேவதைகளும, பிராமமண மந்திரங்களும், பிராம்மண தந்திரங்களும் தான் ஏதோ ஒருவாறு கூடியமட்டில் இந்த நாலுகோத்திர ஜனங்களுள் பரஸ்பரவிரோத மில்லாமல் செய்துவிட்டதென்றும் சொல்லுகிறார். இநத விஷயத்தை விவரிக்க இது தருணமல்ல. ஆனல் இது வாஸ்தவமாகில், இதற்கு மூலகாரணம் மகா ரிஷியான விசுவாமித்திரருடைய மந்திரமும் தந்திரமுமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஏனெனில் அம்மகாரிஷி 'பாரதர்கள்' முதலிய சுற்றியிருந்த அரசரெல்லோருக்கும், காயத்திரி மந்திரத்தை யுபதேசித்து, வைதிக தேவதைகளை வழிபடும் உபாயமும் சொல்லிவைத்தார். இப்படித் தாராளமாய்ச்செய்துவந்ததில் என்ன குறைவுண்டாயிற்றோ தெரியாது. ஆனல் இது வசிஷ்ட வமிசத்தவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே யிவர்களுக்குள் மாச்சரிய மதிகரித்து வந்தது.

இரண்டு வமிசத்தவரும் பிரபல ரிஷிகளாதலால், மாச்சரிய மதிகரித்து வந்ததில், பலசங்கடங்களுக்கிடமுண்டாயின. ஆதலால் விசுவாமித்திரர் மூலியமாய் வசிஷ்டருடைய புத்திரர்களுக்கும், வேறு அனேகருக்கும் விநாசமுண்டானதாக வொருகதையுண்டாயிற்று. வசிஷ்டர் முதலியோர் விசுவாமித்திரரை க்ஷத்திரியரென்றும், காமக்குரோதாதிகள் முற்றியவரென்றும், சொல்லிதூஷித்து வந்த கதையுமிவ்வாறுண்டாகியதே. என்ன சொன்னபோதிலும் நடந்ததை மறைக்க வொருவராலுமாகாதாதலால், திரிசங்கு முதலிய கதைகளில், அனேரியர் ஆரியரான கதையும், பிராம்மணப் பிள்ளையை ரக்ஷித்ததில், யாகாதிவிஷயங்களில் மகாரிஷியின் அபிப்பிராயமுநகாணலாமென்பது நிச்சயம்.

காயத்திரியென்பது மகா மநதிரமென்பதிற் சந்தேகமேயில்லை. இந்தியாவில் வேறு குருக்கள் பிற்காலத்தில் உபதேசித்த மந்திரங்களையும், இநதியாவைவிட்டு இதரதேசங்களில், கிறிஸ்தவர் முதலியோர் சொல்லிவரு மந்திரங்களையும் விசாரிப்போம். ஒவ்வொரு மதஸ்தருக்கும், அவரவர் குருவுபதேசம் பெரியதுதான். அதை நாம் நிராகரிக்கவில்லை. "அவளவளுக்கு அவளவன் புருஷனே பெரியோன்," என்பதிற் தடையேயில்லை. ஆனலும, காயத்திரியின் சாமான்னிய அர்த்தத்தை விசாரிக்குமிடத்து, அதற்கு மேற்பட்டமந்திரம் இதுவரையுண்டாகவில்லை யென்பது நிச்சயம். ஆனல்

மற்ற அனேக காரியங்களில் நாம் செய்துவந்திருப்பதுபோல், இதையும் மறைத்து மறைத்துவந்து, கடைசியாக இதன் பொருளை நாமுமறியாமல, பிறரு மறியவொட்டாமல், எழுத்தைநம்பி யேதேதோ வாய்க்குவந்தபடி பேசிக்கொண்டு, இந்தத் தசையை யடைந்துவிட்டோம்.

இக்காலத்தில் நமக்குள் தீண்டாதவரென்றிருக்கும் ஐந்தரைக்கோடி ஜனங்கள் பழைய காலத்தில் 'தஸ்யு'க்கள் இருந்த மாதிரியே யிருக்கிறார்கள். இவர்களை யினிநாம் எப்படியோ போகட்டுமென்று விடுவது பிசகு. இத்தனை நாள் இப்படிவிட்டு வந்துதான் நாமித்தசையை யடைந்தது. இவர்களை யுத்தாரஞ்செய்யவேண்டிய பிரயத்தனம் சுமாராக நடந்துவருகிறது. ஆனாலப்படிப் பிரயத்தனப்படுவோர் அவர்களுக்கு ஜீவனோபாயமட்டுந்தான் வேண்டுமென்று பாடுபடுகிறார்கள். நமக்கோவென்றால், அத்துடன் தெய்வவிஷயமுஞ் சிறிது சம்பந்தப்படவேண்டுமென்று காணுகிறது. ஏனெனில், இவ்விஷயத்தில் இவர்களுக்கு இப்போதிருக்கிறபடி வெரே கதிதான் உள்ளது. ஒன்று, இவர்கள் மகம்மதியராகவாவது, கிறிஸ்தவராகவாவது போகவேண்டும். இல்லாவிட்டால், பழைய கறுப்பன் கறுப்பனாகவே யிருக்கவேண்டும். இரண்டுபக்ஷமும் நமக்கு விரோதமே.

நாம் மேலே கூறியதில், சனாதன தருமமிப்படி யிருக்கவில்லையென்று காணுவதால், விசுவாமித்திர வம்சத்தாரான நம்மவர் இவ்விஷயத்தை நன்றாயாலோசித்து 'இப்பாவங்களுக்கு' ஜீவனோபாயத்துடன், சன்மார்க்கமும், சற்குருபக்தியும் உண்டாவதற்கும் உபாயமதேடவேண்டும். காயத்திரியையே பழையபடி யுபதேசிக்கவேண்டுமென்று நாம் சொல்லவரவில்லை. அது சாத்தியமுமன்று. பிற்பட்டு வந்தவர்களில் அனேகர் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து இவ்விஷயத்தில் அனேகவுபாயங்களைச் செய்திருக்கிறார்கள். சித்தர்களில் 'பஹூரல்' என்ற தீக்ஷை வெகுசுலபம். சர்க்கரை கலந்த நீரைக் கத்தியால் போகவரக்கலக்கி, முகத்திலும, தலையிலுமிறைத்துச் சில மந்திரங்களைச் சொல்லிவிட்டால், எவனும் சீக்கனாகலாம். இது போலேதாகிலும் யுக்திசெய்து, பெரும்பாலாரைக் காப்பாற்றவேண்டியது நமது கடமை. வைதிக மார்க்கமட்டும போதாது.

காயத்திரி மூலியமாய் விசுவாமித்திர மகாரிஷி ஆரிய மதத்தைப் பிரபலப்படுத்தியது போலவ பின்னிட்டு வந்தவரனேகர் பக்தி மார்க்கத்தைப் பிரபலப்படுத்தி வந்திருக்கிறார்கள. அது இந்துக்களுக்குமட்டுமேயல்லாமல், இந்து மகம்மதியரிருதிறத்தாருக்கும் சமாசமாகவும் சிலர் செய்யப் பிரயத்தனப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் முக்கியமானவரிருவர்—கபீர்தாஸரும், நானகபாவாவும. ஆதலால் விசுவாமித்திரரையடுத்து, இவ்விரு பெரியோருடையவும் சரிதங்களையும், சித்தாந்தங்களையும் விளக்குவோம்.

---

'பாடிப்பாடிக் குத்தியபோதிலும் பதர் அரிசியாகாது' என்பது நமது முன்னோர்வசனம். ஆனால் அமெரிக்காவில் பாடிப்பாடிப் பால்கறந்ததால், மாடுகளுக்குப் பால அதிகமாகவும், அதிக ருசியுள்ளதாகவும் சுரப்பதாயும், அதனால் ஒரு பால்காரி நன்றாய்ச் சம்பாதித்துச சுகப்படுவதாயும் உதயதாரகை மூலமாய்த் தெரிகிறது. அமெரிக்காவில் எத்தனையோ அற்புதங்களிருப்பது மெய்தான். ஆனால் பாட்டுப்பாடி, அம்மூலியமாய்க் கைதிகளுக்கு நற்புத்தியுண்டாக்குவதும், மாடுகளுக்குப்பால் அதிகமாய்ச் சுரக்கச் செய்வதும், அமெரிக்கருக்குக்கூட ஆச்சரியமுண்டாக்கக்கூடிய அற்புதங்களாம். இப்படிச் சொல்லுவதில், "கான ரசத்தைப் பசுவும் அறிகிறது, சிசுவும் அறிகிறது, பாம்பும் அறிகிறது" என்று நம்முன்னோர் சொல்லியதையும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய வேணுகான மகிமையையும் நாம் மறந்ததாகச் சொல்லுவதற்கில்லை.

## கவலைவகைக் காண்டம்

### 1. தென்னிந்தியப் பிராணிவர்க்கம் சாமான்னிய விசாரம்

பூச்சிப் புலவர்

இந்தியர்களாகிய நம்மவர்களுக்குச் சில தோஷங்கள் வெகு நாளையவைகள். முதலாவது, தம்மைச் சுற்றியிருக்கும் மனிதவர்க்கத்தாரைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும்தெரியாது. தெரிய வேண்டுமென்கிற அக்கரையுமில்லை. தெரிந்தவாகளென்று பெயாபோட்டுக் கொண்டிருக்கும் வைதிகர்களைக் கேட்டால, பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திராதிகளைக்குறித்துக் காரியத்திற்குதவாத பேச்சுத் தவிர வேறு சங்கதி வருவதில்லை. லௌகிகரையோ கேட்க வேண்டியதேயில்லை.

இரண்டாவது, மனிதஜாதி யொழித்து, மற்றைய பசு, பக்ஷி, மிருகாதிகளையும், கிருமி, கீடாதிகளையும், பற்றிப்பேசப் புகுந்தாலோ இன்னும் மோசந்தான். அவைகளைப்பற்றிக் கவனிப்பவர் நமது ஜனங்களுக்குள் இல்லவேயில்லையென்று சொல்லிவிடலாம். இவ்விஷயத்தில் நமக்குக் கண்ணிருந்தும் பலனில்லை, காதிருந்தும் பயனில்லை. குருடும, செவிடுமாக விருந்தே தலைமுறை தலைமுறையாகக் காலங்கழித்து வந்திருக்கிறோம. அதுமட்டுமல்ல, அப்படி வருவதைப் பெருமையாகவுங் கொண்டிருக்கிறோம.

ஆகிலும், ஊர்வன, நகர்வனவாகிய பூச்சிவர்க்கத்தை ஒருதரமில், இந்தியாவில் விசேஷித்துக் கவனித்து வந்தவர் ஜைனரும, அவர்களுக்கிரண்டாவதாகப் புத்தருமென்னலாம். ஆனால் அது ஜீவஹிம்ஸை செய்யக் கூடாதென்கிற ஒருதருமத்தை முன்னிட்டது. ஆதலால், நாம் உத்தேசித்திருக்கிற காரியத்திற்கு, அதாவது, பிராணி வர்க்கங்களுடைய ரகசியங்களையும், அவைகளால் நமக்குண்டாகும் நன்மை தீமைகளையும், வேண்டியகாலத்தில் தக்க பரிகாரங்களையும், அறிவதற்கு, இதனால் ஒரு பிரயோஜனமுமில்லை.

இக்காலத்தில், ஜைனருடைய ஜீவகாருண்ணியத்தினால், 'பிஞ்சராபோல்' என்னும், 'பிராணிசத்திரம்' என்பது ஒன்றுதான் சிலாகிக்கத்தக்கதாக ஏற்பட்டிருப்பது. எருது, குதிரை முதலிய ஜந்துக்கள் வயதாகி, அல்லது வியாதிபற்றி, காரியத்திற்கு உதவாவிட்டால், அவைகளைச் சுட்டுவிடுவது மேனாட்டுச் சம்பிரதாயம். அப்படிப்பட்டவைகளை கிழவில் ஓரிடத்தில் கட்டி, ஜீவதசை முடிவாகிறவரை புலனுந் தண்ணீருங்கொடுத்து வருவது, இந்து சம்பிரதாயம், அதிலும் விசேஷித்து, ஜைனசம்பிரதாயம். ஆனால ஜைனருடைய ஜீவகாருண்ணியம் இக்காலத்தில் சில விஷயங்களில் சிரிப்புக்கிடமாகவும், சில விஷயங்களில் நிந்தனைக்கிடமாகவும், ஆகியிருக்கிறது.

நல்ல ஜைன சந்நியாசிகள் வெளியே போவதைப் பார்த்திருப்பவர் நம்மில் அனேகமாய்க் கொஞ்சம் பெயர்தான். அவர்கள் கண், மூக்கு, வாய், காது, எல்லாவற்றையும் நன்றாக மூடிக்கொண்டு, கண்மட்டும் தெரியும்படி விட்டுக்கொண்டு, மயிற்றோகையைக் கையில் வைத்துக்கொண்டு, அடியெடுத்து வைக்குமுன் தெருவைத்துடைத்து விட்டுப்போவது சாதாரணம். அப்படிப்போவதற்கு அர்த்தம் விளங்குகிறதல்லவா? காதில் ஏதாகிலும் பூச்சி புகுந்து குடைந்தால், நாம் உபத்திரவம பொறுக்காமல் அதை விரலால் நசுக்கிக் கொன்றுவிடுகிறோம். இதுபாபம். இப்படியே மற்ற விஷயங்களிலும. ○

பம்பாய்ப் பிரதேசத்தில் சில சமயங்களில் ஜைனர்கள் பூச்சிகளுக்கு விருந்திடுவதுண்டென்று கேள்வி. அதாவது, தாங்

கள் கட்டிவைத்திருக்கும் 'பூச்சிக்கொட்டத்தில்' இரண்டு மூன்று மனிதரைச் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைக் கொடுத்து, ஒருராத்திரி பூராவும் தூங்கச்செய்வதாம். இவர்கள் குடி வெறியினால், மெய்ம்மறந்து தூங்கிவிட, அக்காலத்தில் கொட்டத்திலுள்ள, கொசு, உண்ணி,முதலிய ஜந்துக்கள், இவர்களை கிர்ப்பயமாகக் கடித்து ரத்தத்தைக் குடித்துத் திருப்தியடைகின்றன. இதற்குப் பிரதியாக, மறுநாட காலையில் அவர்கள் தக்ஷிணை பெற்றுக் கொண்டு போகிறார்களாம். இது பிராணிகள் விஷயத்திலுள்ள கருணை முற்றியதனால் நமக்குக்கிடைத்த பலன்! தவிர ஜைனர்கள் கிருஷி விஷயத்தில் அதிகமா யிறங்கமாலிருப்பதும் இது காரணம்பற்றியே. உழுவது முதலிய கிருஷிக்காரியங்களில், புழு பூச்சிகளை நாம் வேண்டியமட்டில் கொன்றுவிடுகிறோமானது பற்றி, அதையவர்கள் சிரேஷ்டமாகக் கொள்ளுவதில்லையென்று வதந்தி. ஆனாலபிறர் அக்காரியங்களைச் செய்து பண்டங்களை விற்றால், அதை வாங்கி வியாபாரஞ் செய்வதற்கு அவர்களுக்கு ஆக்ஷேபமொன்றுமில்லை. இமமாதிரி விசித்திரங்கள் எங்குமே யிருக்கின்றனவென்றாலும், இவ்வளவு விசித்திர மெஙகு மில்லையென்றே சொல்லவேண்டும்.

இவ்வாறு நாம் நம்மைச் சுற்றியிருக்கும் மனிதரையுங் கவனியாமல், மற்ற பிராணிவர்க்கங்களையுங் கவனியாம லிருப்பதற்குத தக்க பலனில்லாமற் போகவில்லை. மனிதர் விஷயத்திலோ,• இந்தியாவிலிருக்கும், ஜாதி, மதம், பாஷை, நடையுடை முதலிய பேதங்களும், பரஸ்பரவைரமும்,சரியானபலன். ஆதலாற்றான் இந்தக் கரும பூமியில ஐகமத்தியமென்பதைக் கனவிலும் சாத்தியமென்று நினைப்பதற்கில்லையெனச் சிலர் சொல்வதற் கிடமுண்டாகிறது.

மற்றைய பிராணிவர்க்கங்களை நாம் கவனியாமல் விட்டதற்கும் பலன் நமக்கில்லாமற் போகவில்லை. இப்போது சுமார் நாற்பது அல்லது அதிகப்பட்ட வயதுள்ளவாகளெல்லோரும, 1877-8-ம் வருஷத்திய பஞ்சத்தையும் அதனாலுண்டான கஷ்டங்களையும செம்மையாயறிந்திருப்பார்கள். அக்காலத்தில மழையில்லாமலோ, காலததிற் பெய்யாமலோ, விளைச்சல் கெட்டுப்போகக், கொஞ்சநஞ்சம எங்கேயாவதிருந்ததையும், வெட்டுக்கிளிகள் கூட்டங்கூட்டமாக வந்து, வைகாடுமுதல் மஞ்சக்குப்பம் வரையிலும், ஐதராபாத்துமுதல் கன்னியாகுமரி வரையிலும், எங்கேபார்த்தாலுஞ் சூரியனை மறைத்துப் பறந்து, பூலங்களில்விழுந்து, தான்னியம், புல் பூண்டு எல்லாவற்றையும நாசமாக்கிவிட்டதை நினைக்க, இன்னும் நடுக்கமுண்டாகிறது. இதற்குமுன்னு மிப்படியிருந்திருக்கலாமென்றாலும், இவ்வளவு மோசமாகவில்லை. இதற்குப்பின்னும 1905—6-ம் வருஷத்தில் பம்பாய்ப் பிரதேசத்தில் வெட்டுக்கிளியால் பயிருக்கு வெகு சேதமுண்டாகித்தானிருக்கிறது.

சென்ற பன்னிரண்டு வருஷங்களாக மகாமாரி யுபத்திரவத்தினால் ஜனங்கள ஆயிரக்கணக்காய் இறந்துபோவதைக்கண்டு, அதன் ரகசியத்தை டாக்டர்கள் விசாரிக்க, எலிகளால் தான் இவவுபத்திரவம் இவ்வளவு பிரபலமடைகிறதென்று இபபோது நிஷ்கரிஷையாய்த் தெரிகிறது. ஆகவே எலி வேட்டையாடுவதற்காக ஒரு பிரபலச் சைன்னியம் தயாராகி யெங்கும் சம்ஹாரம் நடந்து வருகிறது.



வெட்டுக்கிளி (உருவம் உள்ளபடி)



வெட்டுக்கிளி (இறக்கை விரிந்து)



கறையான்—ராணி



ஈசல்



கறையான்—புற்றுவேலை

மழை பெய்ந்து ஒய்ந்த சமயத்திலும், வேறு சமயங்களிலும் புற்றுகளிலிருந்து ஈசல் கோடி கோடியாய்ப் புறப்பட்டு நம்மைச்சூழ்ந்து உபத்திரவிக்க, அச்சமயத்தில் அதைப் பொறுக்கமாட்டாமல் திட்டிவிட்டு முசுக்குப் போட்டுக்கொண்டோ, வேறு விதத்திலோ அந்த ஈதிபாதையைத் தொலைக்கிறோம். அவ்வாறே கறையானுபத்திரவ மேலிட்டால், அதைத்திட்டியோ, பரிகாரந் தேடியோ, வருகிறோம். பரிகாரந் தோன்றாவிட்டால் பத்திரிகைகளுக்கெழுதி யென்ன செய்கிறதென்று வெகு ஆவலாய்க் கேட்கிறோம். அல்லது நமது விதியை நொந்து கொள்ளுகிறோம்.

அனேகமாய் நமது காதருகில் வந்து, எவ்வளவு வேண்டாமென்று அகற்றினாலும் கேளாமல், காதிற் கினிமையாகப் பாடியும், ஆடியும், கடித்தும் வந்து, நம்மைத் தூங்கவொட்டாமலும், வேலைசெய்யவொட்டாமலும், உபத்திரவப்படுத்துகிற 'கொசு' என்கிற, ஒரு பெரிய ஜந்துவை நாமெல்லோரு மறிவோமல்லவா? ஆனாலிதனா லுபத்திரவப்படுகிறோமேயொழிய, இதன் வாழ்முறையை நாம் விசாரித்தோமில்லை. இது எப்படி யதிகரிக்கிறது, எப்படி யுண்டாகிறது, இதை யோட்டும் வகை என்ன, சோற்றுக் கற்றாழையைவிட வேறு பரிகாரமுண்டா, என்னு மிவ்விஷயங்களை நாமெப்போதாகிலுஞ் சிந்தித்து உபாயமேதாகிலுஞ் செய்து பார்த்தோ மென்பதில்லை.

இப்படி நம்மைச் சுற்றிலு மிருந்து, பிரதிக்ஷணமும் விடாமல் உபத்திரவிக்கும் ஜந்துக்களையே நாம் லக்ஷியஞ் செய்வதில்லையென்றால், நம்முடன் அவ்வளவு தூரம் பழகுவதற்கிடமில்லாத மற்றைய ஜந்துக்களைப்பற்றி நமக்கு ஒன்றுந் தெரியாதிருப்பதற்குக் கேட்பானேன்?

பசு, பக்ஷி, முதலியவைகளைக் குறித்து நமக்கொரு சங்கதியும் நிச்சயமாய்த் தெரியாமலிருப்பதற்கு வேறு சாக்ஷியம் வேண்டுவதில்லை. அவைகள் விஷயத்தில் நாமுண்டாக்கியிருக்கும் கதைகளே போதுமானவை. குரங்கு, சர்ப்பம், முதலியவை தெய்வங்களாகிவிட்டன. சிங்கம், புலி முதலியவைகளைக் கொண்டு கதைகளுண்டாக்கியிருக்கிறோம். குளவி பச்சைப்புழுவைக் கொட்டித் தன்னிற மூதுவதாக நிச்சயித்து விட்டிருக்கிறோம். வேறு அனேக வகைப்பூச்சிகளையோ, துற்குறிகளாகக்கொண்டு, ஈதும்மியதையும், எறும்பு வலமாவதையும் கவனித்து வருகிறோமல்லது, அவைகளைப்பற்றியறிய வேண்டியவைகளை யறிய மனமுமில்லை, சௌகரியமுமேற்படுவதில்லை.

இவ்வாறாக ஸ்தாவரஜங்கம ரூபங்களாய் நம்மைச் சுற்றியிருப்பவைகள் அனைவற்றையும் எப்படியோ போகட்டுமென்று விட்டுத் தலைமுறை தலைமுறையாக நிர்விசாரமாய்க் காலங் கழித்து வந்திருப்பது சில விஷயங்களில் இர்

நாட்டிற்கே சிறந்ததென்னவேண்டும்.

என்றாலும் ஈசுவர சிருஷ்டி விசித்திரங்களைப் பிராணி வர்க்கத்திலும், செடி முதலிய வர்க்கத்திலும் பார்த்து ஆனந்திக்கவேண்டுமென்றால், அதற்கு உஷ்ண ராச்சியங்களிலொன்றாகிய நமது தேசம் எவ்வளவோ நன்றாயமைந்திருப்பதாம். இம்மாதிரியிடங்களில்தான் ஜீவராசிகள் பலவாகியும், ஒவ்வொரு வகையிலும் பல விசித்திர லக்ஷணங் கூடியனவாகியுமிருப்பது. பிரதிநிமிஷத்திலும் நம்மைச்சுற்றியெத்தனையோ லக்ஷம் ஜீவராசிகள் பறந்தும், பாடியும், ஆடியும், பிறந்தும், இறந்தும், போகின்றன. ஆனால் அவைகளைக்கொண்டு நமக்காக வேண்டியது ஒன்றுமில்லை!

வேறு சில விடங்களில் பூச்சிகளால் உபத்திரவமுண்டானால், அவைகளுக்குப பரிகாரமாகச் சாந்தி செய்வதுண்டு. இது வெகு புராதனக்கிரமம. ஜனமேஜயன் சர்ப்பயாகஞ் செய்ததும், வேறு யாரோ ஒருவர் 'எறும்பு யாகம்' செய்ததும வெகு நாளைய சங்கதி. இக்காலத்திலும் மலையாளததில ஓர் சத்திரத்தில் எறும்பு உபத்திரவம் பொறுக்கமாட்டாமல், அதற்குப்பரிகாரமாகச் சாநதிசெய்து போஜனமும தக்ஷிணையும் கொடுததாகச் சமாசாரம. ஆனால எறும்பின் உபத்திரவமட்டும குறைந்ததாகக் காணவில்லை. கலிகாலததிற்கு ஏற்ற பரிகாரம் தேடவேண்டுவதே விவேகிகள் செய்யுங் காரியமென்று நமபோலியர் சிலருக்குக் காணுகிறது. சாநதிக்கும், தக்ஷிணைக்கும பிரதியாகத் தேங்காய்த் தொட்டியிலிருந்து இறக்கும் தைலத்தைக் கட்டிற்கால் முதலிய விடங்களில மோதிரமாக இரண்டுமாதங்களுக்கு ஓர்முறை தடவிவருவது நலமென்று நம்போலியர் சிலருடைய அனுபவம்.

இப்படியிருப்பதனால, பூச்சிவர்க்கங்களால் நமக்காவது, நமதுடைமைக்காவது எபபொழுதாகிலும உபத்திரவம நேரிட்டால், அதற்குப் பரிகாரம தேடாமல, அனுவசியமாகப்பயந்து நடுங்குகிறோம். வருங்காற் காப்பதைவிட வருமுன் காப்பது சிரேஷ்டம. வந்தபின் காப்பதைவிட வருங்காற் காப்பது சிரேஷ்டம். சும்மாயிருந்து தவிப்பதைவிட, வந்த பின்னாவது பரிகாரம்தேடுதல் நலம். இப்படிக் கிரமமிருப்பதால், நமக்கும நமதுணவிற்குதவும் பண்டங்களுக்கும் வைரிகளாகிய பூச்சிகளைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொளளுதல் நலம். பூச்சியென்பதில், பக்ஷிமிருகாதிகள், புழு, கீடம முதலிய சகலமுமடங்கும. அவைகளுடைய வாழ்முறைகளையும், உறை விடங்களையும், அவைக ளதிகரிப்பதற்குக் காரணங்களையும், அவற்றிற்குத் தெரிந்தவரை பரிகாரங்களையும் சுமாராக அறிந்து கொண்டால், மேலுமேலும் யுக்தியை உபயோகித்து இவ்வறிவை விருத்தி செய்துகொள்ளுவதற்கு அனுகூலமுண்டாகும். இதை யுத்தேசித்துத் தென்னிந்தியாவில் சாமான்னியமாய்க் காணும் பூச்சி வர்க்கங்களையே முக்கியமாகக் கொண்டு இனி ஒழியும்போதெலலாம் எழுதித் தக்க சித்திரங்களுடன் விளக்கிவருவதாக யோசனை செய்திருக்கிறோம். ஆனால ஒருவராலேயே பெருங்காரியமாக வேண்டுவது அசாத்தியம். பரீக்ஷைக் கிரமங்களைச் சற்று நாம் விவரித்தபின ஆங்காங்குள்ளவர்கள் கண்ணைத் திறந்து அவ்வாறே பரீக்ஷை செய்யப் புகுவார்களாகில் காலக்கிரமத்தில் அநேக ரகசியஙகள் வெளியாகும்.

---

## சுதேசமித்திரன்

### பத்திரிகையின் அபிப்பிராயம்

தமிழ்ப் பாஷை விருத்தியடைவதற்கும், தமிழ் மக்கள நலம் பெறுவதற்கும் இப்பத்திரிகை ஓர் சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ்வொருவர் கையிலும் இந்தப் பததிரிகை இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்.

## 2. பாரதவருஷத்திய ஔஷதங்களும், ஔஷதச் சரக்குகளும்

(71-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

நாம் எடுத்துக்கொண்ட இரண்டு பெரியவிஷயங்களில் தேசிய ஔஷதங்களைக் குறித்துக் கொஞ்சம் சொன்னோம். அது நேராவது நாம் மேற்சொல்லியபடி நீடித்த காலங்கழிந்து ஆகவேண்டியிருப்பதால் அதைவிட்டு ஔஷதச் சரக்குகளைத் தயார்செய்வது, என்றால், நமது வைத்தியர்களுக்கும், அவர்களைவிட நமது மத்தியிலிக்காலத்தில் தழைத்தோங்கும் சர்க்கார் ஆஸ்பத்திரிகள், தர்ம ஆஸ்பத்திரிகள் முதலியவைகளுக்கும், உதவும் படியாக, இத்தேசத்திலுண்டாகும் வேர், தழை முதலியவைகளைத் தயார் செய்வதாம். இது இப்போது வெகு அவசியம். சுலபத்திலும் சாதிக்கக்கூடியது. இப்போது சில வருஷங்களாக அனேக சாமான்களை யிங்கேயே செய்யவேண்டுமென்று பிரயத்தனம் நடந்து வருகிறது. சவர்க்காரம், நெருப்புப்பெட்டி, மெழுகுவர்த்தி, கண்ணாடிச்சாமான், முதலியவைகளுக்காக நமது குமாரர்களிலனேகர் சீமைசீமையாகப் போய்த் தொழில் கற்றுவருகிறார்கள், அவர்களுக்குச் சகாயமும் சுமாராகக் கிடைத்துவருகிறது. ஆதலாலிதுதான் சரியான முகூர்த்தம். யாராகிலும் சிலர் இந்த விஷயத்தையும் யோசித்து இதற்காகச் சில குமாரர்களை யனுப்பித் தொழில் தெரிந்து வரும்படி செய்தால் அவர்களும் பிழைக்கலாம். வேறு அனேகரும் பிழைக்கலாம். ஔஷதம் வேண்டியவருக்கும் விலை சலீசாகலாம். அதெப்படியென்பதைச் சற்று கவனிப்போம்.

நாம் இப்பிரகரண ஆரம்பத்திற் கூறியபடி நமக்கு வேண்டிய ஆகாரம், உடுப்பு இவைகளுக்கு வேண்டியவைகளை யிங்கேயே செய்வித்துக்கொண்டும், விளைவித்துக்கொண்டும் வருவதற்குப் பல நியாயங்களிருக்கின்றனவல்லவா? அவைகளைவிடப் பலத்த நியாயங்கள் ஔஷத விஷயத்திலிருக்கின்றன. முதலாவது, வியாதிவகைகள். இவைகள் பூசாரம், ஜனங்களுடைய ஆகார வியவகார முறை முதலிய பல காரணங்களைப்பற்றி யுண்டாவன. கானல முதலிய இடங்களில விஷச்சுரம் அதிகம். மலையாளத்தில காயல்கள் ஓரமாகவும், மதிராசு முதலிய இடங்களிலும் 'யானைக்கால்' முக்கியம், வைநாடு முதலிய விடங்களில் வயிற்றில் கட்டி பிரபலம். இது போலவே சில ஜாதியாருக்குள் சில வியாதிகள் பிரபலம். இவைகளுக்கெல்லாம் காரணங்கள் சரியாகக் காணக்கூடியவை. " மொத்தத்தில் இந்தியாவைப்போன்ற உஷ்ண ராஜ்யங்களில எத்தனையோ விசித்திரங்களிருப்பதுடன், விசித்திரமான வியாதிகளுமிருக்கின்றன.

ஆனால் கருணாநிதியாகிய பகவானுடைய லீலை யற்புதமாக விருக்கின்றது. பயத்தை யவரே யுண்டுசெய்பவரானால், பயநிவாரணத்தையும் அவரேதானுண்டாக்குகிறார். ஆதலாலுஷ்ண ராஜ்யங்களில் வியாதிகள் விசித்திரமானால், பரிகாரங்களும் விசித்திரமே. இதைச் செம்மையாய்க் கவனித்து வந்திருக்கும் பெரியவரொருவர், "வியாதி யெவ்விடத்திற்காணுகிறதோ, அங்கேயே பரிகாரமுமனேகமா யிருக்கிறது," என்கிறார். உதாரணமாக, மேற்சொல்லியபடி வைநாட்டில் கட்டி யதிகமென்றால் அங்கேதான் அசுவகந்தக் கிழங்கும் வெகு நேர்த்தியாகக் கிடைக்கிறதென்றும், அதை யுபயோகப்படுத்தி வருபவருக்கு அந்த உபத்திரவம் நீங்கிவிடுகிறதாகவும் வதந்தி

இது ஒரு பெரிய ரகசியம். ஆதலால், செலவு சுருங்குதல் முதலிய வேறு அனேக காரணங்களிருப்பதை நாம் கவனிக்காவிட்டாலும், இந்த ஒரு காரணத்திற்காகவே நமது ஔஷதச் சரக்குகளைப் பரீக்ஷிப்பதற்கும், அவைகளில தற்காலமுபயோகப்படுபவைகளை யவ்வவ்வுபயோகத்திற்குச் சித்தப்படுத்துவதற்கும், கம்பெனி

கள் ஆகவேண்டும். தக்கபடி யாரம்பித்துத் தொழில் தெரிந்தவர்களைக்கொண்டு காரியம் நடத்தி, அச்சரக்குகளை விலைப்போகும்படி செய்வது இனிப் பிரயாசமன்று. இந்தியா கவர்ன்மெண்டார் சமீபகாலத்தில தங்களுக்கு வேண்டிய சகல சாமான்களையும் இங்கேகிடைப்பதானல வாங்குவதற்குச் சித்தமாயிருப்பதாகப் பகிரங்கப்படுத்தி யிருக்கிறார்கள். அவைகளில ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய சாமான்னியச் சரக்குகள் சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமானவை யென்று சொல்லுகிறார்கள். இவைகளனேகமாய், நிலையாவாரை, எட்டிக்கொட்டை, இஞ்சி, இந்திய அபின்ரி, போன்ற இத்தேசத்தில் மலிந்துகிடக்கும் சரக்குகளேயாம். இவைகளைப் பிரான்சு முதலிய தேசங்களுக்கனுப்பி மறுபடித் திராவகமாகவும், சத்தாகவும், சீசாக்களில் வரவழைப்பதில் ஒன்றுக்கு நூறு விலையாகி விடுகிறது.

இதுவரை யிதற்கு என்ன நியாயமிருந்தாலு மினியுமிப்படியே யிருப்பதற்கு நியாயமில்லவேயில்லை. நமது சர்வகலாசாலைகளில பி. ஏ. படித்துத் தேறியவர்களி லனேகருக்குப் பதார்த்த குணங் கண்டுபிடிக்க வகைதெரியும். கொஞ்சமதிகமாகத தெரியவேண்டியதைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். சரக்கு வகைகள், அவைகளைத் தயாரிக்கவேண்டிய முறைகள், இவைகளை நம்மில் எல்லா யோக்கியதையும் பெற்று விளங்கும் டாக்டர் ஸ்ரீமான் எம்.வி. நஞ்சுண்டராவ் முதலியோர் வேண்டியமட்டில் கற்றிருக்கிறாகள். தொழிலை யாரம்பிக்க, வேறு சில விஷயங்களில் வேண்டியிருப்பதுபோல, 10-லக்ஷம், 20-லக்ஷம், ஆரம்பத்தில் வேண்டியதுமில்லை. இப்படி யெல்லாச் சௌகரியமுமிருப்பதில், இனி நெடுநாள் நல்முகூர்த்தம் பார்த்திருப்பது நமக்கு நல்லதன்று.

1860-ம்௵த்திற்குப் பின் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பலமுறை இவ்விஷயத்தில் பிரயத்தனஞ்செய்து இந்தியாவில் தங்கள் கவர்ன்மெண்டுக்குக் கட்டுப்பட்டு வேலைசெய்யும் டாக்டர்கள் அத்தேசத்திய வைத்திய விசேஷங்களையும், சரக்கு விசேஷங்களையும் தெரியவேண்டுமென்று அதற்காக "வைத்தியரத்னாகர"மொன்று சித்தஞ் செய்து, அதையிங்குள்ள வைத்திய பாடசாலைகளில் பாடஞ்சொல்லவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு வந்திருக்கிறார்கள், என்றாலும் அதுவொன்றும் சரியாகவில்லை. அப்புஸ்தகமே யிப்போது கிடைப்பது அரிதாகிவிட்டது. அதைமட்டும் கிரமமாக ஆரம்பித்து நடத்திவந்திருந்தால் இந்த நாற்பது வருஷத்திற்குள் ஒரு "மிசிரமுறை" யேற்பட்டு, இந்திய வியாதிகளுடன் போராடுவது சுலபமாகி, ஔஷதச்செலவுங் குறைந்துவந்திருக்கும். ஆனல் அம்மாதிரிப்படிப்பு எவ்விடத்திலுமாரம்பிக்கவேயில்லை. அப்புஸ்தகத்தையும், திருத்தி, விளக்கிக் கூட்டிப் புதுப்பித்தவருமில்லை. காபிகள எங்கெங்கேபோய்ச் சேர்ந்தனவோ அவ்விடத்திலேயே பூச்சிக்கும், தூசிக்கு மிரையாகித் தூங்குகின்றன.

இதுபோதாமல், இப்புத்தகத்திற் கண்டிருக்கும் இந்திய மூலிகைகள், சரக்குகள் வகையராவுக்குத் தேசியபாஷைகள் முக்கியமாயுள்ளவைகளில வேண்டியபடி ஷரத்துகளெழுதி, அவைகளிருக்குமிடம், குணபாகம் முதலியனவற்றை விளக்கியொரு அனுபந்தமும், தேசிய வைத்தியசிகாமணி ஷெரிப்மொஹிதீன் கான் பஹதூர் அவர்களைக்கொண்டு செய்வித்ததில், அதற்கும் அதோகதியாகி விட்டது.

என்றாலும மேற்குறித்தபடிச் சர்க்காருக்கும் சிரத்தை யிப்போது அதிகரித்து, ஜனங்களுக்கும் இவ்விஷயங்களில் சிரத்தை யதிகரித்துவருவதால், இனி யிக்காரியத்தை யெவ்வளவு சீக்கிரத்தி லாரம்பித்தாலும் தகும். அது சில ஜனங்களுக்குப் பிழைப்புக் கிடைப்பதுடன் தேசத்திற்கும ஒரு பெரிய நன்மைக்குக் காரணமாகும். ஆகலால் யோக்கியதை யுள்ளவரில் யாராகிலுஞ் சிலர் இதைச் சீக்கிரம் கைக்கொண்டு சிறுகவாகிலு மோர்விதமாக ஆரம்பஞ்செய்வார்களென்று நமக்கு நம்பிக்கை.

## 3. பரோபகாரம்—புருஷர்களுக்கு ஓர் கடமை

ஸ்ரீமதி சிவகாமியம்மாள்

இந்தப் பூமியில் மனிதர்களாய்ப் பிறந்தவர்களுக்கும் மற்ற ஜீவப் பிராணிகளுக்கும், ஆகாரம், நித்திரை முதலான குணங்கள் சாமான்னியமாய் இருக்கையில், மானிடராய்ப் பிறந்தவர்களுக்குப் பகுத்தறிவு என்னும் ஒரு குணம் விசேஷித்ததாக ஈசுவரனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்திற்காகப் பரம கிருபையுடன் இந்தப் பகுத்தறிவைக் கடவுள் மனிதர்களுக்கு கொடுத்தாரென்பதைத் தத்துவஞானிகள்கூடப் பூராவாக அறிந்ததில்லை. இருந்தாலும் ஒரு விசேஷித்த குணம் கொடுக்கப்பட்டிருப்பதில் இதனால் பிறருக்குத் தீங்கு செய்யாமலிருக்கவும், தன்னால் இயன்றமட்டும் ஏதோ கொஞ்சம் நன்மை செய்யவும், இந்தப் பகுத்தறிவு என்னும் குணத்தை உபயோகப்படுத்தவேண்டியதாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

“பிறருக்கு இம்சை செய்யாமலிருப்பதே முதல் தருமம்,” என்ற விதிப்படி ஒருவருக்கும் தீங்கு செய்யாமலிருப்பது நல்ல குணம்தான். ஆனால் அதைப்பார்க்கிலும் உசிதமானது தன்னால் முடிந்தவரை பிறருக்கு உபகாரம் செய்வது. நம்முடைய முன்னோர்கள் இவ்வபிப்பிராயம் கொண்டிருந்தார்களென்பது அநேகம் உதாரணங்களால் தெரியவரும். மற்ற தேசங்களைவிட அதிகமாகவே கோவில்களும், குளங்களும், சத்திரங்களும், இந்தியாவில் புராதனமாக ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் சில ராஜாக்களாலும், தனவான்களாலும், ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அநேக கருமங்கள் ஏழைகளாலும், பரதேசிகளாலும் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆகையால் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி தன் நயத்தை மட்டுமே கருதாமல், பிறருக்கும் ஒரு விதமான நன்மை செய்யவேண்டுமென்கிற எண்ணம் ஒவ்வொருவரும் உறுதியாய்க் கொள்ளவேண்டும்.

மேற்சொன்ன பகுத்தறிவு என்னும் குணம் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்கிற கடமைக்கு இருவகையோரும் கட்டுப்பட்டிருக்கிறார்கள். எல்லாத் தேசங்களிலும், விசேஷமாய் இந்தியாவிலும், ஸ்திரீகள் புருஷர்களுக்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆகையால் இந்நாட்டில் புருஷர்களுடைய இஷ்டமும், அனுமதியும், உதவியும் இன்றி ஸ்திரீகளால் யாதொரு காரியமும் செய்யமுடியாது.

முன்கூறிய கடமையைச் சரியாய் நிறைவேற்றப் புத்தியை விருத்தியாக்கவேண்டும். இப்போது ஸ்திரீகளைக் காட்டிலும் அதிகப் படிப்பிருப்பதனால்தான் புருஷர்களுக்குப் புத்தி விசாலமாக இருக்கின்றது. பெண் கல்வி அதிகமாய்ப் பரவாததினாலும், சிறு வயதிலேயே பள்ளிக்கூடம் போவதை நிறுத்திப் புருஷர் வீட்டுக்கு அவர்களை அனுப்பிவிடுவதாலும், பெண்களுக்கு விசேஷமான வித்தை அடைய இடமில்லை. தென் இந்தியாவில் இந்துக்களுக்குள் கோஷா சம்பிரதாயம் இல்லையென்பது மெய்தான். ஆனாலும் ஸ்திரீகள் பெரியவரானபின் வீட்டைவிட்டு வெளியே போய் வித்தை கற்றுக்கொள்வது சுலபமான காரியமல்ல. ஆகையால் இக்காலத்தில் ஸ்திரீகளுக்கு வித்தைகள் கற்பிக்கவேண்டியது அவரவர்கள் புருஷர்களைப் பொறுத்ததாக இருக்கிறது. என்னவிதமாய் ஸ்திரீகளுக்கு வித்தை கற்பித்துக்கொடுத்துப் புத்தியை விருத்தி பண்ணக்கூடும் என்பது படித்தறிந்த கனவான்களுக்குத் தெரியாததன்று. ஆனால் இந்த விஷயமாய் எனக்குத் தெரிந்தமட்டும் பெண்பாலர்களில் ஒருத்தியாகிய என்னுடைய அபிப்பிராயத்தைச் சுருக்கமாக எழுதுகிறேன்.

ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிப்பது அவசியமென்றுகூட நினையாத பரீட்சைகள் தேறின உன்னத பதவியிலுள்ள அநேகம் கனவான்களிருக்கிறார்கள். அவர்களை யுத்தேசித்து இந்த வியாசம் எழுதவில்லை.

ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியம் என்று மதிக்கும் கனவான்கள் ஏழைகளானாலும் சரி, தனவான்களானாலும் சரி, தங்களுடைய சௌகரியத்திற்கும், இஷ்டத்திற்கும், பொருந்தின வித்தையைக் கற்றுக்கொடுக்க அநேகம் வழிகள் உண்டு.

படித்த கனவான்கள் அவரவர்களுடைய ஜீவனத்தொழிலைச் செய்த காலம்போக மற்ற காலங்களைப் பலவிதமாய்க் கழிக்கிறார்கள். சிலர் இராப்பகலாய்ச் சீட்டாடுகிறார்கள். வேறு சிலர் கிளப்புக்குப்போய் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் சத்விஷயமாகவும் பேசுவார்கள். வேறு சிலர் இரவில் வெகு நேரம்வரையில் சதுரங்கம் ஆடுவார்கள். சிலர் தாங்களாகவே நாவல் படித்துக்கொண்டிருப்பார்கள். இவைகளை நல்லது, கெட்டது என்று நான் சொல்ல வரவில்லை. இவ்வளவு நேரங்களில் ஒருமணி நேரமாவது கல்வி கற்பிக்கும் விஷயமாய் அவரவர்கள் சௌகரியத்திற்கேற்றபடி, வீட்டில் செலவழிக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம். இந்த ஒருமணி நேரமும், எழுதவும், படிக்கவும் மாத்திரம் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதில்லை. உலக விவகாரங்களைப் பற்றியாவது, வேறு நல்ல விஷயங்களைப் பற்றியாவது விவரித்துப் பேசியும், சம்பாஷித்தும், ஸ்திரீகளுடைய புத்தியை விருத்தியாக்கலாம். எந்தெந்த விஷயங்களைக் குறித்து ஸ்திரீகளுடன் சம்பாஷணைசெய்து கற்றுக்கொடுக்கலாமென்று புருஷர்களுக்குத் தெரிந்த விஷயமே. ஆபீசு விஷயங்களில் மாத்திரம் புருஷர்கள் பெரும்பாலும் மணிக்கணக்கின்படி நடந்து கொள்ளுகிறார்களே ஒழிய, மற்றைய, அதிலும் சொந்த, விஷயங்களில் இதைச் சற்றும் கவனிக்கிறதில்லை. இவ்விஷயத்தில் 7½ அல்லது 8 என்று குறித்த மணிக்கு எந்த வேலையிருந்தாலும் கட்டாயம் வீட்டுக்குத் திரும்பி வந்து விடுகிற கலியாணம் பண்ணிக்கொண்ட ஐரோப்பியனுடைய வழக்கத்தை இந்திய புருஷர்களும் அனுசரித்தால நல்லது. அப்படிச் சரியாய்க் குறித்தகாலத்தில் தினசரி வீட்டுக்கு வந்தால் தான் வீட்டிலும் கற்றுக்கொடுக்கச் சாவகாசம் ஏற்படும். கற்றுக்கொள்ளுகிறவர்களும் பயபக்தியுடன் படிப்பார்கள்.

சில ஸ்திரீகளுக்குப் படிக்கவும் கற்றுக்கொள்ளவும் இஷ்டமிருக்கிறதில்லையென்று புருஷர்களே சொல்லக் கேட்டிருக்கிறேன். எவ்வளவோ பெரிய காரியங்களைச் செய்யவும், சமயோசிதமாய்ப் பேசியும், நடந்தும், அதிக கஷ்டமான காரியங்களை நிர்வகிக்கவுங் கூடிய புத்திசாலிகளான படித்த புமான்களுக்குக் கபடற்ற புத்தியுடைய ஸ்திரீகளைத் திருத்தி, அவர்களுக்குத் தகுந்தபடி ஏதாவது ஒருவிதமாய் அவர்கள் கற்கும்படி செய்வது ஒரு பெரிய காரியமல்லவென்று நினைக்கிறேன். இவ்விதம் சொல்லுவதால் தாங்கள் சிரமமெடுத்துக்கொள்ள வேண்டிவரும் என்பதை உத்தேசித்துச் சுயநலம் கருதி ஸ்திரீகள்மேல் பழி சுமத்துவதாகத் தோன்றுகிறது. ஜனை மிஷன் உபாத்திச்சியைப் படிப்புச் சொல்லிக்கொடுக்க அமர்த்துவதினால் அதிக பயனில்லை, ஒரு மாதம் உபாத்திச்சியிடம் கற்றுக்கொள்வதைக்காட்டிலும், ஒருமணி நேரம் சகோதரனிடமாவது, புருஷனிடமாவது, கற்றுக்கொள்ளுதல் ஸ்திரீகளுக்கு எவ்வளவோ அதிக நன்மையைக் கொடுக்கும். பெண்களுக்கு எழுதப் படிக்கமாத்திரம் தெரிந்தால் போதாது. புத்திவிசாலமாக வேண்டும். அப்பொழுதுதான் பரோபகாரசிந்தை யுண்டாகும். வேறு சாதியாரைக் கேவலமாய் எண்ணமாட்டோம். பிராம்மண வகுப்பைச் சேர்ந்த புருஷர்கள் ஆபீசுகளிலும், சபைகளிலும் தங்கள் வீடுகளிலுங்கூட மற்ற வகுப்பினரைத் தாழ்ந்த ஜாதியாராக மதித்து

நடந்துகொள்ளுகிறார்களா? ஈசுவர சிருஷ்டியில் உயர்வும், தாழ்வும், பிறப்பினால் மட்டுமேயில்லை என்ற ஞானம் படிப்பினால்தான் உண்டாகிறது.

வீட்டு வேலைகளும், மற்ற கவலைகளும், ஸ்திரீகளுக்கு அதிகமாயிருப்பதால், அவர்களால் கற்றுக்கொள்ள முடியாதென்றும், கற்றுக்கொடுத்தும் பிரயோஜனமில்லையென்றும், சிலர் சொல்லுவார்கள். தள்ளாத மாமனார் மாமியார், சட்டை சவலைக் குழந்தைகள், இவ்வளவு பேர்களுடைய சௌகரியங்களையும் கவனித்து வேலைக்காரி யில்லாமல் வீட்டு வேலையைச் சீராக நிர்வகித்துக்கொண்டு தினசரி இரண்டு மணி நேரமாவது கற்றுக்கொண்ட மாதர்கள் அனேகரை எனக்குத் தெரியும். இஷ்டம் மாத்திர மிருந்தால் அதைச் சாதிக்கும் வழி தன்னால் ஏற்படும். வேண்டினால் வேரிலும் காய்க்கும், என்பது வெகு நாளைய பழமொழி.

நல்லவித்தையினால் புத்திவிசாலமாகிற தென்பதும், அந்தப் புத்திவிசாலத்தினால் பரோபகாரசிந்தை உண்டாகி நமது தேசத்திலும், இதரதேசங்களிலும், பாடுபட்டு நன்மை செய்தும், செய்துகொண்டு மிருக்கிற ஸ்திரீ ரத்னங்களுடைய சரிதங்களைக் குறித்து பத்திராதிபர்களுடைய அனுமதி இருந்தால் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

---

'பிரிட்டிஷ் ராசசியத்தில் இந்தியாவுக்குரிய பதவி' என்னும் விஷயத்தை விளக்கி முன் ராஜப்பிரதிநிதியாயிருந்த கர்ஜன் பட்டவர்த்தனர் சென்றமாசம் ஒரு உபந்நியாசம் செய்தார். ஆனால் அதில் இதுவரை யவர் சொல்லாததாகப் புதியது ஒன்றுங்காணோம். இவர் அடிக்கடி பேசுவதற்கும், எழுதுவதற்கும் தக்ககாரணமட்டும் நமக்கு விளங்குவதில்லை.

# விநோத காண்டம்

## 1. மதுரம்—புஸ்தகம் 1.

ஸ்ரீமான் எம். ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்காரவர்கள்

காப்பு

நேரிசை வெண்பா

மதுரமது வார்கமல மானணியும் மார்க்கு
கதிலாங் கஞ்சவ சரணம்—பதியன்பார்
சித்தத்தில் வாய்மை தெரிவா ரெவரவரே
சித்த மகிழ்வாரிக் கிலதது.

### அதிகாரம் 1

“வாதாபிகணபதிம்பஜேஹம்” (ஹம்ஸத்வனி [illegible]) பாடினது எவ்வளவு நன்றாயிருந்தது! பாட்டைப்போலவே வீணை சமகம் வாசிப்பதிலும் தானம் வாசிப்பதிலும் அபார சக்தி. இராக விஸ்தாரம் செய்யும்போது சங்கதிகளும் ஒரிக்கி ஜாதிகளும் விரல்களின் நுனியிலிருந்து ஏதோ மந்திரசக்தியால் ஒழுகிக்கொண்டுபோவது போல் தோன்றவில்லையா? அவனுடைய சாரீரத்திற்கும் வீணா நாதத்திற்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா? அந்த ஹம்ஸத்தொனி ராகத்தை யிவ்வளவு சம்பிரதாயமாகப் பாடுகிறதை நானிதுவரை கேட்டதில்லை. ஸ்வரம் பாடுகிற பந்தா (வழி) அதி சிலாக்கியமானது. சில இடங்களில் உருக்கமாகப் பாடும்போது எல்லாரும் சித்திரப் பிரதிமைகள் போலிருந்துவிடவில்லையா? இவ்வளவு சாமர்த்தியம் இல்லாவிட்டால் 'வீணாந்தமலம்' என்று பேரேறி யிருப்பானா? என்று சப் ஜட்ஜி கிருஷ்ணய்யர் சொன்னார்.

“பச்சைமாமலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண், அச்சுதா அமர ரேறே” என்ற திருவாய்மொழிப் பாட்டை இராகமாலிகையாக “நாட்டையில்” ஆரம்பித்து 'ஸ்ரீ' ராகத்தில் முடித்தது எவ்வளவு மனோகரமாயிருந்தது! அதிலும் “வேண்டேன்” என்ற வார்த்தையை யுருக்கமாய்ப் பாடும்போது எல்லாரும் பக்தி ரஸத்தில் மூழ்கியானந்த பாஷ்பம் சிந்தவில்லையா? என்ன, அப்பா, இப்படிப் பட்ட பாட்டுகளின் அர்த்தம் எவ்வளவு மேன்மையாயிருக்கும்?” என்று கிருஷ்ணய்யர் பெண் மதுரம் சொன்னாள்.

சிரஸ்தாதார் ராமானுஜாசசாரியார்.—" ஏது! குழந்தைக்குச் சங்கீதத்திலும் தமிழிலும் நல்ல ஞானம்போலிருக்கிறதே. மகா அனுபவசாலிகள் கூட இப்படி ஸாராம்சங்களை யெடுத்துச் சொல்லமாட்டார்களே" என்று சொன்னார்.

கிருஷ்ணயயர்.—" இவளுக்குச் சங்கீதத்தில் அதிகப் பிரியம். இப்போது வீணையப்பியாசம் பண்ணுகிறாள். தமிழில் ஞானம் உண்டாவதற்காக, நள வெண்பா, குறள் முதலிய நூல்களும் ஸம்ஸ்கிருதத்தில் போஜ சம்புவும் வாசிக்கிறாள்.

இராமா.—" இன்றைக்குப் பாட்டுக் கச்சேரியும், விருந்தும் மிகவும் கோலாகலமாய நடத்திவிட்டீர்கள்."

கிருஷ்ண.—"என்னவோ நம்மாலான உபசாரம். இந்த ரத்தினஸாமி அய்யரவர்கள் இவ்விடம் தஞ்சாவூர்க்கு இஞ்சினீராக வந்தது முதல் நமக்கும் அவர்களுக்கும் அத்தியந்த சிநேகம். இப்போது அவர்கள் சேலம் ஜில்லாவுக்கு மாற்றிப் போகிறார்கள். அதினால்தான் விருந்தும் பாட்டுக் கச்சேரியும் நடத்தினது."

இராமா.—" வழியனுப்பு பத்திரிகை வாசித்தாரே அவர் யார்? வாசித்தது மிகவும் சமத்காரமாயிருந்தது."

கிருஷ்ண.—இவர்தான் 'இங்கிலீஷ் கோவிந்தஸாமி ராவ்' என்பவர். இங்கிலீஷ் பேசுவதிலும் எழுதுவதிலும் அதிக சமர்த்தராதலால் 'இங்கிலீஷ் கோவிந்தஸாமி ராவ்' என்று கியாதி பெற்றவர். இவர் இரத்தினஸாமி அய்யரவர்களுக்குள் ஒரு ஓவர்ஸியர். இவருக்கு இரத்தினஸாமி அய்யரவர்களிடம் அதிக அந்தரங்க விசுவாசம். மேலும் இரத்தினஸ்வாமி அய்யரவர்கள் தன் கீழ் உத்தியோகஸ்தர்களைப் பெருந்தன்மையான அபிமானத்தோடு பக்ஷமாய நடத்துவார்கள். அம்மா, மதுரம், இப்போது வாசித்த இங்கிலீஷ் பத்திரிகையில் உனக்கிரண்டொரு வார்த்தைகளுக்காவது அர்த்தம்தெரிந்ததா?"

மதுரம்.—" என்ன அப்பா அப்படி கேட்கிறீர்கள், வார்த்தைகள் மாத்திரம் அல்ல, அநேக வாக்கியங்களுக்குக்கூட அர்த்தம் தெரிந்தது. மேலும் நமமுடைய இராயரவர்கள் வாசிக்கிற மாதிரி இங்கிலீஷ் வாசிக்காதவர்களுக்கும் அர்த்தம விளங்கும்படி இருக்கிறதல்லவா?"

இராமா.—"குட்டிக்கு இங்கிலீஷிலும் நல்லஞானம் இருக்கிறது. வயதும பன்னிரண்டு இருக்குமே. கலியாணத்தைப்பற்றி என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? வரன் எங்கே பார்த்திருக்கிறது?"

கிருஷ்ண.—" வரன்களைப் பார்க்கிறதென்றால் சாமான்னியமாயில்லை. வரன்களுக்கு கிராக்கியான காலம் வந்திருக்கிறது. முற்காலத்தில் பெண்களுக்கு சோபனத்திரவியங்கொடுத்தாக கலியாணம் செய்து வந்தார்கள். தற்காலத்தில் மாப்பிள்ளைகளுக்குத் தாராளமாகப் பணம் கொடுத்துக் கலியாணம்செய்ய வேண்டியதாயிருக்கிறது. இங்கிலீஷ் வாசித்த மாப்பிள்ளையானால் இன்னும் விலை யேற்றம்தான். மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேறியிருந்தால் ரூபாய ஐந்நூறுக்குக் குறையாமலும், எப். ஏ. பரிக்ஷை தேறினால் ரூபாய் ஆயிரத்துக்குக் குறையாமலும், பி. ஏ. தேறியிருந்தால் ரூபாய் இரண்டாயிரத்துக்குக் குறையாமலும் வர சுல்கம் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. அப்படியே கொடுத்து வரனைப் பார்ப்போமென்றாலும் சரியான வரன் கிடைக்கவில்லை. ஏதாவது வாசித்தவனாக இருந்தாலோ அவலக்ஷண முள்ளவனாகவும், அதிதரித்திரனாகவும் இருக்கிறான். பார்க்கலக்ஷணமாக இருந்தால் ஆஸ்தியும் நாஸ்தி, வித்தையும பூச்சியம். செல்வாக்கான குலத்தில பிறந்த ரூபமும நாகரிகமுமுள்ள பெண்களைத் தரித்திரனும் அவலக்ஷணமுமான வரன்களுக்குக்கொடுப்பதால் பெண்களுக்கு நீடித்த மனக்கிலேசத்தைப் பெற்றோர்களே தேடிவைப்பதாக ஏற்படுகிறது. இளமையும் ரூபமும் கல்வியும் இருந்து தகுந்த சொத்தில்லாவிட்டாலும் பிரயோசனமில்லை. என்னென்றால் இந்தக்காலத்தில் பி. ஏ. பி. எல். பரிக்ஷைகள் தேறினாலும் மாசம் ரூபாய முப்பதுகூடக் கிடைக்கிறதில்லை. உயர்ந்த அந்தஸ்துள்ள வீடுகளில் பிறந்த பெண்கள் கஷ்ட ஜீவனம் செய்யும்படி நேரிடுகிறது. சொத்தும் வித்தையுமிருந்து நல்ல ரூபமில்லாவிட்டாலும் சங்கடம்தான். நல்லரூபமும் கல்வியும் நாகரிகமும் உள்ள பெண்கள் குரூபிகளான புருஷர்களிடத்தில அபிமானிகளாயிருப்பது துர்லபம். மேலும் ரூபமுள்ளவரனைக் கன்னிகையும, வித்தையிற்றேர்ந்தவரனைப் பெண்ணின் பிதாவும, ஐசுவரியமுள்ளவரனைப் பெண்ணின் தாயாரும், நல்ல குலத்தில் பிறந்த வரனைப் பெண்ணின் பந்துக்களும் விரும்புவார்கள் என்ற சாஸ்திரமிருக்கிறதல்லவா! தகுந்த வரனைப் பார்த்துவரும்படி நானும் மனுஷாளைப் பல இடங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். மதுரத்துக்கும் நல்ல அதிர்ஷ்டம் இருந்தால் தானே நல்ல வரன் கிடைப்பான்."

கிருஷ்ணய்யர் இப்படிச்சொல்லவும் மணி பதினொன்றடித்தது. தக்ஷணத்தில் கவுளி பல பலவென்று சொன்னது. அப்பொழுது இராமானுஜாசாரியார் சற்று யோசித்துவிட்டு, இந்தச் சகுனத்தைப் பார்த்தால் மதுரத்துக்குத் தகுந்தவரன் கிடைத்துக் கூடியசீக்கிரத்தில் விவாகம் நடக்கும், என்றார். அந்தச் சமயத்தில் மதுரம் வெட்கத்துடன் முகமலர்ச்சியோடு தலை குனிந்து நின்றாள்.

அந்தத் தருணத்தில் ஒரு பெரியவர் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்தார். அவருக்குவயது அறுபதுக்கு மேலிருக்கும். சிவந்த நிறமுள்ளவர். வயது அவ்வளவாகியும் அதிகத் தளர்ச்சி யெய்தியதாகக் காணப்படவில்லை. நெற்றியில் விபூதியும் காதில் குண்டலங்களும் அணிந்திருந்தார். இடையில் தீர்க்காவியேறின காஞ்சீபுரம் வேஷ்டி பஞ்சகச்சத்துடன் பிரகாசித்தது. விலையுயர்ந்த வேலைப்பாடுள்ள ஒரு சால்வையை மேல் போர்த்திருந்தார். கையில் ஒரு கடிதமும் வைத்திருந்தார். அவர் வந்தவுடனே கிருஷ்ணய்யர் "மாமா வாருங்கள்" என்றும், இராமானுஜாசாரியார் "ஓஹோ தீக்ஷிதர்வாளா, வாணும் வாணும்" என்றும், மதுரம் "தாதா வந்தீர்களா, நமஸ்காரம்" என்றும் சொல்லிஉபசரித்தார்கள். தீக்ஷிதரும் கிருஷ்ணய்யருக்கு அருகில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

கிருஷ்ணய்யர்.—"ஏது மாமா இராத்திரி இவ்வளவு நேரம்கழித்து வந்தீர்கள்? ஏதாவது விசேஷமுண்டோ? உங்கள் குமாரன் நீலகண்ட சாஸ்திரியினிடத்தில் இருந்தொன்றாவது சமாசாரம் தெரிகிறதோ? அவர் காரியங்களைச் சாதிப்பதில் சமர்த்தர் என்றல்லவா எண்ணியிருந்தேன். இவ்வளவு தாமஸப் பிரகிருதியா? என்ன போய் ஒருமாசத்திற்கு மேலாகிறது. ஒரு கடிதம்கூட வரவில்லையே. கிணற்றில் கல்போட்டால் போலிருக்கிறது. உங்களுக்காவது கடிதம் எழுதியிருக்கிறாரா?"

தீக்ஷிதர்.—"இன்றைக்குத்தான் இந்தக் கடிதம் வந்தது. மைலாப்பூரிலிருந்து எழுதியிருக்கிறான். கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களில் அவ்வளவு சிலாக்கியமான வரன் கிடைக்கவில்லையாம். பட்டணத்தில் 'உன் மைத்துனி குமாரன் சாமிநாதனைக் கண்டு பேசியதில், அவன் தன்னுடன் வாசிப்பவர்களில் ஒரு தகுந்த பையன் இருக்கிறானென்று சொன்னதாகவும், அந்தப் பையனைப்பற்றி தீர்க்கமாய் விசாரித்துத் தீர்மானித்து அடுத்த கடிதத்தில் எழுதுவதாகவும் கண்டிருக்கிறது. அனேகமாக அநுகூலமாகுமென்று தான் தோன்றுகிறது. குழந்தைக்கு மாங்கல்யஸ்தானமும் குடும்பஸ்தானமும் இருக்கிற பலத்துக்கு சர்வசிலாக்கியமான வரன் கிடைப்பதில் சந்தேகமில்லை. கோசாரப் பிரகாரம் பிருகஸ்பதியும் நல்ல ஸ்தானத்துக்கு வந்திருக்கிறார். எல்லாத்துக்கும் அம்பிகை தருமஸம்வர்த்தனி கிருபையிருக்கும்போது நமக்கென்ன விசாரம்?"

கிருஷ்ணய்யர்.—"மாமா ஆசீர்வாத பலத்தால் மதுரத்துக்கு நல்ல அதிர்ஷ்டம் வரவேணும். சுபஸ்ய சீக்கிரம், என்று நாரில பூத்தொடுத்த மாதிரி வந்தால் தானே மனஸுக்கு உற்சாகமாயிருக்கிறது. இனிமேலாவது ஜாக்கிரதையாயிருந்து காரியம் ஸாதித்துக்கொண்டு வரும்படி உங்கள் குமாரனுக்கு எழுதுங்கள்."

தீக்ஷிதர்.—"அப்படியே எழுதுகிறேன். நீலகண்டனுக்குச் சொல்லித் தெரியவேண்டாம். இந்த விவாகவிஷயமான காரியங்களைச் சாதிப்பதில் அவனுடைய சாமர்த்தியம் அபரிமிதம். கூடிய சீக்கிரத்தில் சிலாக்கியமான வரனைத் தீர்மானித்துக்கொண்டே வந்து சேர்வன். எல்லாருடைய மனசுக்கும் திருப்திகரமாகக் குழந்தைக்குக் கலியாணம் நடக்கும்."

இராமானுஜாசாரியார் கிருஷ்ணய்யரைப் பார்த்து, "தீக்ஷிதா வாக்குப்பழுது போகாது. மதுரத்தின கலியாணம் கோலாகலமாய் நடக்கும். இன்னொரு முறை வீணைகமலத்தின கச்சேரியும், மற்றும் சதிர்முதலிய சகல வைபவங்களும் நமக்கெல்லாம் கிடைக்கும். தடையே இல்லை, வரனைத்தீர்மானித்து வருவதற்கு நீலகண்ட சாஸ்திரிகள் ஏற்பட்டிருக்கும்போது சந்தேகமென்ன;" என்று சொல்லிவிட்டு மதுரத்தைப்பார்த்து "மதுரம், என்ன ஒருநாளாவது உன் வீணைகேட்க வேண்டாமா?" என்று சொல்லிவிட்டுத் தன் வண்டியில் ஏறிக்கொண்டு போய்விட்டார்.

தீக்ஷிதரும் அவ்விடத்திலுள்ள ஒருகட்டிலின்மேல் ரத்தின கம்பளம் விரித்துச் சயனித்துக்கொண்டார். மதுரம் அவ்விடத்திலிருந்த ஒரு சோபாவில் படுத்துக்கொண்டு நித்திரை போய்விட்டாள். கிருஷ்ணய்யர் ஏதோ ஒரு ஆழ்ந்த ஆலோசனையுடன் உட்சென்றார். பரிசாரகரும், வேலைக்காரர்களும் அவ்விடத்திலிருந்த வெள்ளிப்பாத்திரங்கள், ரத்தின கம்பளங்கள், வஸ்தரங்கள் முதலிய விலையுயர்ந்த சாமான்களை எடுத்து ஒழுங்காய்ப் பத்திரப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

(இன்னும் வரும்.)

# வாமதேவன்

## அத்தியாயம் 2

78-ம் பக்கத்தின் தொடர்ச்சி

மறுநாட் காலையில் இரண்டு சவாரி வண்டிகள் தயார்செய்து சுமார் பத்துமணிக்குள் போஜனம் முடித்துப் புறப்பட்டு மாலை ஐந்து மணிக்கெல்லாம் குன்னத்தூர் சென்று சேர்ந்தனர். அங்குச் சம்பந்தி வேதாசலய்யர் தக்க அந்தஸ்தும் செல்வாக்குமுடைய தனிகராதலால், அதற்கேற்றபடிக்கான வுபசார வரிசைகளோடு வரவேற்று, இவர்களுக்கென்றமைத்திருந்த தனி விடுதிக்கிட்டுச் சென்றமர்த்தி, அன்றுமுதல் ஐந்தாறு தினங்களாக வெகுகுதூகலமாய் விருந்துகள் முதலியன நடத்திவந்தார்.

ஆயினும் முன் வேதாசலய்யர் தம்மகள் மங்களாம்பிகையை வாமதேவனுக்குக் கன்னிகாதானஞ்செய்தகாலத்தில் வாசுதேவய்யரவர்கள் கோண்டூர் ஜில்லா ஜட்ஜி புதவியோகத்திலிருந்ததுபோ லிப்பொழுது அய்யரவர்களின் மெலிந்த நிலைமையையும் தம் மருமகன் வாமதேவன் வணிஜநகரில் கோர்ட்டு குமஸ்தாவாயப் பதினைந்துரூபாய்ச் சம்பளத்திலமர்ந்ததையும் நினைத்து, அது முதலாகச் சம்பந்திகளிடமிருந்த கௌரவ புத்திகுறைந்து ஒருமாதிரிப்போலி மரியாதை காட்டிவந்தனர். இந்தக் குறித்த சந்தர்ப்பத்தில அவை பல்வேறு வகைத்தாய் வெளிப்படையாயத் தோன்றியும், நமது வாசுதேவய்யரவர்கள், இதுவே யுலகவியல்பென நன்கறிந்தவராதலால், தம் சிறுமையை யோர்ந்து அடங்கியே ஒழுகி வருகின்றனர்.

சாதாரணமாய்ப் புருஷர்களிம்மாதிரிக்கான விஷயங்களை யததனை பொருட்படுத்தாதவராயிருக்கப், பெண்டிரோ அணுவையும மேருவாக்கிக் குறைகூறுமியல்பினராவர். ஆகவே நமது வாசுதேவய்யரின் மனைவியும் இவருடன் வந்திருந்த மற்றப் பந்துக்களும அப்போதப்போது வேதாசலய்யர் வீட்டார் தம்மை விருந்துக்கும் மற்று மழைக்குஞ் சமயங்களிலெல்லாம, அசட்டையாய் நடத்துவதாகப் பன்முறை வெளியிட்டுச், சம்பந்திகளுக்குள் இந்த ஐந்தாறு நாட்களில் வெகுவாக மனவூடல்கள் தொடங்கி விட்டிருந்தன.

இப்படியாக ஒருவாறு இந்தப் பண்டிகைகள் முடிவுற்று, வாசுதேவய்யா தம் பந்துக்களோடு தென் பொதிகாபுரத்துக்குப் புறப்படவெண்ணிச் சம்பந்தி அய்யர் வீட்டிற்சென்று தாம்பூலமேற்று விடைபெற்றபோது, சம்பந்தி அய்யரிடம் மெதுவாகப் பின்வருமாறுரைத்தனர்:—"நான் கிராமஞ் சென்று குழந்தை வாமதேவனுக்குக் கடிதமெழுதி விடுமுறை பெறச் செய்து, அவன் விடை கிடைத்தவுடன் சுபமாக வேறோர் சாந்திமுகூர்த்தம் நிச்சயித்துக் கூடிய சீக்கிரத்தில் தமக்கும் வரைந்தனுப்புகிறேன். தமது பந்துக்களை யெல்லாமழைத்துவந்து முகூர்த்தத்தைச் சிறப்பாய் நடத்தித் தரவேண்டும். எப்படியாவது இந்த முகூர்த்தம் நிறைவேறினால் இல்லறவாழ்க்கை யின்புற நடத்துமியல்பினளான குழந்தை மங்களாம்பிகை மேன்மையாய்க் குடித்தனப்பாங்கை வகித்து நடத்த, வாமதேவனிப்பொழுது தானே சமையற் செய்துண்ணுங் கஷ்டமகலுவதோடு அவனுக்கிதுவரையிருக்குந் துன்பங்களெல்லாம் நீங்குவதற்கோர் முற்குறியாகும்" எனச்சொல்லி யெழுந்தனர்.

சென்ற நாலைந்து நாட்களாக வேதாசலய்யர் வீட்டார் அங்கு வந்திருந்த சம்பந்திகளைச் சரிவர நடத்தாததுபற்றி அவர் முறையிட்ட செய்திகளை அடிக்கடி வேதாசலய்யரின் மனைவியார் தம் கணவரிடம் ஒன்றுக்குப் பத்தாயேற்றி வந்தவைகளை யெல்லாம் மனதில் நினைத்து, முகஞ்சிவக்க, உதடுகள் துடிக்கக், கண்கள் நின்றவிடமில்லாது விழிபிறள, உக்கிராவேசத்தோடு, "நன்றாய்ச்சொன்னீர், உமது மகன ஊரூராய்த் தேசம்விட்டு நீங்கிக் கூலிவேலைசெய்யப் போகுமிடங்களுக்கெல்லாம் அவனுக்குச் சமையல்செய்துபோடவென்றுதானோ என் குழந்தையை அந்தக் குபேரசம்பத்துப் பயலுடைய கழுத்திற்கட்டினேன். போதாக்குறைக்கு உமது மகன் நாராயணனும் இப்போது அங்கேயே எழுத்துக் கூலியாக வேலைசெய்கிறானாம். சிறுவன் சமையல் செய்து மேனி வாடிவிட்டால் பெண்கொடுப்பவரில்லையாரேயென்று தடிக்குழந்தையே சோறாக்கிப் படைத்து மற்றவனைச் சுகவாசியாய் வைத்திருக்கிறானாம். வெகு நேர்த்தி இனி யென் குழந்தை மங்களாம்பிகை அங்குச்சென்றால், தம்பதிகளிருவருஞ் சேர்ந்து அந்த இத்தனைகொண்ட பயலுக்குபகாரஞ் செய்யவேண்டாமா? உமக்குத்தியோகம்போய், ஆஸ்திகள்போய, வயதுமுதிர்ந்து, வயிற்றுக்குப்போதுமான சோற்றுக்கு வழியின்றி யொடுங்கிக்கிடக்கும், மமதைமாத்திரம் உம்மை விட்டபாடில்லையே. அப்படிக்கான இழிவான வேலைசெய்து நீமது வீட்டிலுள்ளவர்களுக்குப் புழுக்கைச்சியாயிருக்கவா என் குழந்தையைப் பாழுங்கிணற்றில் றள்ளினதுபோல உங்கள் வீட்டிற் கொண்டுவந்து கொடுத்தேனே?"

(இன்னும் வரும்.)

# புஸ்தக விமர்சனம்

## ஸ்ரீவேங்கடாசலயாத்திரை

வேலாசபல்லி, செங்கய்யா பி. வி. அவர்களால் எழுதப்பட்டது. விலை அணா-8.

க்ஷேத்திர யாத்திரை செய்பவர்களுக்கு நமது நாட்டில் நானாவகை புஸ்தக மூலமாய்ச் சகாயம் கிடையாததைப்பற்றியும், திருப்பதி க்ஷேத்திரத்திற்கு யாத்திரை போகிறவர்கள் லக்ஷக்கணக்காயிருப்பதாலும், மேனாட்டுச் சம்பிரதாயத்தை யனுசரித்து, இச்சிறு புஸ்தகம் மார்க்கதரிசியாக எழுதப்பட்டிருக்கிறது. இது நல்ல தருணம்தான். மெக்காவுக்குப் போகிறவர்களுக்கு உபகாரமாக ஒரு சிறு புஸ்தகம் பம்பாயில் இலவசமாய்க் கிடைப்பதாகக் கேள்வி. க்ஷேத்திர யாத்திரை யெப்போதுமிருந்தே தீருமாதலால், இம்மாதிரி மார்க்கதரிசிகளுக்கு உபயோகம் அதிகமேயாகு மென்றெண்ண இடமுண்டு. ஆனால் இப்புஸ்தகத்தில் மேனாட்டு வழக்கப்படி புராணக் கதை முற்றும் கைவிடாது, முக்கியமாயுள்ள ஐதிகங்களை சுருக்கிக்காட்டியிருப்பது ஒரு விசேஷம். என்றாலும், 54-வது பக்கத்தில் காணும் கதைபோன்றவைகளை யொழித்து, ஸ்தலத்தில் விஷசுரம் முதலிய உபாதிகள் உண்டாகும் காலம், இடம், முதலியவைகளையுங் குறிப்பிட்டு, வேண்டியமட்டில் நல்ல படங்களையுங் கொண்டு விளக்குவது சாத்தியமானால், விலை சற்று அதிகமானாலும், வெகு ஜனங்களுக்கு உபகாரமாகுமென்பது நமதபிப்பிராயம். இந்த லக்ஷணங்கள், நவீன நாகரிகமும், கல்வியும் முற்றிய நமது நண்பருக்கும் விதிதமா யிருக்குமென்று நம்புகிறோம்.

2. விவேகபோதினி.—தொ-2 ப-4. ஸௌம்ய வருஷம் அற்பிசி. ஜெனரல் சப்ளை கம்பெனி, மைலாப்பூர்.

இம்மாதாந்தர பத்திரிகையை நமது பார்வைக்காக அனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். 'வித்யா விஹாரிணி' வாரமுறையில் நாமசொல்லியபடி கடிதம், அச்சு முதலிய லக்ஷணங்கள் நன்குவாய்ந்த சஞ்சிகைகள் நூற்றுக் கணக்காகவிருந்து, செழித்துப், படிப்போர், இயற்றுவோர், இருதிறத்தாருக்கும் நன்மை பயக்கச்செய்வதற்கு இது நல்ல தருணமாதலால், இவ்விஷயத்தில் உழைப்பவருக்குத் தக்கபடி அபிமானிகள் சம்மானம் செய்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். விஷயங்களெல்லாம் நலமுற்றவைகள். வாசகமும் ருசி கூடியேயிருக்கிறது. சந்தா வெகு சொற்பம். காகிதின் அருமையை யுத்தேசித்து இன்னும் கூடவேண்டும். ஆதலால் 'விவேகபோதினி' சிரஞ்சீவியாக வாழக்கடவதாக.

3. ஆரியமத உபாக்கியானம்.—எ. கிருஷ்ண சுவாமி அய்யரவர்கள், ஜெனரல் சப்ளை கம்பெனி, மைலாப்பூர். விலை அணா 2.

இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்கு அனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். சாமான்னிய நீதிகளை விளக்குவதற்கு ஏற்கமைந்த கதைகளைப் புராணங்கள், இதிகாசங்கள், முதலிய நமது பிராசீன கிரந்தங்களிலிருந்து சேர்த்து, வெகு சுருக்கமாகச் சொல்லி, ஒவ்வொரு கதையிலுங்காணும் 'நீதியை' கடைசியில் சிறப்பெழுத்தில் காட்டியிருப்பது, நல்ல யோசனைதான். 'உண்மை'யின் பெருமை வேண்டுமானால், சாமான்னியமாய் நமது குழந்தைகள் 'வாஷிங்டன்' கதையைத்தான் 'ரெடி'யாய்ச் சொல்லுவார்கள். அவரைத் திரஸ்கரித்துப் பேசக் காரணமில்லை. ஆயினும், நமது நாட்டு மூதாதோர் சொல்லையும், சரிதையையும் தெரிந்துகொண்டு அவர்கள் விஷயத்தில் பெருமைப் படுவது நமக்கு முதல் தருமமாதலால், குழந்தைகளுக்கு விளங்கும்படி எழுதிய இச்சிறுபுஸ்தகத்தையவர்கள் உபயோகித்துப் பயனடைவார்களென்று நம்புகிறோம். விலை வெகு சரசம்.

---

'பரகாம்பூரில்' பலஜாதியாரும் சேர்ந்து ஒரே பந்தியில் விருந்துண்டதாகக் கேட்டோம். பிறகு அதில் சம்பந்தப்பட்ட 'உயர்குலத்தோரை' அவருடன் சேர்ந்த மற்ற சனாதன தருமிஷ்டர்கள் புறம்பாகப் பிரயத்தனப் படுவதாகவும் கேட்டு விசனிக்கிறோம். மொத்தத்தில் கிருஷ்டி தோஷமென்பது தென்னிந்தியாவில் தான் இவ்வளவு பிரபலித்திருப்பது. பந்திபோஜன விஷயத்தில் தகரார் பிராம்மணருக்குள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மட்டுமே ஒரு தனி விசேஷத்திருக்கிறது. இந்தத் துராசாரங்கள் காலக்கிரமத்தில் போய்விடுவது நிச்சயமென்றாலும், நாம் ஒன்றும் செய்யாமலிருப்பது அழகன்று. அப்படிச் செய்வதற்குத் தைரியமற்றவர்கள் மற்றவர்களுக்கு இடைஞ்சலாவது இராமல் தயவுசெய்வது விவேகிகளிடத்தில் முதன் முதற் காணவேண்டிய தருமமென்பதை யவர்கள் அறிவார்களாக.

# சமாசாரக் குறிப்புகள்

மைசூர், திருவாங்கூர், முதலிய ராசியங்களில் 'தேவஸ்வம்' என்றால், கோவில், மடம், முதலியவைகளுக்குரிய சொத்துக்களைப் பரிபாலித்து வரும் 'தருமகர்த்தர்கள்' அவைகளை 'தங்களுடைமை போலவே பாவித்து' வந்ததினிமித்தம் சென்ற எட்டு வருஷத்திற்குள் அந்தந்த சர்க்கார் அவைகளை பிரித்து பிரிதாகச் சுவாதீனஞ் செய்துகொண்டு, வரவு செலவுக் கணக்கு முதலிய திருத்தங்களைச் செய்து வருகிறார்கள். மைசூரில் சென்ற வருஷத்தில் தேவதாசிகளை யொருதகராறு மில்லாமல் போகும்படி செய்து விட்டார்கள். பிரிட்டிஷ்ராஜாங்கத்திலோ, இம்மாதிரி உபத்திரவங்களைப் போக்கடிக்க வேண்டுமென்று நமது 'நாயகர்கள்' கேட்டபோதெல்லாம், 1858-ம் ஹூத்திய மஹாராசாஸனத்திற்கு அது விரோதமென்று சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனாலும், கனம், சர். எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜட்ஜியாயிருந்த காலத்தில் திருப்பதிக் கோயிலுக்கும், அதற்கு வரும் அபாரமான வரும்படிக்கும், ஓர் வழி காட்டிப் புண்ணியங் கட்டிக்கொண்டார். அதை யனுசரித்து ராமேசுவர 'தேவஸ்வத்திற்கும்' இப்பொழுது வழிபிறந்திருப்பதாகக்கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். இப்படியே இன்னும் சில பெரிய தேவாலயங்களுக்கு நல்லகாலம் பிறந்தால், 'நியாயமும்' காலக்கிரமத்தில் பிறக்கும் என்பதில் தடையில்லை.

---

"கள்ளன் களவிலும், பாம்பாட்டி பாம்பிலும்," என்பது வெகு ஜனோபவசனம். அதை ராஜாங்க விஷயத்திலும் உபயோகிக்கலாம் போலிருக்கிறது. 'கொரியா'வில ஜப்பானியா தங்கள் அதிகாரத்தைப் பிரதிஷ்டை செய்துகொண்டு, ராசியத்தைச் சீர்திருத்த முயன்றதில், சென்ற 30 வருஷங்களுக்கு அதிகமாகவே ஜப்பான் துரைத்தன முதலியவற்றைச் சீர்திருத்திவந்து, அப்பெரும் காரியத்தில் 'முதலி'யாயிருந்த 'பிரின்ஸ் ஐடோ' அதற்குப்பலியானார். ஆனால் 'கொரியர்களுக்கு' இதனால் ஒரு நன்மையும் கிடைக்கப் போகிறதில்லை. 'ஐடோ'வுக்கு ஜீவதசையிலிருந்ததைவிட இனிப் பிராபல்லிய மதிகமாகி, அவருடைய அபீஷ்டம் காலக்கிரமத்தில் நிறைவேறுவது நிஜம்.

'வி-மே' யென்னும் கிராம முன்சீபு கோர்ட்டுகளைப்பற்றி மதிராச கவர்ன்மெண்டு தீர்மானம் வெளியாயிருக்கிறது. அனேகம கலெக்டர்கள் இந்தக் கோர்ட்டுகளைக் குறித்து நல்ல ரிபோர்ட்டுகள் செய்யவில்லை. ஆனால் அதற்குக் காரணமாகத் திவான் பஹதூர் ஸ்ரீமான்-ரகுநாதராயரவர்கள் சொல்லுவதே நமக்கும் சம்மதம். மணியகாரர்கள 10-அல்லது 12-ரூபாய் மாதச்சம்பளம் வாங்கிக்கொண்டு, தாலூகாச் சேவகன்முதல் சகலருக்கும் நடுங்கிப் பிழைக்கவேண்டியிருந்தால், அவர்களுக்குக் கோர்ட்டு செய்யும் பெருமையும், அந்தக் கோர்ட்டுக்கு நியாயமாயிருக்கவேண்டிய மகிமையும் வெகுவாய்க் குறைந்துதான் வரும்.

---

'எட்டிக்கொட்டை'யவர்கள் சென்றமாதத்திலும், நடப்பு மாதத்திலும், எழுதியதை ஓர் அம்சத்தில் ஆமோதித்துக் கனம், சர். எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள் சமீப காலத்தில பகிரங்கமாய்ப் பேசியதற்காக மெத்தவும் சந்தோஷம். வியாதிகள் அனேகமாய்ச் 'சுதேசி'யாதலால், ஔஷதங்களும் அப்படியேயிருக்கவேண்டுமென்பதில், நமக்கு ஆக்கிரகம் வெகு அதிகம். 'கைகண்ட' ஔஷதங்களை விடாமல், காலதேச வர்த்தமானங்களை யனுசரித்துத் திருத்தியும், புதுப்பித்தும், அவற்றை யனுசரித்து நூதன முறைகளைத் தேடியும் வருவதுதான் விவேகிகளுக்கு லக்ஷணமென்பது இனி நன்குவிளங்கும்.

---

இவ்வாறு நமது ராஜப்பிரதிநிதியும், செக்ரெட்டரியவர்களும் ஜனங்களுக்குச் சுகமுண்டாகவேண்டிப் பலவிதமாகவுழைத்து வருகையில, இங்கிலாந்தில் பென்ஷன்பெற்றுச் சுகஜீவனம் செய்யும் மெஜசிவில் உத்தியோகஸ்தரிலொருவர், இத்தேசத்தவரைக் குரங்குகளுக்கும், குழந்தைகளுக்கும் உருவகப்படுத்திப் பேசியதாகக் கேட்டு விசனிக்கிறோம். 'நீசஉவமை' காவியங்களில் சில சந்தர்ப்பங்களில் ஏற்கத்தக்கது. 'இல்லஞ்சிவாழும் எருது', என்பது போன்றவையாம். ஆனால், ராஜாங்கத்தில் வெகுகாலம் பழகிய இவர் இவ்வாறு சமயந்தப்பிப் பேசியது விசித்திரம். அதற்கு வெகுமதியும் ஏதோகொஞ்சம் கிடைத்திருப்பதால், இனிமேலும், இவரைப்போன்றவரும், பேசுவதிலும், எழுதுவதிலும் கொஞ்சம் லௌகீகத்தையும் கவனிப்பாராக.

## Elements of Civics for India.

With 50 half-tone illustrations by T. S. Subramania Aiyer, M.A., L.T.,

**Price Re. 1.**

**Dewan Bahadur R. Ragunatha Rao. Avl, C S I. writes.**

I am convinced that this is a very useful work and if studied will make the coming generation more useful to our country. It shows how secure the people of India are now and how they might be benefited if they would co-operate with the British Government. It is necessary that they should know that the British Government is the best of all Government and that they enjoy more liberty than many people whether in the East or West. This fact is prominently brought forward in this book.

**GANESH & Co, PUBLISHERS, MADRAS**

## துரைத்தன விளக்கம்

1st கிரேட், 2nd கிரேட்,

பிரைமரி பரிக்ஷைகளுக்கு உபயோகப்படும்,

இந்தப் புஸ்தகம் துரைத்தனத்தாரும் அவரது கடமைகளும், நம்முடைய கடமைகளும், உரிமைகளும், துரைத்தனமும் அதன் அமைப்பும, இத்தேசத்தின் சுருக்கமான வரலாறுகளையும்பற்றி எளிய இனிய தமிழ் நடையில் அழகான 50 சித்திரப்படங்களுடன் காலிகோவைண்டில் பிரஸிடென்ஸி காலேஜ் சரித்திர உதவி போதகராயிருக்கிற டி. எஸ். சுப்பிரமணிய அய்யர் எம். ஏ. எல். டி. அவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொரு இந்தியரும் அவசியம் படிக்கவேண்டும்.

இதன் விலை ரூபா 1.

கணேஷ் கம்பெனி, சென்னை.

---

ம-ள-ள-ஸ்ரீ ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்களால்
இயற்றப்பட்ட புதிய நவீன நாடகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பேயல்ல பெண்மணியே .... ... ... | 0 | 8 | 0 |
| 2. | காதலர் கண்கள் .... ... ... ... | 0 | 12 | 0 |

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற புஸ்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

கணேஷ் கம்பெனி, தம்புசெட்டி தெரு, சென்னை.

---

## UNATED INDIA

**WITH WHICH IS INCORPORATED**

## The Native States.

*PUBLISHED EVERY SATURDAY.*

**Rates of Subscription**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| For 12 Months ... ... | Rs | 6 | 0 | 0 | Inclusive of Postage. |
| " 6 " ... ... | " | 4 | 0 | 0 | |
| " 3 " ... ... | " | 2 | 0 | 0 | |
| Single copy ... ... | " | 0 | 4 | 0 | |

**For Foreign countries 10 s. per annum.**

All literary contributions, business letters and remittances should be addressed to 29, Sembu Doss Street, Madras, E.

## விஜயா

சித்திரத்துடன் கூடிய தமிழ் தினசரிப் பத்திரிகை

ஹிந்து தர்மம், பாரத சரித்திரம், சாஸ்திரம், தொழில், கலைகள், சிற்பம், தற்காலநிலை, வருங்காலநிலை, உலக வர்த்தமானங்கள், அவற்றால் பாரதநாட்டிற்கு விளையக்கூடிய பலாபலன்கள் இவையெல்லாம் இப்பத்திரிகையில் நாள்தோறும விவகரிக்கப்படும் விஷயங்களாகும. உயர்வு, ஸ்வதந்திரம் என்பவற்றை நோக்கங்களாகக்கொண்டு ராஜாங்கச் சட்டவரம்பு பிறழாமல் இப்பத்திரிகை நடத்தப்படுகிறது.

சந்தா

| | | | |
|---|---|---|---|
| வருஷம் 1-க்கு ... ... | 10 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு ... ... | 5 | 0 | 0 |
| மூன்று மாதத்திற்கு... ... | 2 | 12 | 0 |
| மாதம் 1-க்கு ... .... | 1 | 0 | 0 |


மானேஜர்,

'விஜயா' பத்திரிகாசாலை, புதுவை.

# அபலா சஞ்சீவினி

## ஸ்திரீ ஜாதியின் நோய்களை கண்டிக்கும் அமிர்தம்

ஸ்திரீ ஜாதியின் மலடு, மார் படபடப்பு, தொண்டைக் கட்டு, வயிற்று நோய் முதலியவை சௌக்யப் படும்.




ஸ்திரீ ஜாதியின் சகல நோயையும்கண்டிக்கும் சஞ்சீவி.

பாட்டில் விலை
**1-8-0.**

## பிளேக் நிவாரணி

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஹைமாதி பானகம் | 6 அவுன்ஸ் | 1 | 0 | 0 | அடதௌதகிருதம் | 1 | அவுன்ஸ் | 0 | 12 | 0 |
| ஷை | 3 ,, | 0 | 10 | 0 | ஷை | ½ | ,, | 0 | 8 | 0 |

இன்னும் எல்லாவித சாஸ்திரீகமான ஆயுர்வேத அவுஷதங்களும் எப்போதும்கிடைக்கும். காட்லாக்கு எந்தபாஷையிலும் வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

ஸ்ரீமான். பண்டிதர் கோபாலாசாரியார் அவர்கள்,
ஆயுர்வேத அவுஷதசாலை,
ஆச்சாரப்பன் தெரு, சென்னை.

Printed by G. C. Loganadham Bros., at the Guardian Press, Mount Road, Madras, S. C. and Published by ... ambu Chetty Street, Madras.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY